10.9G 10.9G


இந்திரா செளந்தர்ராஜன்
Indira Soundarajan
நிழலாய் வருவேன்
Nizhalai Varuven

# நிழலாய் வருவேன்

## 1

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''குப்தா ஷெரீப் ஆகப் போகிறானாம். கொலைகார னுக்கெல்லாம் ஷெரீப் பதவியா? கல்யாணியை ஜலசமாதி யாக்கியவனுக்கெல்லாம் பட்டம் பதவியா... குப்தா. என்னை அரசாங்கம் நாளை தூக்கில் போடலாம். நீ முதல் மந்திரியாகவே கூட ஆகலாம். ஆனால் சத்தியம் என்பது சக்திமிக்கது என்றால் உன் பாவத்துக்கெல்லாம் நீ பதில் சொல்லியே தீருவாய்.''*

பதில் சொல்லிக் கொண்டிருந்தார் குப்தா.

''கல்யாண் உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு உன்கிட்ட நான் மனசு விட்டு பேசப் போறேன். இந்த கோடீஸ்வரன் ஒரு பெரிய பாவி. பணத்தால் குண்டூசியில் இருந்து ஏரோப்ளேன் வரை வாங்கினவன்.

ஆனா ஒரு நல்ல கிட்னியை வாங்க முடியலை என்னோட.. இரண்டு கிட்னி டிரான்ஸ்ஃபரன்சி ஆப்ப ரேஷனும் சூப்பர்.. பெயிலியர்!

எடுக்கற ஜென்மமாவது நல்லபடி இருக்கணும்னு ஆசைப்படுறேன். அதனால உன்னோட ஒத்துழைப்பு எனக்கு பிரதானம்.

''என்னன்னு சொல்லுங்க சார். செய்ய காத்திருக் கிறேன்'' இப்படி பதில் சொல்வது கல்யாண் எம்.ஏ. இருபத்தி நாலு வயதை தாண்டிய ஆறடி உயர அத்லெ டிக்ஸ் ஸ்டேட் ப்ளேயர்.

''கல்யாண், முதல் காரியமா ஒரு கோடி ரூபாய் நெட் கேஷை அந்த ஏழுமலையான் உண்டியல்ல என் சார்புல நீ போட்டுட்டு வரணும். அப்புறம்தான் மற்ற வேலையெல்லாம். சாமி காரியம் சின்ன தப்பு கூட வாரம பண்ணனும் செய்வியா?''

''நிச்சயம் சார்.''

கல்யாண் அப்படிச் சொன்ன மறுநொடியே படுத்த படுக்கையிலிருந்து சற்று எம்பி உயர்ந்து சுற்று முற்றும் ஒரு பார்வை பார்த்துவிட்டு கல்யாணை பக்கமாக அழைத்து காதைக் கடித்தார் குப்தா.

கல்யாண் முகம் அதன் எதிரொலியாய் கசங்கிப் போனது.

''என்ன சங்கடமா இருக்கா. உனக்கு நான் வெக்கற முதல் வேலையே இப்படி இருக்கேன்னு பீல் பன்றியா?''

''குப்தாவின் பேச்சுக்கு நெடுநேரம் கழித்து பதில் சொன்னான் கல்யாண்.

''உங்க தவறுகளுக்கு திருத்தம் தேட ஆசைப்படறீங்க நீங்க. ஒரு வகைல இது பரிகாரம். பரிகாரம் செய்ய உதவி செய்யறதுல தப்பு இல்ல. உங்க விருப்பப்படியே செய்துட றேன் சார்''

கல்யாண் அங்கிருந்து கிளம்பினான். ''என்னோட வயலட் ஃபியட்டை எடுத்துக்கோ'' என்றார் அவனது புறப் பாட்டைப் பார்த்த குப்தா.

அந்த வயலட பியட் வழுக்கி நின்ற இடம் கொடைக் கானல் குப்தா எஸ்டேட்டின் நீல மாளிகை போர்ட்டிக்கோ.

கதவைத் திறந்து கொண்டு இறங்கும் போதே காத்திருந்த மாதிரி தென்பட்டார் எஸ்டேட் மேனேஜர் சாமிதாஸ் ''வாங்க சார். நீங்க வரப்போறதா பாஸ்கிட்ட

இருந்து தகவல் வந்தது. எல்லாம் ரெடி பண்ணி வெச்சி ருக்கோம்'' என்றார்.

புன்னகையோடு, உள்ளே நுழைந்தான் கல்யாண். முகத்தில் மோதும் மலைக்குளிரால் காது மடலில் விறைப்பு.

நீல மாளிகையின் பணக்காரத்தன்மை கல்யாணை ஆச்சரியப்படுத்தியது.

''மாசம் தவறினாலும் பாஸ் இங்க வரத் தவறினது கிடையாது. அவருக்கு பிடிச்ச அமைதியான மாளிகை இது.'' மேனேஜர் சாமிதாஸ் அந்த அறைச்சாவிக் கொத்தை எடுத்து நீட்டுகிறார்.

''இந்த சாவி உங்ககிட்டதான் இருக்குமா?''

''ஆமா. பாஸ் வரும்போது அவர் மட்டும்தான் அந்த அறையைப் பயன்படுத்துவார். மத்த சந்தர்ப்பங்கள்ள பூட்டி தான் வெச்சிருப்போம். இந்த முறை அதிசயமா உங்களுக்கு தரச்சொல்லி அவர்கிட்ட இருந்து போன்கால்.''

அறையை நோக்கி நடந்தான் கல்யாண். அறையின் பருத்த தேக்குக் கதவை திறந்து உள்ளே நுழையவும் மூக்கை நிரடியது பெர்ப்யூம் வாசம்! பூட்டியே வைத்து இருந்த அறையில் பல நாட்களாக வாசம் கரையாமல் இருக்குமா என்ன?

கேள்வியோடு உள்ளே நோட்டம் விட்டதில் கட்டி லின் மேல் ஒன்றிரண்டு உதிர்ந்த மல்லிகைப் பூக்கள். அந்தப் பூக்கள் சமீபமாகத்தான் படுக்கையில் உதிர்ந்திருக்க வேண்டும்.

சிந்தனையோடு நிமிர்ந்த கல்யாணின் காதில் குப்தா ரகசியமாய் சொன்ன விஷயம் உடனே ஓடத் தொடங் கியது.

''என்னோட கறுப்புப் பணத்துல ஒரு பகுதி கொடைக் கானல் நீல மாளிகைல இருக்கு. பங்களா டாய்லெட்ல ஒரு வாஷ்பேசினும் சுவர் சுண்ணாடியும் இருக்கும். சுவர் கண்ணாடியைத் தூக்கிட்டுப் பார். கட்டுக் கட்டா கோடி ரூபாய் உனக்குக் கிடைக்கும். அது இனி அங்க இருக்க வேண்டாம். அது போய்ச் சேர வேண்டிய இடம் திருப்பதி உண்டியல்.''

கல்யாண் சற்றும் தாமதியாமல் டாய்லெட்டைத் தேடி நுழைந்தான்.

மின்னல் வெளுப்பில் வாஷ்பேசின்.

இடுப்புயரத்துக்கு பெல்ஜியம் நிலைக்கண்ணாடி

வாஷ்பேசினில் தண்ணீர் இறங்கும் பில்டர் பகுதி யில் அடர்த்தியான தலைமுடியும் சில உதிர்ந்த மல்லிகைப் பூக்களும் அடைப்பட்டிருந்தது.

குப்தா மட்டுமே தங்குவார் என்று நம்பிய இடத்தில் வேறு யாரோ தங்கியிருக்க வேண்டும்.

அது யாராக இருக்கும்?

ஊகத்தில் மனது ஓடும்போது பார்வை நிலைக் கண்ணாடியைப் பார்த்தது. இதற்குப் பின்னால்தான் இருக் கிறது ஒரு கோடி.

யோசனையோடு கண்ணாடியைத் தொட்டு திருப் பினான். கண்ணாடியின் பின்பக்கம் ஒரு சிறிய அலமாரி.

அந்த அலமாரி காலியாகக் கிடந்தது. கல்யாணுக்கு பகீர் என்றது. எங்கே போச்சு அந்த கோடி ரூபாய்?

கல்யாணுக்குள் வியர்வைச் சுரப்பிகள் வேகமாக இயங்க ஆரம்பித்தன. அடுத்து என்ன செய்யலாம்?

'சாமிதாஸ் கல்யாண் அலறிய அலறலில் ஓடி வந்து உடம்பு பதற நிற்கிறார் அந்த மேனேஜர்.

''எம்.டி. ரூம்ல எம்.டி. மட்டும்தானே தங்குவார்?''

''ஆமாம் சார்.''

''வேறு யாரும் தங்க மாட்டாங்களே.''

''மாட்டாங்க சார்.''

''பொய்...! நான் வருவதற்கு முந்தி அங்க யாரோ தங்கி இருந்திருக்காங்க.''

''சார்.. சத்யமா யாரும் தங்கலை.''

''யாரும் தங்கலைன்னா வாடாத மல்லிகைப்பூ. வாஷ் பேசின்ல தலைமுடி இதெல்லாம் எங்க இருந்து வந்துச்சு.''

சாமிதாஸ் அதைக் கேட்டு விக்கித்துப் போகும்போது நடுங்கிக் கொண்டே பக்கமாய் வந்து முழிக்கத் தொடங்கினான் ஒரு வேலைக்காரன்.

''என்னய்யா நீ எதுக்கு முழிக்கிறே?''

''வந்து சார்... நேத்து அந்த ரூம்ல நம்ம எம்.டி. ஐயாவோட ஸ்னேகிதர் சோமன் நம்பியார் தங்கியிருந்தாரு''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''ராத்திரி வந்தாரு. கூட ஒரு பொண்ணும் வந்துச்சு இதெல்லாம் மேனேஜருக்குத் தெரியாது''

''எப்படி தெரியாம போச்சு?''

''மேனேஜர் ஒரு வேலையா வத்தலகுண்டு போயிட்டாரு. அப்பத்தான் சோமன் நம்பியார் வந்துட்டு போனாரு. வரும்போது அவரே ரூம் சாவியை கொண்டு கிட்டு வந்தார். கேட்டதுக்கு எம்.டி. கொடுத்தனுப்பினதா சொன்னார்?''

''யார் இந்த சோமன் நம்பியார்? எம்.டி.ரூம்ல தங்கற அளவுக்கு அவருக்கு அவ்வளவு நெருக்கமானவரா?''

கல்யாணின் கேள்விக்கு பதில் சொல்ல ஆசைப்பட்ட மாதிரி தொலைபேசி சிணுங்கியது.

அதை நெருங்கி கையிலெடுத்து காதைக் கொடுத்தான் கல்யாண்.

''யார் கல்யாண்?''

''ஆமா... நீங்க யார்?''

''நான் சோமன் நம்பியார். தட்மீன்ஸ் குப்தாவோட ரைட் ஹாண்ட்''

''இங்க வந்திருந்தீங்க போல இருக்கே?''

''ஆமா. நான் வராம போயிருந்தா அந்த ஒரு கோடி ரூபா திருப்பதி உண்டியலுக்கே போயிருக்குமே.''

''நினைச்சேன். நீங்கதான் எடுத்திருக்கணும். இங்க பணம் இருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்.

''அங்க பணம் இருக்கறது மட்டுமில்ல குப்தாவோட ஒவ்வொரு குற்றமும் எனக்குத் தெரியும். குப்தாவுக்கு இப்ப பைத்தியம் பிடிச்சிருக்கு. அதான் உயிரைக் கொடுத்து சம்பாதிச்சதை உண்டியல்ல போடச் சொல்றான்''

''அது அவரோட ஆத்ம விருப்பம். நீங்க செஞ்சிருக்கிறது பெரிய திருட்டு''

''கல்யாண்... அவன்தான் புத்தியில்லாம உண்டியல்ல போடச் சொல்றான்னா நீயுமா அதுக்கு ஒத்து ஊதுவே. ஒரு ஐடியா சொல்றேன் கேட்டுக்கோ. அவன் கேட்டா பணத்தை உண்டியல்ல போட்டுட்டதா சொல்லு. ஆளுக்கு பாதி எடுத்துக்கலாம் என்ன சொல்றே?''

''நான்சென்ஸ் அது கடவுளோட பணம். அதுல பங்கு போடறியா? ஒழுங்கா பணத்தை என்கிட்ட கொடுத்திடு. இல்லை பாஸ்கிட்ட நான் பேசும்படியாயிடும்.''

''பேசேன். தாராளமா பேசேன். அவனாலையோ உன்னாலையோ என்னை ஒண்ணும் பண்ண முடியாது. ஒழுங்கா சம்பாதிச்சிருந்தா போலீஸ் கோர்ட்டுன்னு போக லாம். இதுதான் அவ்வளவும் பிளாக் ஆச்சே. என்ன பண்ண முடியும் உன்னால?

அதோட நீயே முழுப் பணத்தையும் எடுத்துட்டு என்மேலே பழி போடறேன்னு அவன்கிட்ட நான் கதைய திருப்பிடுவேன். எங்க நட்புக்கு வயசு நாற்பது. நான் சொன்னா அவன் கேப்பானா இல்லை நீ சொன்னா கேப்பானாங்கறதை பொறுத்திருந்து பாரு''.

சோமன் நம்பியாரின் கித்தாய்ப்பான பேச்சில் ஊசி ஏறியது போல் ஒரு வலி கல்யாணுக்கு.

''என்ன கல்யாண் பேச்சையே காணோம். நேர்மையா நடந்துக்க முயற்சி செஞ்சு பேரை கெடுத்துக்கப் போறியா? இல்லை ஒரு பொய் சொல்லி ஐம்பது லட்சம் பார்க்கப் போறியா?''

கல்யாண் உடனேயே குழம்பத் தொடங்கினான். அவன் அடுத்து என்ன சொல்வான்?

அருகேயே திரை மறைவில் காதைத் கொடுத்தபடி காத்திருந்தது ஒரு உருவம்!

* * *

# 2

சாம்சனின் டைரியிலிருந்து...

*''குப்தாவுக்கு நான் எவ்வளவு உண்மையாக இருக்க வேண்டுமோ அவ்வளவு உண்மையாக இருந்தேன். ஆனால் எனக்கு அவன் அவ்வளவு பொய்யானவனாக இருந்தான். பணத்துக்காக அவன் எந்த அக்னி ஆற்றிலும் இறங்கி விடுவான். அவன் வைக்கும் பரீட்சைகளும் கொடூரம். அனைத்திலும் தேறி விட்டேன். ஆனால் ஒன்றில் தற்செய லாக தோற்றுப் போனேன். அது என்னை இப்படி கம்பி எண்ண வைக்கும் என்று நான் நினைக்கவேயில்லை.''*

''மிஸ்டர் சோமன் நம்பியார். ஐ ஆம் சாரி. உங்க பேச்சைக் கேட்க நான் தயாரில்லை. உங்களுக்குத் தெரிஞ் சதைப் பார்த்துங்குங்க. நீங்க இங்க வந்து தங்கிட்டு போன துக்கு விட்னஸ் இருக்கு. அதை வைச்சி நீங்க பணம் எடுத் ததை என்னால நிரூபிக்க முடியும். அப்படி முடியலேன்னா பிறகு பார்த்துக்கலாம். அந்தக் கோடி ரூபாய் திருப்பதி சாமியோடது. நான் அவரோட பக்தன் அவர் எனக்குத் துணை செய்வார்னு நம்பறேன்.''

வியர்க்க விறுவிறுக்கப் பேசி விட்டு டெலிபோனைக் கீழே வைத்து விட்டான் கல்யாண்.

திடும்மென்னு ஒரு குரல்!

''வெல்டன் மிஸ்டர் கல்யாண். வெல்டன்''

திரும்பிப் பார்த்தால் ஒரு சந்தனச் சிலை திரைச் சீலைக்குப் பின்னால் இருந்து அசைந்து வந்தது.

மிடி உடுப்பில் போனிடைல் ஹேர் ஸ்டைலில் நெற்றி யில் விபூதி குங்குமக் கீறலோடு ஐந்தரை அடி உயரத் தோடு மார்பில் நல்ல விளைந்த பழத்தோடு...

''யார் நீங்க?'' கல்யாணிடம் கேள்வி.

''ஐ ஆம் மீனா... டாட்டர் ஆப் மிஸ்டர் ஸ்ரீனிவாச குப்தா.''

''நீங்க பாஸோட பொண்ணா?''

''ஆமாம். சந்தேகமா இருக்கா... அப்பாவ விட்டு சொல்லச் சொல்லவா?''

''இட்ஸ் ஓகே நீங்க எங்க இப்படி?''

''உங்க நேர்மைய சோதிக்கத்தான்.''

''புரியலை''

''கோடி ரூபாயை வெச்சு அப்பா உங்களுக்கு ஒரு வேலை வெச்சார். அதை என் கிட்டையும் சொன்னார். எப்படிப்பா ஒரு புது ஆளை இப்படி உடனே நம்பி ரொம்ப நம்பகமான வேலையை கொடுத்தீங்கன்னு கேட்டேன். வேணும்னா அவன் நேர்மைக்கு நீயே ஒரு பரீட்சை வெச்சு பாருன்னு சொன்னார். அதான் சோமன் நம்பியார் ரூபத்துல டெலிபோன் மூலமா பரீட்சை வெச்சேன். பரவால்ல பாஸ் பன்னிட்டீங்க.''

''அப்ப அந்த கோடி ரூபா!''

''என்கிட்ட பத்ரமா இருக்கு . நான் நீங்க வர்றதுக்கு முந்தியே வந்து அதை எடுத்து வெச்சுகிட்டேன். இப்ப அதை அப்பா விருப்பப்படி உண்டியல்ல சேர்க்கணும்.''

கல்யாண் அதைக் கேட்டு அப்பாடா என்று பெருமூச்சு விட்டான்.

''இந்த வேலை உங்களுக்கு ரொம்ப வித்தியாசமா இருக்குமே.''

''ஆமாம் மேடம்!''

''கடமையை செய்யறதுக்கு எல்லாரும் வேலைக்கு போவாங்க. ஆனா நீங்க மட்டும் புண்ணியம் செய்யற துக்காக இந்த வேலைக்கு வந்திருக்கீங்க. பை த பை நீங்க எனக்கு நல்ல கோ ஆர்டினேட்டராவும் இருப்பீங்கன்னு நம்பறேன்.''

அவன் அவள் பக்கம் திரும்பினான். ஆழமாகப் பார்த்தான். ''ஒரு சந்தேகம்'' என்றான் மெலிய...

''என்ன?''

''இந்த கோடி ரூபாயை உண்டியல்ல போடத்தான் வேணுமா? எவ்வளவோ அனாதை ஆஸ்ரமம் இருக்கே அவங்களுக்கு...''

''அனாதை ஆஸ்ரமத்துக்கு நிறைய பண்ணத்தான் போறோம் மிஸ்டர் கல்யாண். ஏன் திருப்பதி பெருமாள் மேல உங்களுக்கு நம்பிக்கையில்லையா?''

''நோ... அப்படியில்லை. கடவுள்தான் மனுஷனுக்குக் கொடுக்கணும். மனுஷன் போய் கடவுளுக்குக் கொடுக் கறது கொஞ்சம் மேதைமையான செயலா எனக்குப் படுது!''

''மேதைமை கிடையாது. அது ஒருவிதமான நன்றி பாராட்ற செயல். அதுலையும் அப்பா போடப் போறது முழுக்க முழுக்க சாமியோட காசைத்தான்.''

''எப்படி?''

''அப்பாவுக்கு சொந்த ஊர் ஆந்திரா. இந்தத் தமிழ் நாட்டுக்கு. குறிப்பா அவர் மதுரைக்கு வந்தப்போ கால் காசு அவர் கைல கிடையாது. வெறும் கையோட அவர் ரயில்ல டிக்கட் கூட எடுக்காம பயணம் செய்திருக்காரு.

அந்த ரயில்ல ஒரு திருப்பதி போற பயணிக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அந்தப் பயணியும் தான் இனி

பிழைக்க முடியாதுங்கற எண்ணத்துல அப்பா கைல தன் உண்டியல் காசைக் கொடுத்து போடச் சொல்லிவிட்டான்.

ஆனா அப்பா அதை உண்டியல்ல போடாம தன்னோட தொழிலுக்கு முதலா போட்டார். இன்னிக்கு அப்பா பெரிய பிசினஸ்மேன். கோடீஸ்வரன். இப்பாவாவது தப்பை உணர்ந்து அந்தப் பணத்தை உண்டியல்ல போட்டுடணும் தானே?''

மீனாவின் வளைப்பான கேள்வியின் வசம் ஒரு சின்ன திணறல் கொள்கிறான் கல்யாண்.

நடுவில் தொலைபேசி குறுக்கிட்டது.

எடுத்தாள். மறுமுனையில் குப்தா.

''டாட் ஒரு சர்ப்ரைஸ் நியூஸ். உங்க கணிப்பு ரொம்ப சரி. மிஸ்டர் கல்யாண் என் பரீட்சைல பாஸ் பண்ணிட்டார்'' என்றாள் மீனா.

குப்தாவும் அதற்காக மிக மகிழ்ச்சி அடைந்த மாதிரி தெரிந்தது.

கூடவே அவர் என்ன சொன்னாரோ தெரியாது. அவள் முகம் மாறிப் போனது. போனை சோர்வாக வைத்தாள்.

''என்ன மிஸ் மீனா! ஏன் டல்லாயிட்டீங்க. பாஸ் தானே பேசினார்?''

''ஆமாம். நீங்க பரீட்சையில் பாஸ் பண்ணினதுக்காக ரொம்ப சந்தோஷப்பட்டார். ஆனா கூட இன்னொரு விஷயத் துக்காக ரொம்ப கவலைப்பட்டார்.''

''என்ன அது?''

''சோமன் நம்பியார்!''

''யார் உங்கப்பாவோட ரைட் ஹேண்டுன்னு சொல்லி கொஞ்சம் முந்தி என்னை மிரட்டிப் பாசாங்கு பண்ணின நபரா?''

"ஆமா! ஆனா உங்களோட பேசினது என்னோட ஆள்! நிஜ சோமன் நம்பியார் வேற ஒருவன்."

"ஏன் அவருக்கென்ன?"

"அப்பாவை அழிவுப் பாதைல இழுத்துட்டுப் போன ஒரு அசுரன் இந்த சோமன் நம்பியார். அப்பாவை திருந்த விடாம பண்ண முயற்சி செய்யறான்."

"எப்படி?"

"இந்த ஒரு கோடிய நிஜமாலுமே உண்டியல்ல போடக்கூடாதாம்."

"அவனுக்கு எப்படி இது தெரியும்?"

"அவனுக்கு இது மட்டுமில்ல, எல்லாமே தெரியும். திருடப் போறவன் தனியா போகணும்னு ஒரு பழமொழி உண்டே கல்யாண். உங்களுக்குத் தெரியாதா? அப்பா இவனோட சேர்ந்து போயிட்டு இப்ப அவஸ்தைப் படறார்."

கல்யாண் அவள் பேச்சுக்கு ஆழ்ந்த மௌனம் கொண்டான். பின் கண்ணாலேயே அடுத்து என்பது போல் பார்த்தான்.

"திருப்பதிக்குக் கிளம்ப வேண்டியதான். ஆனா இதே உருவத்துல இல்ல" என்றாள் சற்று புதிராக.

"வேற எந்த உருவத்துல?"

"பர்தா அணிஞ்ச முஸ்லீமா நான் மாறிடறேன். தொப்பி தாடின்னு நீங்களும் மாறிவிடுங்க"

"ஏன்?"

"சோமன் நம்பியார் நம்மை மடக்கி பணத்தைப் பிடுங்கிப்பானாம். எப்படி அவங்க பணத்தை உண்டியல்ல போடறாங்கன்னு பாக்கறேன்னு அப்பாகிட்ட சவால் விட்

டுருக்கான். நமக்காக திருப்பதில அவன் ஆட்கள் அலை மோத ஆரம்பிச்சிருப்பாங்க.''

''அது சரி... முஸ்லிமா கோவிலுக்குள்ள நுழைய முடியுமா?''

''முதல்ல அடிவாரம் வரை போவோம். அப்புறமா அங்க போய் வேற வழிய யோசிப்போம். கிளம்புங்க. எங்கப்பா தன்னோட நல்ல காரியத்தை திருப்பதியில தொடங்கறாரு. அதை எப்பாடுபட்டாவது நிறைவேத்தனும் ஒத்துழைப்பீங்கதானே?''

''நிச்சயமா!''

அடுத்த சில மணியில் இருவரும் உருமாறிய நிலை யில் காரில் ஏறினார்கள். கார் சீறிக்கொண்டு கிளம்பியது. கார் அந்தப்புறமாய் நகர்ந்திருக்கும். இந்த பக்கமாய் ஒரு தொலைபேசி சோமன் நம்பியாருக்கு அழைப்பு விடுத்தது.

''யெஸ் சோமன் ஸ்பீக்கிங்!''

''சார் நான் தோட்டக்காரன் ஆறுமுகம் பேசறேன். அந்த கல்யாண் தம்பியும் மீனாம்மாவும் முஸ்லீம் வேஷத்துல திருப்பதி கிளம்பிட்டாங்க. கார் நம்பர் TN 59 6565 சிகப்பு கான்டெசா.''

''தேங்க்யூ ஆறுமுகம். உன்னை நான் அப்புறமா வந்து கவனிக்கிறேன்.''

சோமன் நம்பியார் ஒரு பிஸ்டலுடன் தன் காரை கிளப்புவதில் ஒரு அகர வேகம் தெரிந்தது.

* * *

# 3

*சாம்சனின் டைரியிலிருந்து...*

*''குப்தாவுக்கு சற்றும் சளைக்காதவன் இந்த சோமன் நம்பியார். உலகில் கெட்டவர்கள் அனைவரும் நல்லவர் களானாலும் இவன் மட்டும் மாறவே மாட்டான். இவனது பலமே இவன் வைக்கும் குறி தப்பாமல் போவதுதான். கண்திறந்திருக்கும்போதே இமைக்குத் தெரியாமல் விழியை திருட முடிந்தவன் இவன்.''*

மதுரை நீதிமன்றம் அருகே ஒரு காரேஜ்.

மீனாவின் கான்டெஸா அதனுள் நுழைந்தது.

அங்கே ஒரு அழுக்குக் கலர் அம்பாஸிடர்.

''நாம திருப்பதி போகப் பயன்படுத்தப் போற கார் இந்த அம்பாஸிடர்தான்'' என்றபடி மீனா அந்த காருக்கு தாவி ஏறினாள்.

சூட்கேசுடன் கல்யாணும் ஏறிக் கொண்டான்.

காரிடம் சீற்றம்.

மீனாவின் திறமையான ட்ரைவிங்கைப் பார்த்து கல்யாண் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க மேலூர் தெரிந்தது.

சாலை ஓரமாக சில எருமைகள் எனக்கென்ன என்று நடுச்சாலையில் தேங்கி நின்று விட்டிருந்தன.

ஹாரனை அமுக்கி அந்த ஜீவன்களை அப்புறப்படுத் துவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

ஒரு வழியாக கியர் மாற்றி காரை கிளப்பிட எத்தனித்த போது சரேலென்று தாண்டிச் சென்றது ஒரு பிரௌன் கார்.

அதைப் பார்த்த மாத்திரத்தில் மீனாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.

''மைகுட்னெஸ்'' என்று பர்தாவை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

கல்யாண் கூர்ந்து கவனித்தான்.

''என்ன மேடம்?''

''அந்த பிரௌன் கார் சோமன் நம்பியாரோடது.''

மதர்த்த மார்பு தழைய ஒரு ஆழ்ந்த பெருமூச்சு மீனா விடம்.

முன்னால் ஓடிய அந்த பிரௌன் கார் கண்ணை விட்டே மறைந்து விட்டிருந்தது.

''அவனுக்குதான் எவ்வளவு அவசரம் பாருங்க. நாம திருப்பதி கிளம்பிட்டது தெரிஞ்சு படை எடுத்துட்டான்.'' மெல்ல காரை செலுத்தியபடி பேசினாள் மீனா.

''அதுசரி... நம்மைப் பார்த்தா என்ன செய்வான்?''

''கோடி ரூபாயைப் போட விட மாட்டான். திரும்பக் கேட்பான்.''

''முடியாதுன்னா?''

''போலீசுக்கு கறுப்புப்பணம்னு தகவல் தருவான். எக்கச்சக்கமா சிக்கல் பண்ணுவான்.''

''அவனை அட்டாக் பண்ணி வெளியே விடாம நம்ம கஸ்டடியிலேயே வெச்சிகிட்டா?''

''அதுவும் லேசுப்பட்ட விஷயமில்ல. அவன் கூட்டம் ரொம்ப பெரிசு. அதுல லாரன்ஸ்னு ஒருத்தன். படுபயங்கர தாதா. அவன் இவனுக்காக களத்துல இறங்கினா அப்புறம் நாம நம்மை தற்காத்துக்கத்தான் நேரம் சரியாக இருக்கும்.

அப்பா செய்ய ஆசைப்பட்ட எந்த பரிகாரங்களையும் செய்ய முடியாது.''

மீனாவின் பேச்சால் கல்யாண் உறைந்து போனான். அனைத்து பக்கங்களிலும் கூரான முனை கொண்ட ஒரு கத்தியாய் அவன் மனதுக்கு தோன்றியது அந்த மேட்டர். கார் வேகமெடுத்தது.

திருப்பதி அடிவாரம் முதல் திருப்பத்தில் பரபரப்பாக மலை ஏறுவதற்கான அனுமதிச் சீட்டு வாங்குவதில் மும்முர மாக இருந்தார் சோமன் நம்பியார்.

ஐம்பது வயது தோற்றம்.

பார்வை சுற்றிச் சுற்றி பிராண்டிக் கொண்டே இருந்த போது முரட்டு ஜீன்ஸ்பேண்ட் போட்ட ஒருவன் அவரை நெருங்கினான்.

''அந்த நம்பர் உள்ள வண்டி திருப்பதிக்குள்ள வரவே யில்லை மிஸ்டர் சோமன்நம்பி...''

''நல்லா பாத்தியா?''

''நான் சொல்லி அதுக்கு நேர்மாறா நடந்தா அடுத்து எனக்கு நீ தொழில் தராதே.''

''சரி அந்தப் பெண்ணோட போட்டோ தந்தேனே அதை வெச்சாவது அடையாளம் கண்டு பிடிச்சிருக்க லாமே...''

''அப்படியும் யாரும் வரலை. பர்தாவோட ஒரு முஸ்லீம் வந்தாங்களாம். மற்றபடி முகம் தெரிஞ்ச ஒரு மனுஷனைக் கூட நாங்க பார்க்கத் தவறலை.''

அவன் பேசப் பேச சோமன் நம்பியாரின் முகம் அஷ்ட கோணலாகிப் போனது.

அந்த வினாடி பார்த்து மீனாவின் அம்பாஸிடர் அவர்களை தாண்டி மலை எறியது. அதில் டிரைவிங் சீட்டில் பர்தா உடுப்பில் தெரிந்த உருவைப் பார்த்து சோமன் நம்பியாருக்கு பொட்டில் தெறித்தது.

காரை உற்றுப் பார்த்தபோது மதுரை ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் பளிச்சிட்டது.

''ஏய்... அதோ அந்தக் குட்டி! விடக்கூடாது. பர்தா போட்டு டபாய்க்கப் பார்க்கிறாளா?''

சோமன் நம்பியார் தன் காருக்கு தாவ அந்த முரட்டு மனிதனும் தொற்றிக் கொள்ள திருமலை திருப்பதியின் வளைந்த மலைப்பாதையில் அந்தக் கார்களின் சீற்றம் அச்சமுட்டியது.

''ஒரு கோடி ரூபாயைப் போய் உண்டியல்ல கொட்டப் போறா அவ. விடக்கூடாது... விடவே கூடாது.''

காரின் துரத்தல் கல்யாணுக்கு உறைக்க தொடங்கியது.

''மேடம் பின்னால் ஒரு கார் அசுரத்தனமா...''

திரும்பிப் பார்த்த மீனாவுக்குள் பகீர்!

''அது சோமன் நம்பியார்தான். மைகாட் எப்படி தப்பிக்கப் போறோம் கடவுளே...''

''டோண்ட் ஒரி. அந்த ஆபத்துக்கு ஒரு வழி பண்ணுவோம்.''

''எப்படி?''

''இப்படி......'' என்று காரின் பிரேக்கில் காலை வைத்து அமுக்கியவன் நிமிடமும் தாமதிக்காமல் சாலையோரம் கிடந்த கற்களில் சிலவற்றை அசைத்து நடுச்சாலைக்கு

கொண்டு வந்து வைத்தபோது சோமன் நம்பியாரின் கார் வந்தே விட்டது.

நம்பியாரும் சளைக்காமல் தன் பிஸ்டலின் ட்ரிக்கரில் கட்டை விரலை அழுத்த, குண்டு சீறிப் பாய்ந்தபடி வெளிக் கிளம்பியது.

* * *

# 4

## சாம்சனின் டைரியிலிருந்து

*''மஞ்சுளா!*

*இவளைப் போல ஒரு அழகியை நான் பார்த்ததில்லை. இன்டர்வியூவிற்கு வந்த இவளை குப்தா கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டான். அதன் எதிரொலி - அவள் ஒரு குழந்தையைப் பெற்று குப்தா வீட்டு வாசற்படியில் போட்டுவிட்டு தூக்கில் தொங்கினாள்.*

*இந்த குப்தா அந்தக் குழந்தையைத் துளியும் பச்சாதப மின்றி ஒரு குப்பைத் தொட்டியில் போட்டு விட்டான். இந்தப் பாவம் இவனை சும்மா விடுமா?''*

சீறிப் பாய்ந்த துப்பாக்கி குண்டு கல்யாணின் முதுகை உரசிக் கொண்டு போனது. அதே சமயம் சாலையின் கல் லின் மேல் ஏறியபடி அவரது வாகனம் 'ஹோ' வென கவிழத் தொடங்கியது.

''ஏய்.... ஏய்.... ஏய்...'' அலறினார் சோமன் நம்பியார்.

அந்த வாகனம் மலைச்சரிவில் உருள ஆரம்பித்தது.

''மீனா... கமான் க்விக்... இனி அவன் இந்த மலை ஏறி நம்மை பாலோ பண்ண முடியாது. எமன் அவங்களை பாலோ பண்ண ஆரம்பிச்சிட்டான்.''

கல்யாண் காரில் தாவி ஏறினான்.

மீனா காரைக் கிளப்பாமல் நின்று கவனிக்க ஆரம் பித்தாள். என்ன ஆகப் போகிறதோ?

நான்கு தடவைக்குமேல் சோமன் நம்பியாரின் கார் கவிழ்ந்து பின்னர் அவர்களை பரல் மணியாய் உதிர்த்துக் கொட்டியது.

அதில் சோமன் நம்பியார் உடம்பு தரதரவென்று முட்புதரின் சரிந்து விழுந்து எலும்புகள் நொறுங்க ஆரம் பித்தன.

''மீனா போதும்... காரை எடுங்க! இங்க நின்று வேடிக்கை பார்த்தா நம்மை சந்தேகப்படுவாங்க.''

கல்யாணை அதற்குமேல் சோதிக்காமல் காரைக் கிளப்பினாள் மீனா.

பின்னாலேயே ஒரு திருப்பதி பஸ். அது கவிழ்ந்த காரைப் பார்த்து நிற்பதும் காப்பாற்றுவதற்கு ஆட்கள் பஸ்ஸில் இருந்து இறங்கி ஓடுவதும் நன்கு தெரிந்தது காரின் ரியர் கண்ணாடியில்

மீனாவிடம் ஆழ்ந்த பெருமூச்சு

டெலிபோன் சிணுங்கியது. கையிலெடுத்தார் குப்தா.

''டாட் ஐ ஆம் மீனா''

''சொல்லு...''

''உண்டியில பணத்தைப் போட்டாச்சு.''

''ரியலி...! அந்த நம்பியாரை. ஓவர் டேக் பண்ணி போட்டுட்டீங்களா. ஒண்டர்புல் ஒண்டர்புல்...''

''மேலே கேளுங்க... அந்த நம்பியார் இப்ப ஹாஸ் பிடல்ல.''

''என்ன... என்னம்மா சொல்றே?''

''ஆமா டாட். நம்பியார் எங்களை துரத்தினான். அவன் காருக்கு ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு. அதாவது ஆக்சிடெண்ட் ஆற மாதிரி பண்ணிட்டார் கல்யாண்.''

''இப்ப நீங்க எங்க இருந்து பேசறீங்க?''

''கீழ் திருப்பதி''

''எனிவே... என் நெஞ்சு பாரம் கொஞ்சம் இறங்கிருச்சு மீனா. கல்யாண்கிட்ட ரிசிவரைக் கொடு.''

மீனா ரிசிவரை அவனிடம் கொடுத்தாள்.

''ஹலோ... கல்யாண். உனக்கு ரொம்ப தாங்க்ஸ்ப்பா. எனது நல்ல காரியத்துல முதல் காரியம் முடிஞ்சிருக்கு. அடுத்தடுத்து பல காரியங்கள் பாக்கி இருக்கு. அவைகளையும் நீ செய்து முடிக்கணும்.''

''ஷ்யூர் சார்.''

''உன்னோட அடுத்த வேலை ரொம்ப காம்ப்ளிகேடிவ் ஆனது. அதை மீனா சொல்வா.''

''ஓகே சார்...''

''ஆல் த பெஸ்ட்''

டெலிபோனை முடக்கி விட்டு கல்யாண் மீனா பக்கம் திரும்பினான்.

''என்ன சொன்னார் அப்பா'' கண் சிமிட்டியபடி கேட்டாள் மீனா.

''அடுத்த வேலை என்னன்னு சொல்லுவீங்களாம்.''

''ஓ.....! அதுக்குள்ள அடுத்த வேலையா... கொஞ்சம் ரிலாக்ஸா இருக்க விட மாட்டாரே...''

மீனா டி ஷர்ட் அணிந்திருந்தாள். முன்மார்பில் ''கேட்ச் மீ'' எனும் வாசகம்.

''இப்படியெல்லாமா டி ஷர்ட் போடறது?'' கல்யாண் குறும்பாகக் கேட்டான்.

''ரசிக்க வேண்டிய விஷயத்துல குற்றம் பார்க்கறது தப்பு'' என்றாள் மீனா

''யாராவது நிஜமானாலுமே கேட்ச் பண்ணப் பார்த்தா என்ன ஆகும்?''

''நத்திங் வில் ஹேப்பன்ட் நான் கொஞ்ச நாள் அமெரிக்காவுல படிச்சவ அந்த பாதிப்பு இது.''

''நல்ல விஷயம்தான் நம்மை பாதிக்கணும். கெட்டது பாதிக்கக்கூடாது.''

''எனக்கு இதெல்லாம் தெரியாது. எதுலையும் பயம் கிடையாது. யாருக்கும் துன்பம் தரக்கூடாது. அது ஒண்ணு தான் என் பாலிசி.

''பாலிசி... நல்ல பாலிசிதான். ஆனா நிறைய மாற்றங் கள் வேணும் உங்ககிட்ட.''

''அம்மா இருந்திருந்தா நீங்க இப்படி சொல்லும்படி ஆகியிருக்காது. அவங்க இல்லாததால்..... அனாதையா வளர்ந்ததால... இப்படி ஆகிட்டேன்.''

''அம்மா எப்ப இறந்தாங்க?''

''நான் பிறந்தப்பவே - அது ஒரு அநியாய மரணம்.''

''எப்படி...?''

''நான் பிறந்த அன்னிக்கு அப்பா என்னைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்திருக்காங்க. அப்போ அம்மா மயக்கமா இருந்தாங்களாம். அப்பாக்கு அம்மான்னா உசுரு. அம்மா வைப் பார்க்க ஆசைப்பட்டு பக்கத்திலேயே உக்காந்திருக் காரு. அப்போ நர்ஸ் ஊசி போட்டிருக்காங்க. அது வேற ஒருத்தருக்குப் போட வேண்டிய பென்சிலின் இஞ்ஜெக் ஷன் தவறிப் போய் நர்ஸ், அம்மாவுக்குப் போட்டுட் டாங்க... அம்மா கண் முழிக்காம அப்படியே போய் சேர்ந் துட்டாங்க. அப்பா அதைப் பார்த்து உறைஞ்சு போயிட் டாரு.''

''மை காட் எப்படி இதை டேக்கிள் பண்ணார்?''

''அப்பா அந்த நிமிஷமே மாற ஆரம்பிச்சுட்டார். நாம யாருக்காவது கெடுதல் பண்ணினா நமக்கும் அதே வழியில கெடுதல் நடக்கும்னு அப்பா உணர்ந்த முதல் இன்சிடெண்ட் அது.''

''மை குட்னெஸ். அவருக்கு ஞானம் வந்தது. அப்புறம்? போன உயிருக்கு என்ன பதில்?''

''அப்பா அதை பெரிசுபடுத்தலை. நர்ஸை மன்னிச்சுட்டார். எல்லோர்க்கும் ஆச்சரியம். அந்த நர்ஸாலயே நம்ப முடியலை.''

''என்னாலையும் தான்...''

''ஆனா... அதான் உண்மை. அவரோட குற்ற உணர்ச்சி அந்த நர்ஸை ஒரு தர்ம தேவதையாதான் பார்த்தது. தன் தப்புக்கு தண்டனை கொடுக்க வந்த ஒரு பெண்ணாதான் அப்பா கண்ணுக்குத் தெரிஞ்சா...''

''அப்படி என்ன உங்கப்பா தப்பு பண்ணிட்டார்?''

''மஞ்சுளான்னு ஒரு பெண் அப்பாவைக் காதலிச்சாங்க. தப்பு தப்பு... காதலிக்க வைக்கப்பட்டாங்க.''

''அதோட எதிரொலி... அவ கர்ப்பமானாளாக்கும்!''

''கரெக்ட்... அப்பா அவளை ஏத்துக்க மறுத்துட்டார்.''

''அவங்க... அதனால் தற்கொலை செய்துகிட்டாங்களா?''

''ஆமா... ஆமா.... அவங்க சும்மா தற்கொலை செய்துக்கலை கல்யாண். ஒரு பெண் குழந்தையைப் பெத்து எங்க வீட்டு வாசப்படில கொண்டு வந்து போட்டுட்டு செத்துப்போனாங்க.''

''இப்ப அந்தக் குழந்தை.''

''அப்பா கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாம அந்தக் குழந்தையைக் குப்பைத் தொட்டியில் தூக்கிப் போட்டுட்டார்.''

மீனாவின் பதிலில் கல்யாண் உறைந்து போகத் தவற வில்லை.

''இப்ப அந்தப் பெண் குழந்தைய கண்டுபிடிக்கணும்.''

''எங்க... எப்படி?''

''சொல்றேன். அப்பாவோட டைரில அவர் குழந்தைய குப்பை தொட்டியில தூக்கிப் போட்ட தேதி இருக்கு. அதை வெச்சு பாலோ பண்ணணும்.''

''இப்ப அந்த டைரி...''

கல்யாண் கேட்கும்போதே அந்த டைரியைத் திறந்தாள் மீனா.

20-11-76-ல் அந்தச் சனியனை நான் குப்பைத் தொட்டியில் போட்டேன் என்று குறிக்கப்பட்டிருந்தது.

''அப்படி என்றால்... இப்பொழுது வயது இருபத்தி ஐந்து!''

''என்ன கல்யாண்... கண்டுபிடிக்க முடியுமான்னு சந்தேகமா இருக்கா?''

''பின்ன... இருபத்திஐந்து வருஷத்துக்கு பிந்திய சமாச்சாரம். அங்க அடையாளம் போட்டோ எதுவுமே கிடையாது. எப்படி கண்டு பிடிக்கிறதாம்?''

''கல்யாண்... எனக்கு நம்பிக்கை இருக்கு. நம் நோக்கம் நல்ல நோக்கம். அதுக்குக் கடவுள் துணை இல்லாம போயிருமா என்ன?''

ஆமோதிப்பாய் மணி ஓசை எங்கிருந்தோ கேட்கத் தொடங்கியது.

## 5

சாம்சனின் டைரியிலிருந்து...

*''குப்தாவின் லீலை மஞ்சுளாவை மட்டும் கொல்லவில்லை. ஒரு அப்பாவி பிராமண இளைஞனையும் கொன்று விட்டது. குப்தாவின் கடத்தல் சரக்கு பிடிபட்ட போது அதற்கு பலியானவன் அந்த பிராமண இளைஞன். தன் மகன் கடத்தல் தொழில் செய்தவன் என்று தவறாக உணர்ந்து அவன் தாய் பாலிடால் குடித்து விட்டாள். தந்தையும் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனார். அந்த இளைஞனோடு சேர்ந்து பிறந்த நான்கு சகோதரிகளும் இன்று கல்யாணம் செய்து கொள்ளக்கூட வகையின்றி முதிர் கன்னியராய் அப்பளமிட்டு பிழைப்பு நடத்தி வருகின்றனர்.*

*குப்தா, எந்த பாவம் வேண்டுமானாலும் உன்னை விட்டுவிடும். ஆனால் இந்தப் பெண்கள் கண்ணீருக்கு நீ பதில் சொல்லாமல் சாகமாட்டாய்!''*

''அந்த குப்பைத் தொட்டிய முதல்ல பார்க்கணுமே'' அவன் தேடலை தொடங்கிவிட்டான். ''அது இருக்கோ இல்லையோ...'' என்றும் ஆதங்கப்பட்டான்.

''போய்த்தான் பார்ப்போமே...'' என்றாள் மீனா.

* *

**ம**துரை டிராஃபிக்கில் திணறிக் கொண்டிருந்தது. யாரைப் பார்த்தாலும் டூ வீலரில் பறந்து கொண்டிருந்தார்கள்.

''இந்தத் தெருதான் கல்யாண்... இந்தக் தெருவுல தான் அந்தக் குப்பைத் தொட்டி இருந்தது. அதுலதான் அப்போ அப்பா குழந்தையை போட்டாரு..''

மரத்தடியில் அதே குப்பைத் தொட்டி... மாறவே

யில்லை... 25 வருட கால மாற்றத்திற்கு ஈடுகொடுத்தபடி நிற்கிறது.

மீனா அதைப் பார்த்து மனம் நெகிழ்ந்தாள்.

கல்யாண் அந்த குப்பைத் தொட்டியை ஒட்டிய வீட்டின் கதவைத் தட்டினான்.

கதவும் திறந்தது. ''யார் வேணும்?''

''நீங்கதான்... நீங்க இந்த வீட்ல எத்தனை வருஷமா இருக்கீங்க...?''

''எதுக்கு கேக்கறீங்க...? யார் நீங்க...?''

''காரணமாத்தான் மேடம்... ப்ளீஸ்.''

''நான் நாலு வருஷமாத்தான் குடி இருக்கேன்.''

''யாராவது 25, 30 வருஷமா இந்தத் தெருவுல இருந் திருக்காங்களா?''

''நாலு வீடு தள்ளி பூங்காவனத்தம்மான்னு ஒருத்தர் இருக்காங்க.''

''தேங்க்ஸ்...''

அடுத்த ஐந்தாவது நிமிடம் பூங்காவனத்தம்மாள். கல்யாண் - மீனா எதிரில் மூளையைக் கசக்கிக் கொண்டு வெற்றிலை வாயைப் பிளக்கிறாள்.

''ஆங்... ஞாபகம் வந்துடுச்சு... ஒரு பெண் குழந்தை குப்பைத் தொட்டியில் கிடந்துச்சு... அதைக் கூட நம்ம மாரிச்சாமி செட்டியார்தான் எடுத்துகிட்டு போய் எங்கேயோ விட்டுட்டு வந்தார். பேப்பர்ல எல்லாம்கூட வந்துச்சு...''

''ஆமா. யார் அந்த மாரிச்சாமி செட்டியார்? நாங்க பார்க்கணுமே!''

''அவர் செத்து பத்து வருஷமாச்சே!''

பக்கென்றது கல்யாணுக்கு. மீனா மட்டும் கையை சொடுக்கினாள்.

''பேப்பர்ல வந்துச்சுன்னு சொன்னாங்களே கல்யாண். வாங்க பேப்பர் ஆபீஸ் போய் பழைய காப்பிகளை எடுத்துப் பார்த்துடுவோம்.''

''எந்த பேப்பர்!''

''மாலை முரசு.''

அடுத்த வினாடியே கார் மாலை முரசு நோக்கி பறக்க ஆரம்பித்தது.

* *

**மா**லை முரசுவிடம் நல்ல பொறுப்புள்ள வரவேற்பு. ஆசிரியர் பழைய காப்பியை எடுத்து கல்யாண் எதிரே போட்டார். பேப்பரைத் துழாவியதில் அகப்பட்டது அந்த செய்தி. செய்திக்கு மேலே குழந்தையின் புகைப்படம் வேறு.

மீனா அந்தப் புகைப்படத்தை ஊன்றிப் பார்த்தாள். இமையின் ஓரம் ஈரம் சேர்ந்தது. ''அக்கா.... அக்கா...'' என்றது ஈனசுரத்தில் உதடு.

''சார் இந்த கட்டிங்கை ஜெராக்ஸ் எடுத்துக்கறேன்'' என்றாள்.

ஆசிரியரிடம் ஆமோதிப்பு.

செய்தியில் அந்தக் குழந்தை புனித பிரான்சிஸ் ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாக இருந்தது.

''கிளம்புங்க புனித பிரான்சிஸ் ஆசிரமத்துக்கு...''

**பு**னித பிரான்சிஸ் ஆசிரமம் சிலுவை சுமக்கும் இயேசுவின் விக்கிரக முகப்போடு இருவரையும் வரவேற்கிறது. இருமருங்கிலும் அசோக மரவரிசை... நல்ல பசுமை... ரம்யமாக இருந்தது அந்தச் சூழ்நிலை.

மீனா உற்சாகமாக உள்ளே நுழைந்தாள்.

எதிரே ஃபாதர் வின்சென்ட மாணிக்கம்.

''வணக்கம் பாதர்... ''மீனா கல்யாணின் பணிவான வணக்கத்தை அதே பணிவோடு எதிர்கொண்டார் வின் சென்ட் மாணிக்கம்.

''உங்களுக்கு என்ன வேணும்?''

விளக்கமாக சொல்லி நிறுத்தினான் கல்யாண்.

ஃபாதர் முகத்தில் ஆச்சரியத் திகைப்பு.

''இப்படி எல்லாம் கூட நடக்க முடியும்னா அதுக்கு தேவனோட கிருபைதான் காரணம்'' என்றது அவர் உதடு.

''பாதர் அக்கா இப்ப இங்கதான் இருக்காங்களா?''

''இங்கேயேதான் இருக்காங்க.''

''எங்க... எங்க...? நான் உடனே பார்க்கணுமே!''

''வரச்சொல்றேன். ஆன்ட்டனி...'' பாதர் சற்று உரக்க குரலெடுக்கிறார்.

ஆன்ட்டனி வந்து நின்றான்.

''ஆன்ட்டனி... நம்ம அமலாவை கொஞ்சம் நான் கூப்பிட்டதா சொல்லு...''

ஆன்ட்டனி ஓடினான். மீனா அடக்கமாட்டாது கேட் டாள்.

''பாதர் அக்காதான் அமலாவா?''

''யெஸ்...''

அடுத்த நொடி கல்யாணைப் பார்த்தாள். முகத்தில் இனம்புரியாத பரவசம். கல்யாண் கூடப் பரவசத்தில்தான் இருந்தான்.

''ஆமா.... அமலாவைக் கூட்டிக்கிட்டு போயிடுவீங்களா?'' பாதர் கேட்டார்.

''நிச்சயமா...''

''போய்...?''

''போய் நல்லா பார்த்துப்போம். கல்யாணம் செய்து வைப்போம். அக்கா கைல வீட்டுச் சாவியை கொடுத்து வீட்டைப் பார்த்துக்கச் சொல்வோம்'' படபடத்தாள் மீனா.

''அக்கா பேர்ல அவ்வளவு பாசமா?''

''ஆமா பாதர். அக்கா வேணும் எனக்கு...''

மீனா சொல்லும்போதே அமலா வந்துவிட்டாள். வந்தவள் மீனாவைப் பார்த்து விழித்தாள்.

பாதர் அவர்களை அறிமுகப்படுத்தி பழைய வரலாற்றை சொல்லி நிறுத்தினார்.

அமலா முகத்தில் ஆச்சரியப் புனல். ஓடிப்போய் மீனாவைக் கட்டிக் கொண்டாள்.

''உடனே நான் அப்பாவைப் பார்க்கணும்...'' என்று கிளம்ப ஆயத்தமானாள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அந்தக் கார் அவர்களை சுமந்தபடி சிட்டாகப் பறக்கத் தொடங்கி விட்டது.

அதே சமயம் பாதர் வின்சென்ட் மாணிக்கம் எதிரில் ஒரு லட்ச ரூபாய் கட்டு ஒன்று விழுந்தது.

''தேங்க்யு... பாதர்! ஒரிஜினல் அமலாவை அடையாளம் காட்டாம எங்க ஆளை அவங்களோட அனுப்பினதுக்கு! இந்த உதவிக்கு எங்க சோமன் நம்பியார் உங்களுக்கு எப்பவும் கடமைப்பட்டவர்!''

கரகரப்பான குரலில் ஒருவன் கூறிக் கொண்டிருந்தான்.

* * *

## 6

**சாம்சனின் டைரியிலிருந்து........**

*"குப்தாவைக் கூட சில சமயங்களில் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் இந்த சோமன் நம்பியாரை துளிக் கூட நம்ப முடியாது. இவன் உலகில் உள்ள அத்தனை வில்லன்களையும் ஒன்றாக்கி பிழிந்தது போன்றவன். இவன் ஒரு நபருக்குக் குறி வைத்து விட்டால் அவனைக் காப்பாற்ற ஆண்டவனால் கூட முடியாது."*

பாதரின் கண்களில் பல்பைப் போல் பிரகாசம்.

"இந்த ஆஸ்ரமம் இன்னும் கொஞ்ச. நாளைக்கு தள்ளாடாம நடக்கும். இங்குள்ளவங்க வயிறார சாப்பிடு வாங்க" என்றார் பாதர்.

"என்னமோ பண்ணிக்குங்க. ஆனால் அந்த அமலா போலிங்கறது மட்டும் தெரியவே கூடாது."

"நிச்சயமாகத் தெரியாது."

"ஆமா... ஒரிஜினல் அமலா உண்மையிலேயே இப்ப எங்க இருக்கா?"

பாதர் முகத்தில் அந்தக் கேள்வியால் சற்று பீதி பரவியது. அருகிலேயே கதவோரமாக இந்தப் பேச்சைக் கேட்டபடி நிற்கும் ஒரு பெண்ணின் முகத்திலும் அதே அளவு பீதி.

"லட்ச ரூபாயை கூலியா வாங்கிட்டு யோக்யன் மாதிரி மௌனமா நின்னா எப்படி?" அவனிடம் சற்று கடூரம் கூடியது.

"நான் ஒரு தேவ விசுவாசி... இங்குள்ள அனாதைகள்

நலனுக்காகத்தான் நான் அவங்ககிட்ட பொய் சொன்னேன். அந்த ஒரு பொய் போதும் போயிருங்க...''

''நோ பாதர்... இப்படி பாதி வழியில டிராக் மாறக் கூடாது நீங்க. உண்மையான அமலாவை எங்ககிட்ட ஒப்படையுங்க. அவளுக்கு ஒரு குறையும் வந்துடாது.''

''இருந்தாத்தானே ஒப்படைக்க.''

''என்ன சொல்றீங்க பாதர்.''

''அவ தேவனோட ஐக்கியமாகி எவ்வளவோ வருஷங் களாயிருச்சு.''

''நிஜமாவா?''

''ஆமா... மஞ்சக் காமாலை அவளைக் கொண்டு போயிடுச்சே...''

''பைபிள் மேலே சத்தியம் செய்து இதைச் சொல்ல முடியுமா?''

''தாராளமாக...''

''நானும் ஒரு கிறிஸ்துவன். ஆகையால் உங்களை நம்புகிறேன். உண்மையான அமலா இறந்துட்டாங்கற விஷயம் எந்தக் காலத்துலேயும் மீனா கல்யாணுக்குத் தெரியக்கூடாது.

நாங்க அனுப்பிச்ச பெண்தான் உண்மையான அமலா. இதுல எந்த மாறுதலும் வந்துடக்கூடாது. வந்தா சிலுவையை வணங்கற நீங்க அந்த சிலுவையிலேயே அறையப்படுவீங்க. இதுல உங்களுக்குச் சந்தேகமே வேண் டாம்.''

லாரன்ஸ் தீப்பொறியாய் பேசி விட்டுக் கிளம்பி விட்டான். பாதர் முகத்தில் ஈயாடவில்லை.

அருகே யாரோ வந்து நிற்கும் அரவம். சமையல்காரி விக்டோரியா... கதவோரமாக நின்று சகலத்தையும் காது கொடுத்துக் கேட்டவள்.

''வா... விக்டோரியா...''

''பாதர் லட்சத்துக்காக இப்படி இரண்டு பேர்கிட்ட பொய் சொல்லி ஒரு பெண்ணையும் அனுப்பி வெச்சுட்டீங்களே. அந்தப் பெண் யாரோ... என்ன நடக்கப் போகுதோ... இப்படிப் பொய் சொல்லலாமா? தேவன் மன்னிப்பாரா...?''

''எனக்கு வேற வழி தெரியலை விக்டோரியா? பேங்க் பேலன்ஸ் இருக்கற தொகைக்கு ஒரு நாளைக்கு ஒருவேளை கூடச் சாப்பிட முடியாத நிலை. இந்த நிலையில் தேவனா பார்த்து அனுப்பி வெச்ச நபராத்தான் இவனை நினைக்கிறேன்.''

''உங்க தப்புக்கு இப்படி ஒரு சமாதானமா? நல்ல வேளை... உண்மையான அமலாவை நீங்க அவங்ககிட்ட ஒப்படைக்கலை. அவ செத்துட்டதா சொல்லி சமாளிச்சுட்டீங்க...''

''இப்ப அவ எங்கே?''

* *

அமலா பாடம் நடத்திக் கொண்டிருந்தாள். அவள் எதிரே ஆஸ்ரமக் குழந்தைகள்.

விக்டோரியா அங்கு வந்து எட்டிப் பார்த்துவிட்டு மெல்ல பாதர் வின்சென்ட் மாணிக்கம் அறைக்குள் நுழைந்தாள்.

அவரது டேபிள் டிராயரைத் திறந்தாள்.

உள்ளே லெட்ஜர் புக் ஒன்றை எடுத்து விரித்துப் பார்த்தாள்.

அதில் குப்தாவின் வீட்டு முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது. விக்டோரியா முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் ஓடத் துவங்கின.

போர்டிகோவில் தேங்கிய காரிலிருந்து மூவரும் இறங்கினர்.

மீனாவிடம் என்றைக்குமில்லாத சந்தோஷம்.

கல்யாண் கூட செயற்கரிய செயலை செய்த மாதிரி தான் தெரிந்தான். அந்த பிரம்மாண்டமான பங்களாவின் வாயில்படியில் அவர்கள் நின்றனர். அமலா எனும் அந்தப் புதிய பெண்ணிடம் மட்டும் லேசான தயக்கம்.

"வாங்கக்கா... இதுதான் நம்ம வீடு" மீனா அவளை வாஞ்சையுடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தாள் அந்தப் பெண். வீட்டின் பிரமாண்டம் அவளை மயக்கியது. கல்யாண் முன்னே சென்றான்.

குப்தாவின் அறைக்குள் நுழைந்து அவர் காதில் ஏதோ கிசுகிசுத்தான்.

அவர் முகத்தில் மெர்குரி பிரகாசம்.

"நிஜமாவா? என் பெண்ணை கண்டுபிடிச்சுட்டீங்களா? கல்யாண்... என்னால நம்பவே முடியலை." அவரிடம் உற்சாகத்தில் தடுமாற்றம் ஏற்படுகிறது. புடவைத் தலைப்பை தலைமேல் மூடி பைய நடந்தபடி மலங்க மலங்கப் பார்த்தபடி வந்தாள் அமலா.

"வாம்மா... வா... வா... வா... " குப்தாவிடம் சந்தோஷப் பதட்டம். குப்தா அவளை அருகில் அழைத்து அமரச் சொல்லி அவளது கைகளை வாஞ்சையுடன் பற்றினார்.

''அம்மா... என்னை முதல்ல மன்னிச்சேன்னு சொல்லும்மா...'' என்கிறார் சற்று விம்மலான குரலில்.

அந்தப் பெண் அவரை மிரள மிரளப் பார்த்தாள்.

''நான் உன் அப்பா... இரக்கமில்லாத அப்பா... ஆனா இப்ப என் மனசுல ஈவு இரக்கத்தைத் தவிர வேறு எதுக்கும் இடம் கிடையாது.''

அவர் அப்படிப் பேசும்போதே நெஞ்சு லேசாக வலிக்க ஆரம்பித்தது. மயக்கமானார்.

* * *

# 7

## சாம்சனின் டைரியிலிருந்து...

*"இன்றைக்கு இந்தியா, கொள்ளையர்கள் கைக்கு மாறி விட்டது. இங்கே குப்தாபோல பணப் பெருச்சாளிகள் வைத்ததுதான் சட்டம். சாம்சனாகிய நான் அவர்களின் சட்டத்தால் இன்று சிறையில் கிடப்பவன். எனது டைரி நான் இறந்த பிறகு இந்த உலகுக்கு பல உண்மைகளைச் சொல்லும். குறிப்பாக துரோகங்களின் கதையை அது துல்லியமாய்ச் சொல்லும்.*

டெலிபோன் அலறியது.

கையிலெடுத்து காதைக் கொடுப்பவன் லாரன்ஸ். மறுமுனையில் அமலா.

"சார்! நீங்க சொன்ன மாதிரியே போய்க்கிட்டு இருக்கேன். ரொம்ப அட்டாச்மென்ட்டை இப்ப வளர்த்துக்கலை. மற்றபடி எல்லாம் நார்மல். குப்தாதான் உணர்ச்சிவசப் பட்டு மயக்கமாயிட்டார். அதுக்கப்புறம் டாக்டர் வந்து ஊசி போட்ட பிறகு நார்மலாச்சு."

"வெரிகுட் அவன் செத்துடக்கூடாது. கவனமா நடந்துக்கோ. வீட்டுச்சாவி உன் கைக்கு வரணும். பரிகாரம்னு அவன் பாட்டுக்குச் சொத்தை கரைச்சிடப் போறான். ஜாக்கிரதை."

"நான் பார்த்துக்குறேன். அவரோட அடுத்த பிளானைக் கண்டுபிடிச்சு உங்ககிட்டே சொல்றது என் பொறுப்பு."

"குட்... அந்த திருப்பதி உண்டியலுக்குப் போய்ட்ட பணத்தைத்தான் மீட்க முடியலை. மற்றதையாவது மீட்கணும். குறிப்பா சில விவகாரங்கள்ள குப்தா நேர்மையா

நடந்துக்க ஆரம்பிச்சா நம்ம பாஸ் சோமன் நம்பியார் மாட்டிக்கற நிலைமை வந்துடும். ஆகையால் நீ ஜாக்கிரதையா நடந்துக்கிட்டு அந்தக் குப்தாவோட பிளானைத் தவிடு பொடியாக்கணும்.''

''நிச்சயமா! ஒரு கிளப் டான்ஸ்காரிக்கு இவ்வளவு பெரிய வாழ்க்கை கொடுத்துருக்கீங்க. நான் நன்றி மறக்க மாட்டேன் சார்!''

''வெரிகுட்''

தொலைபேசி முடங்கியது. எழுந்து கொண்டாள் அமலா எனும் அந்தப் போலிப்பெண்.

ஏதோ பைல் பார்த்துக் கொண்டிருந்தான் கல்யாண். நடுவில் சிணுங்கியது தொலைபேசி.

கையிலெடுத்தான். மறுமுனையில் விக்டோரியா.

''ஹலோ குப்தா சார் வீடுங்களா?''

''ஆமா... யார் நீங்க?''

''நான் யாருங்கறது அப்புறம். ஆனா நான் சொல்றது சத்யமான உண்மை. அங்க இருக்கற அமலாங்கற பெண் நிஜ அமலா கிடையாது. நிஜ அமலா ஆசிரமத்துலதான் இருக்கா. அவளை லாரன்ஸ்ங்கறவன் அமலாவா அனுப்பி வெச்சிருக்கான். அவ மூலமா அங்க ஏதோ தப்புகள் செய்யப் போறான்னு நினைக்கிறேன். மனசாட்சி கேட்காம இந்த உண்மையைச் சொல்லிட்டேன். அதோடு நீங்க அங்க இருக்கற அமலா போலின்னு தெரிஞ்சு வெளிய அனுப்பிட்டா இங்க பாதர் வின்சென்ட் மாணிக்கம் அந்த லாரன்ஸால கொலை செய்யப்படலாம்! எந்த பாதிப்பும் யாருக்கும் வராம கச்சிதமாபிளான் பண்ணா. அந்தக் கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கத் தவறமாட்டார்.''

'டொடக்...' குரலைக் கேட்ட கல்யாண் முகத்தில் வியர்வைப் பந்தல்.

கல்யாண் கூறுவதை நம்பமுடியாது மீனா தவித்தாள்.

''கல்யாண் நீங்க சொல்றது நிஜமா?''

''பொய்யின்னு தள்ளிட முடியாது. இங்க இருக்கற அமலாவோட நடவடிக்கைகள்ளதான் அதை நாம தெரிஞ் சுக்க முடியும்.''

''அக்கா...'' - உடனேயே மீனாவின் அழைப்பு. அமலா நடந்து வந்தாள்.

''உக்காருங்க''

உட்கார்ந்தாள்.

''உங்ககிட்ட ஒரு முக்கியமாக விஷயம் சொல்ல ணும்'' பீடிகை போட ஆரம்பித்தாள்.

''என்ன மீனா?''

''அப்பா உங்க பேர்ல ஒரு கோடி ரூபாயை பேங்கில போட ஆசைப்படறாரு.''

மீனாவின் பேச்சில் அமலா என்னும் அவளின் விழிகள் ஒரு அசாத்திய பளபளப்பு. அதை உடனேயே அடக்கிக் கொண்டு எந்த உணர்ச்சியும் இல்லாத மாதிரி மீனாவைப் பார்த்தாள்.

''என்னக்கா ஒண்ணும் பேச மாட்டேங்கிறீங்க. உங்க அபிப்ராயம் என்ன?''

''என் அபிப்ராயத்துக்கு என்ன இருக்கு? நடக்கிறது எல்லாம் கனவு போல இருக்கு. உங்க அன்பு கிடைச்சதையே நான் பெரிசா நினைக்கறேன்!''

அமலாவின் பதிலைத் தொடர்ந்து மீனா எழுந்து கொள்கிறாள். கல்யாண் புரிந்தும் புரியாத பார்வையை மீனாவை நோக்கி வீசுகிறான்.

''சரிக்கா... யோசிச்சு உங்க பதிலை இன்னும் ஒரு மணி நேரத்துல சொல்லுங்க.''

மீனா எழுந்து கொண்டாள்.

கல்யாணும் புரிந்த மாதிரி நகர்ந்து கொண்டான்.

அமலா முகத்தில் சந்தோஷம் திகைப்பு என்கிற குழப்பமான உணர்ச்சிகள்.

மீனாவும் கல்யாணும் தனியாக ஒதுங்கினர்.

''என்னங்க... எதுக்கு இந்த கோடி ரூபாய் பேச்சு?''

புரியலையா? அவ என்ன பதில் சொல்வான்னு பார்க்கத்தான். அவ சோமன் நம்பியார் ஆளா இருந்தா இந்தத் தகவலைத் தர நிச்சயம் அவனுக்கு போன் செய்வா பாருங்க.

அவர்கள் கணிப்பு வீண் போகவில்லை. அமலா ரகசிய மாக டெலிபோனில் லாரன்ஸைப் பிடிக்க ஆரம்பித்திருந் தாள்.

''ஹலோ! லாரன்ஸ், நான் அமலா பேசறேன்.''

மீனாவும் கல்யாணும் பக்கத்து அறை தொலைபேசியில் அவர்கள் பேச்சுக்குக் காது கொடுத்திருந்தனர்.

* * *

## 8

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''குப்தாவிடம் கூட சில நல்ல மாற்றங்கள் ஏற்படக் காரணம் அவனது மகள் மீனாதான். தான் செய்யும் பாவம் தன் மகளின் தலையில் தான் விடியும் என்னும் நம்பிக்கை குப்தாவிற்கு வந்து விட்டதாகவே கருதுகிறேன். ஆனாலும் அந்தப் பெண் நிம்மதியாக வாழ முடியாது. விட மாட்டேன்.*

''என்ன பண்ணலாம்?'' கேள்வியை கண்ணில் தேக்கி கவலையை முகத்தில் தேக்கியபடி மீனா - கல்யாணைப் பார்த்தாள்.

''இவளை விரட்டக்கூடாது. விரட்டிட்டா காரியம் கெட்டுடும். சோமன் இன்னொரு கோல்மால் பண்ணுவான்.''

''கரெக்ட்! அதேசமயம் ஜாக்கிரதையாக இருக்கணும்! அப்பாவுக்கும் தெரிஞ்சிடக்கூடாது.''

''நீங்க சொல்றதும் சரிதான்.''

''ப்ளீஸ்! நீங்கள்ளாம் வேண்டாம். நீ போதும் எனக்கு.''

''ஆ ஃபிட்ரால் நான் ஒரு சர்வன்ட். எப்படி முதலாளி யம்மாவை வா - போ - நீன்னு கூப்பிடறது?''

''முதல்ல என்கிட்ட நீங்க உரிமையோட பேசணும். அப்புறமா அமலா விஷயத்துக்கு வரணும்.''

''வந்துட்டேன் மேடம். இப்போதைக்கு நம்ம பேச்சை அப்படியே மூட்டை கட்டுங்க.''

''கட்டிட்டு..?''

''வா சொல்றேன்.''

கல்யாண் குப்தா படுத்திருக்கும் அறை நோக்கி நடந்தான். பின்தொடர்ந்தாள் மீனா.

குப்தா புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்.

கல்யாண் வரவும் புத்தகத்தை மடக்கி வைத்தார்.

"என்ன கல்யாண்?"

"அடுத்த ஒர்க்?"

"என் பொண்ணு வந்துட்டதால அந்த ஒர்க்தான் முடிஞ்சிடிச்சு. அடுத்தது என்னன்னு கேக்கறியா?"

ஆமோதித்தான்.

"அவசியம் உடனே அதுலே இறங்கணுமா?"

"ஏன் சார் அப்படிக் கேக்கறீங்க?"

"நான் காரணமாத்தான் சொன்னேன்!"

"அது என்ன காரணம்?"

"சோமன் நம்பியார்...!"

"அவன்தான் ஆஸ்பத்திரியில எழுந்திருக்க முடியாத மாதிரி கிடக்கிறானே...?"

"அவன் எழுந்திரிக்காம கிடக்கலாம். ஆனா அவனோட திட்டங்கள் எழுந்து நடமாடி கிட்டுத்தானே இருக்கு - அமலா ரூபத்துல!"

அந்த பதில் கல்யாணையும் மீனாவையும் பிடறியில் தாக்கியது.

"என்ன சார் சொல்றீங்க?"

"இந்த டெலிபோன் நிறைய உண்மைகளை எனக்கு சொல்லியிருக்கு கல்யாண். இந்த வீட்டு போன் நம்பர் மூலமா யார் பேசினாலும் யாருக்கு போன்கால் வெளிய இருந்து வந்தாலும் இந்த கார்ட்லெஸ் தானும் சப்தம் போடும். அப்படி போட்டுத்தான் கொஞ்சம் முந்தி அமலா பேசினதையும் என்னைக் கேட்கும்படி பண்ணியிருக்கு..."

குப்தாவின் மூச்சுக்காற்றில் சரியான உஷ்ணம். அதன் காரணமாய் நெஞ்சில் நிஜமாலுமே பிசைவு. கண்களில் கூட லேசான செருகல்.

''அப்பா.... அப்பா...'' பதறிப் போனாள் மீனா.

கல்யாண் அவளோடு துணை சேர்ந்தான். மாத்திரையை வாயில் அழுத்தி தண்ணீரைக் குடிக்க வைத்தாள் மீனா. சில வினாடிகள் மௌனம். குப்தா மெல்ல நிமிர்ந்தார்.

கல்யாண் ஆறுதலாய் பேசினான்.

''சார்! இந்த உண்மை எங்களுக்கும் தெரியும். உங்களுக்குத் தெரிய வேண்டாம்னு பார்த்தோம். ஆனா தெரிஞ்சு போச்சு!''

''ஆமா! நிஜமான என் பொண்ணு இருக்காளா? இல்ல...''

''சார் அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதீங்க. நிச்சயம் உங்க பொண்ணு இருக்கணும். நான் கூட்டிட்டு வரேன். இப்போதைக்கு உங்களுக்கு தேவை மனோ தைரியம்.''

''அதுக்கு என்கிட்ட பஞ்சமில்லை கல்யாண்... ஆமா இந்த போலிய என்ன பண்ணப் போறீங்க?''

''இது எதுவரை போகுதுன்னு பார்க்கணும் சார்... இவ மூலமா தவறான தகவல்கள் அந்தச் சோமனுக்குப் போகணும் நாம மறுபக்கம் மற்ற வேலைகளை முடிப்போம்!''

மீனாவும் கல்யாணும் அதற்குமேல் எதுவும் பேசாமல் மெல்ல அங்கிருந்து கிளம்பி பால்கனி பக்கம் சென்றனர். அங்கிருந்து கீழே போர்டிகோவும், தோட்டமும் துல்லியமாகத் தெரிந்தது. தோட்டத்தில் அமலா செம்பருத்திச்

பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். பார்க்க வெறுப்பாக வந்தது.

அவள் பூக்களுடன் உள்ளே வந்தாள். தூசு தட்டிக் கொண்டிருந்த வேலைக்காரனிடம் பூஜை அறை எங்கே? என்று கேட்டாள். அவள் கை காட்டிய திக்கில் உள்ளே சென்றாள்.

பின்னாலேயே அவ்வளவையும் பார்த்தபடி மீனா.

''க்ரீச் க்ரீச்'' கதவைத் திறந்தாள் அமலா. நெடுநாட் களாக பூஜை காணாமல் பூட்டிக்கிடந்த அறை. சுவாமி படங்களில் எல்லாம் தூசும் தும்பும். அங்கங்கே நூலாம் படை. போனவள் மளமளவென்று சுத்தம் செய்ய ஆரம் பித்தாள். சின்ன மண்டபம். அதன் நடுவில் கிருஷ்ணர் விக்ரகம். அதைத் தொட்டுத் தூக்கிப் பார்த்தவள் பின்பு அங்கேயே வைத்துவிட்டு ஒரு செம்பருத்தியை கிருஷ்ணர் விக்ரகத்தின் காலடியில் வைத்தாள்.

பின் முடிந்த மட்டும் பூக்களை அங்கேயும் இங்கேயு மாகப் போட்டுவிட்டு ஓசைப்படாமல் கதவைச் சாத்திக் கொண்டு திரும்பினாள்.

மீனாவும் மாடிக்கு வந்து பால்கனியை அடைந்து கல்யாணை நிமிண்ட ஆரம்பித்தாள்.

''கல்யாண்.. போலி பூஜையெல்லாம் செஞ்சிச்சு. அவ பூஜை பண்ணப் போன மாதிரி தெரியலை. பூஜை யறையை நோட்டம் போடப் போன மாதிரிதான் இருந் துச்சு.''

''உங்க பூஜை அறைல என்ன இருக்கு... நோட்டம் போட''

''ஏன் கிருஷ்ணர் விக்ரகம் இருக்கே. ஐம்பொன் விக்ரகம்.''

''நிஜமாகவா? நான் பார்க்கலாமா?''

''தாராளமா. வாங்க காட்டறேன்.''

இருவரும் கீழிறங்கினர். பூஜையறையை நோக்கி நடந்தனர்.

உள்ளே மணிமண்டபம் நடுவில் புல்லாங்குழல் ஊதியபடி கிருஷ்ணன். கல்யாண் நெடுநேரம் அந்த விக்ர கத்தை உற்றுப் பார்த்தான். பின் வியந்தான்.

''உங்கப்பா கிருஷ்ண பக்தரா?''

''அப்படின்னு இல்லை. ஆனா இந்த கிருஷ்ண விக்ரகம் எனக்குத் தெரிஞ்சு நாலைஞ்சு வருஷமாத்தான் இருக்கு.''

கருத்தோடு அவனும் கிருஷ்ணர் விக்ரகத்தைத் தொட்டான். வழவழப்பாக சற்றே கருத்து ஆனால் நல்ல வேலைப்பாட்டோடு இருந்தது. அப்படியே சுழித்துப் பார்த்தபடி வெளியே வந்தார்கள். எதிரில் வந்தாள் அமலா. சற்றுப் புன்னகை தெரிந்தது முகத்தில்.

''மீனா'' என்று அருகில் வந்து மீனாவின் தோளில் கை போட்டாள். மீனாவுக்குச் சற்று நெருடலாக இருந்தது.

''மீனா எனக்கு இந்த வீடு ரொம்பப் பிடிச்சுருக்கு'' என்று பேச்சைக் கிளப்பினாள்.

''அப்படியா?''

''ஆமா... அப்பாவுக்கும் என் மேல எவ்வளவு அன்பு''

''ஆமா... ஆமா''

''அது சரி அந்தக் கோடி ரூபா...''

''எந்தக் கோடி ரூபா?''

''அதான் எனக்கு தர்றதா சொன்னியே அந்த...''

''ஓ அதுவா... அப்பாகிட்டே சொல்லியிருக்கேன் தருவார்... தரேன்.''

அமலா முகத்தில் உடனடியான மாற்றம். மழுப்பலாக சிரித்தபடி அங்கிருந்து நகர்ந்தாள். மீனா கடுகடுவென்று கல்யாணைப் பார்த்தபடி மாடி ஏறினாள்.

அமலா தன் அறையில் போய் விழுந்தாள். நெடு நேரம் நகத்தைக் கடித்தபடி யோசித்தாள். பிறகு எழுந்தாள். மெல்ல வெளியே வந்தாள். வீட்டில் அசாத்திய அமைதி குப்தா நல்ல உறக்கத்தில் இருந்தார். சாப்பிட்ட மாத்திரை அப்படி செய்துவிட்டிருந்தது.

அமலாவின் கைகள் தொலைபேசியை நாடி நம்பரை சுழற்றியது. மறுமுனையில் லாரன்ஸ் அகப்பட்டான்.

''என்ன அமலா?''

''பூஜையறையை தோட்டம் போட்டேன். கிருஷ்ணர் விக்ரகம் இருக்கு.''

சபாஷ்! அந்த விக்ரகத்துலதான் இருக்கு சாவி. குப்தா வோட தங்கப்பெட்டி சாவி அது. விக்ரகத்தோட காதுக் குள்ளே இருக்கு. இடப்பக்கமா விக்ரகத்தைச் சாய்ச்சா கைல வந்து விழும். அது குப்தா நேபாளத்துல வாங்கின சரக்கு. நம்ம பாஸ் தான் வாங்கிக் கொடுத்தார்.

''சரி! சாவிய எடுத்துடலாம். தங்கப்பெட்டி எங்க இருக்கு?''

''நீ சாவிய முதல்ல எடு. பெட்டி இருக்கிற இடத்தை பாஸ் பின்னால சொல்வார்.''

''அந்தக் கோடி ரூபாயைப் பத்திப் பேசினேன். மீனா அசடு வழியறா.''

அவசரப்படாதே! பணத்துக்கு ஆசைப்படற மாதிரி

காட்டிக்காதே! ஜாக்கிரதையா இரு. அடிக்கடி போன் பண்ணாதே! யாரும் ஒட்டு கேட்கலாம்!''

டெலிபோனை மடக்கிவிட்டு திரும்பினாள். வீட்டில் அதே அமைதி. பூஜையறை திறந்தே இருந்தது.

கால்கள் பூஜையறை நோக்கி நடந்தன.

கிருஷ்ணர் விக்ரகம் அமைதியாக வரவேற்றது.

கை தொட்டு கவிழ்த்தபோது சாவியும் கூட கையில் விழுந்தது.

குட்டிச்சாவி

முகத்தில் லேசான வெற்றிப் புன்னகை!

* * *

## 9

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*குப்தாவிற்காக நான் எல்லாத் தவறுகளையும் செய்தேன். தங்கமும் கடத்தினேன். அதற்கு அவன் எனக்குப் போட்ட பிச்சை வெறும் ஐயாயிரம் ரூபாய். குப்தாவிற்கு தங்கம் என்றால் அத்தனைப் பிரியம்.*

*குப்தா அடிக்கடி சொல்வான். நான் இறந்த பிறகு தங்கத்தாலேயே எனக்குச் சிலை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் என் ஆன்மா சாந்தியடையும் என்று. அந்த அளவு தங்கப் பைத்தியம் அவன்.*

*அவனிடம் எனக்குத் தெரிந்து பல நூறு கிலோ தங்கமாவது இருக்க வேண்டும்.*

கார் சீறியது. டிரைவிங் சீட்டில் மீனா.

கல்யாணின் தீர்க்கம் மீனாவுக்கு சந்தோஷம் தந்தது. மனதில் அதன் காரணமாக ஒரு நாலு ஆங்கில எழுத்துக்களின் உருத்திரளல்.

இந்த வேளையில் மட்டும் இவன் துணை இல்லாமல் போயிருந்தால் தன் கதி என்னவாயிருக்கும்? காரிடம் அசாத்திய வேகம்.

கவனம் சாலையில் இருந்ததால் மார்புமேல் இருந்த சேலை கள் குடித்தவன் போல் சுருண்டு மடிமேல் விழுந்திருந்தது.

சிவப்பு பிளவுசுக்குள் மெத்தென்று தெரிந்த சங்கதி கல்யாணின் வாலிபத்தை வம்புக்கிழுத்தது. மார்பா அது... இல்லை பவர் ஸ்டேஷனா?

கல்யாண் தடுமாற ஆரம்பித்தான். குருடன் தவற விட்டதைத் தேடுவதைப் போல் மனதில் கண்ணியத்தைத் தேடி மெல்ல நிமிர்ந்து வேறு பக்கம் பார்க்க ஆரம்பித்தான்.

''மீனா மேலாக்கை சரி பண்ணிக்கோ'' என்றான் உலர்ந்த உதட்டோடு. மீனாவுக்குள் சட்டென்று பெண்மையின் கூச்சம் உயிர்த் துடிப்பெடுத்தது. மாராப்பு சரியானது. அதனால் காரின் வேகம்கூட குறைந்து போனது. அவனை ஓரம் சாரமாகப் பார்த்தாள். அவன் வியர்த்திருந்தான்.

''கல்யாண்'' என்றாள் குழைவான குரலில்.

''என்ன?''

''இப்படியா ரசனை கெட்ட ஜென்மமாட்டம் பேசறது!''

''கண்ணியமா நடந்துகிட்டா ரசனை கெட்ட ஜென்மமா... ஜொள்ளு விடணும்கறியா?''

''விடணும். ரசனை அதிகமானா ஜொள்ளு ஜொள்ளு விட்டாத்தான் நார்மல் மனுஷன். இல்லாட்டி ஏதோ கோளாறு இருக்குன்னு அர்த்தம்.''

''இந்தக்காலத்துல ஆம்பளைங்கள பொம்பளைங்கதான் கெடுக்கறாங்கன்னு சொல்றது வாஸ்தவம் தான்.''

''யோவ்... கேட்ட கேள்விக்கு பதில்சொல்லாம தாத்தா மாதிரி கருத்தா சொல்ற?''

''என்னது யோவா? விட்டா வாடா போடான்னுடுவே போலிருக்கே...''

''ஒரு தப்பும் இல்லை. ஐ ஹேவ் ரைட்ஸ்.''

கல்யாண் மௌனமாய் அவளைப் பார்த்தான். மிக மிகப் பொருள் பொதிந்த பார்வை. அவனுக்குள்ளேயும்

இப்பொழுது நான்கெழுத்தின் ஒரு ஆங்கிலச் சொல்! அதை வெளியே சொல்லப் பார்த்து முடியாமல் மடங்கினான்.

''கல்யாண் நான் ஒரு படுபாவியோட பொண்ணு. நிம்மதி துளிகூட இல்லாத பொண்ணு... திரும்பின பக்க மெல்லாம் துரோகிங்க. நடுவுல நான் பார்த்த ஒரு ஜென்டில் மேன் நீங்க. நேசம் எப்படி வராம போகும்...''

அவள் கேள்வி அவனை என்னவோ செய்தது. மெல்ல இதழ் பிரித்தான்.

''மீனா நான் இப்ப டூட்டியில் இருக்கேன். பர்சனல் லைஃப் பற்றி யோசிக்கிற நிலைல இல்லை.''

''எப்பதான் யோசிப்பீங்க?''

''கொஞ்சம் டயம் கொடு.''

''நிறையவே எடுத்துக்குங்க. ஆனா நல்ல முடிவா சொல்லுங்க.''

கார் சர்ச் கட்டிட சிலுவை நிழலில் தேங்கி நின்றது.

கதவைத் திறந்துகொண்டு இறங்கி நடந்து வருபவர் களைப் பார்க்கும் வின்சென்ட் மாணிக்கம் முகத்திலோ கலவரத்தின் கூடாரம். யதார்த்தமாய் எட்டிப் பார்க்கும் விக்டோரியாவின் இதயத்தில் கூட இடிபாடு.

''குட்மார்னிங் பாதர்.''

''யெஸ்... வெரிகுட்மார்னிங். அமலா எப்படி இருக்கா?''

''நல்லா இருக்கா பாதர். வாங்க உள்ள போய் பேசு வோம்..... ''

''பரவால்ல இங்கேயே...''

''நோ பாதர். இப்படி நின்ன இடத்துல பேசற விஷயம் இல்லை இது!''

வின்சென்ட் மாணிக்கம் வேறு வழியின்றி உள்ளே செல்ல விக்டோரியாவும் பின் தொடர்ந்தாள். உள்ளே

போன வேகத்தில் கோபமாய் ஒரு முறை முறைத்தான் கல்யாண். முறைந்த வேகத்தில் பாக்கெட்டில் கையை விடவும் வாகாக வந்தடங்கியது அதி நவீன பிஸ்டல்.

''நோ... என்ன இது... ஏன் இப்படிப் பண்றீங்க?'' நடுங்கினார் வின்செண்ட் மாணிக்கம்.

''வளவள பேச்சு வேண்டாம். போலி அமலாவை அனுப்பி எங்களை ஏமாத்தினது ஏன்? நிஜ அமலா இப்ப எங்கே?''

''நான் சொல்றேன். நான் சொல்றேன்...'' ஓடி முன் வந்தாள் விக்டோரியா.

''விக்டோரியா வேண்டாம். அந்த லாரன்ஸ் பொல்லா தவன்'' பாதரிடம் அலறல்.

''நான் அதை விடப் பொல்லாதவன்.''

கல்யாணின் வேகத்தைப் பார்த்து மீனாவே அசந்து விட்டாள். பாதரிடம் பேச்சில்லை - நடுக்கம்.

''தம்பி நான் சொல்லிடறேன். பாதர் தனக்காக இந்தத் தப்பைப் பண்ணலை. இந்த ஆஸ்ரமத்தை நடத்தப் பண மில்லை. அதனால வேற வழியில்லாமதான் செய்தார். இவரை இப்படி நடக்க வெச்சவன் லாரன்ஸ்ங்கறவன்'' விக்டோரியா கதறாத குறை.

''ஒரு பாதர் இப்படிச் செய்யலாமா?''

''எண்பது வயித்துக்காக செய்துட்டார். தப்புதான்!''

''தப்புன்னா தீர்ந்துடிச்சா... உண்மை அமலா இப்ப எங்கே?''

''பத்ரமா இங்க இருக்கா.''

''எங்கே... எங்கே...? மீனா வேகமாக முன் வந்தாள்.''

''காட்றேம்மா... ஆனா ஒரு விஷயம்...''

''என்ன?''

''லட்ச ரூபா வாங்கிட்டோம். கொடுத்தவனும் எச்சரிக்கை செய்துட்டு போயிருக்கான். இந்த நிலையில் அந்தப் பொண்ணும் திரும்பி வந்தா என்ன நடக்குமோன்னு பயமா இருக்கும்மா...''

''ஒண்ணும் நடக்காது. அந்தப் பொண்ணு திரும்பி வரமாட்டா. இங்க நாங்க உங்களைப் பார்த்ததோ உண்மை யைத் தெரிஞ்சுகிட்டதோ கூட யாருக்கும் தெரியாம பார்த் துக்குவோம். உண்மையான அமலாவைக் காட்டுங்க.''

அமலா துணி தைத்துக் கொண்டிருந்தாள். வந்து நிற்கும் விக்டோரியாவை நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன மாம்?''

''கொஞ்சம் வர்றியா?''

''எங்க மாம்''

''நீ அனாதை இல்லை அமலா... உனக்குப் பேரண்ட்ஸ் இருக்காங்க. குறிப்பா அழகா ஒரு தங்கை இருக்கா!''

''என்ன மாம்... என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படி திடீர்னு வந்து ஸ்டண்ட் அடிக்கறீங்க!''

''இல்லடா கண்ணு... நான் சொல்றது மேரிக்கு பொதுவான சத்யம்''

அமலா விக்டோரியாவின் தீர்க்கத்தில் திக்கு முக்காடிப் போனாள்.

விக்டோரியா அமலாவை அவர்களிடம் அழைத்து வந்தாள். மீனா அமலா பார்வையிலேயே ஆயிரம் கேள்வியை கேட்டுக் கொண்டார்கள்.

''நான் ஒரு கேள்வி கேட்கவா?'' என்றார் பாதர்.

''என்ன பாதர்?''

''லாரன்ஸ் எதுக்கு போலியான ஒரு பெண்ணை உங்க வீட்டுக்கு அனுப்பணும்.''

''இந்த கேள்விக்கு ஒரு வரியில் பதில் சொல்ல முடியாது பாதர். சுருக்கமா சொல்லப் போனா நடக்கறது ஒரு தர்மயுத்தம். அதுல இந்த லாரன்ஸ் ஒரு சைத்தான்!''

''கர்த்தர்தான் நமக்குத் துணை செய்யணும்!''

''நிச்சயம் செய்வார். நாங்க நிஜமான எங்க அமலாவை கூட்டிக்கிட்டு போகலாமா?''

''தாராளமா... ஆனா அந்த லாரன்சுக்கு நிஜ அமலா உயிரோடு இருக்கிறது தெரியாது. செத்துட்டதா சொல்லி யிருக்கேன். பார்த்து நடந்துக்குங்க.''

''நாங்க பார்த்து நடந்துக்கறோம். நீங்களும் பார்த்து நடந்துக்குங்க. இந்தாங்க செக்...'' மீனா குறுக்கிட்டாள்.

''எதுக்கு?''

''இனி பசி பட்டினின்னு பாவங்களோட ஒப்பந்தம் செய்துக்காதீங்க. இது பிளாங்க் செக் உங்க ஆசிரமத் துக்கு தேவையான நிதியை எழுதிக்குங்க...''

பாதர் வின்சென்ட் மாணிக்கத்திடம் திகைப்பும் சந்தோ ஷமும் போட்டியிட்டது. நடுங்கிய கைகளால் பெற்றுக் கொண்டார்.

நிஜ அமலாவுக்கு நடப்பதெல்லாம் புதிர் போல இருந்தது.

''இங்க நடக்கறது எதுவும் எனக்கு என்னன்னே தெரியலை'' என்றாள்.

''அக்கா நான் தெரிவிக்கிறேன்.''

''நீதான் என் தங்கையா? இவ்வளவு நாள் எங்க போயிருந்தே. இப்ப மட்டும் எதுக்காக தேடி வந்திருக்கே?''

''எல்லா கேள்விக்கும் பதிலைச் சொல்றேன். என் கூடவா.''

''திடீர்னு இரண்டு பேர் வந்து அக்கான்னுட்டா நான் உங்க கூட வந்துடுவேனா? இந்த ஆசிரமத்தை விட்டு ஒரு நாளும் வெளியே வர மாட்டேன்.''

''அமலா நீ என்ன பைத்தியமா... போடி அவங்க உன் நல்லதுக்கு சொல்றாங்க. உனக்கு நல்ல காலம் வந்திருக்குடி. போ...!'' விக்டோரியா விரட்டினாள்.

''மிஸ் அமலா. நடக்கறது நாடகம் இல்ல. ஆனா நாடகம் மாதிரிதான் இருக்கு நடந்த எல்லாத்தையும் சொல்றேன். அப்புறமா எங்ககூட நீங்க வர்றதும் வராததும் உங்க விருப்பம்.''

கல்யாண் சகலத்தையும் விவரிக்க ஆரம்பித்தான். குப்தாவின் செயல்கள் பாவமன்னிப்பு பரிகாரங்கள் சோமன் நம்பியாரின் குறுக்கீடுகள் அதில் அவனது கடப்பாடுகள்.

கேட்கக் கேட்க அமலா மட்டுமல்ல, பாதர் வின்செண்ட் மாணிக்கமும் விக்டோரியாவும் வாய் பிளந்து விட்டார்கள்.

''ஓ.கே. நாம இப்ப எங்க போறோம்...'' அமலா கேட்டாள்.

''அப்பாவைப் பார்க்க. ஆனா அமலாவா இல்ல.''

''பின்ன யாரா?''

''சொல்றேன்'' என்றான்.

பேசி விட்டுக் கிளம்பினார்கள். தயங்கித் தயங்கி நடந்து காரில் ஏறி அமர்ந்தாள் அமலா. கண்களில் கண்ணீர்.

விக்டோரியாவுக்கும் துக்கம் தொண்டையைப் பிசைந்தது. பாசம் கண்ணில் உப்பைக் கரைத்தது.

காரும் சீற ஆரம்பித்தது.

* * *

## 10

**சாம்சனின் டைரியிலிருந்து.....**

*''குப்தாவிடம் இருக்கும் தங்கத்துக்கு ஒரு அளவே கிடையாது. தங்கத்தில் எவ்வளவோ ஜாதிகள் உண்டு. அதில் பசும்பொன் ஜாதி தங்கமாகப் பார்த்து கிலோ கணக்கில் சேர்த்து வைத்துள்ளான் குப்தா ''உயிரை விற்று கூடத் தங்கம் வாங்குவான் குப்தா! அத்தனை தங்கப் பைத்தியம் அவன்!''*

ஆங்காங்கே பெருக்கல் குறி கூட்டல் குறியாய். சோமன் நம்பியார் உடம்பில் காயக்கட்டுகள் எழுந்து நடமாட இன்னும் சில மாத காலம் ஆகலாம் என்று சொல் லும்படியான கட்டு.

கட்டைப் பார்த்தபடியே கர்ணகடூரமாய் லாரன்ஸை முறைத்தார் சோமன் நம்பியார்.

''அந்தப் பயல சும்மா விடக்கூடாது. அவனையும் இதே மாதிரி உடம்புல மாவுக்கட்டு போட்டு படுக்க வைக்கணும் அப்பத்தான் எனக்கு திருப்தி.''

''அந்தக் குட்டி அங்க போய் நல்லா செட் ஆயிட் டாளா?''

''ஆயிட்டா... அந்த குட்டி சாவியைக் கூட எடுத் துட்டா...''

''வெரிகுட் அடுத்து தங்கப்பெட்டி கிட்ட அனுப் பணும். ஆமா, குட்டி நம்பிக்கையான பொண்ணா? அவ்வ ளவு தங்கத்தையும் எப்படி எடுத்துகிட்டு வருவா?''

''அதெல்லாம் பயங்கரமான பொண்ணு சார். எப்படி

யாவது எடுத்துக்கிட்டு வந்துடுவா. நீங்க இடத்தை மட்டும் சொல்லுங்க.''

''அதே பூஜை அறையில அந்த கிருஷ்ணர் விக்கிரகம் உள்ள மணி மண்டபத்தை நகர்த்திட்டுப் பார்த்தா கீழே ஒரு கதவு தெரியும். அந்தச் சாவி அந்தக் கதவைத் திறக்கும். உள்ள பெரிய டிரங்க் பெட்டி. அதுல தான் பாளம் பாளமா தங்கம் வெச்சிருக்கான் குப்தா. நானும் அவ்னும் தான் அடுக்கி வெச்சோம்.

''இதுபோதும் சார் எனக்கு...''

''லாரன்ஸ்! தங்கம் இங்க வரணும். நீ ஏதாவது கோல்மால் பண்ணே...''

''சேச்சே! என்ன சார் இப்படிச் சொல்லிட்டீங்க. நான் உங்க நாய் சார்... உங்களுக்குத் துரோகம் செய்வேனா?''

''செய்ய முடியாதுடா செய்ய முடியாது. இந்த சோமன் பவர் அப்படி'' படுத்த படுக்கையிலும் சோமனிடம் கித்தாய்ப்பு. லாரன்ஸ் முகத்திலோ ஒரு அசாத்திய வெறி. தனது போலி அமலாவை சந்திக்கும் ஆவல்.

நல்லவேளை தொலைபேசியில் அவளே அழைத்தாள். குப்தா நல்ல உறக்கத்தில் இருந்தார். நறுக்கென அவளைப் பிடித்து தங்கம் உள்ள இடத்தையும் சொன்னான் லாரன்ஸ்.

''பார்த்து எச்சரிக்கையா நடந்துக்கோ... நான் உனக்கு ஒரு அசிஸ்டெண்டை அனுப்பறேன். அவன் உன்னோட ஆஸ்ரம நண்பன்னு சொல்லி சேர்த்துக்கோ என்ன?''

''அந்த நண்பன் பேர்?''

''விஸ்வம்''

''சந்தோஷம். விஸ்வம் வரட்டும். வாரிட்றேன் அந்த தங்கப் பாளங்களை...''

தொலைபேசியை முடக்கி விட்டு திரும்பினவளுக்கு பூஜை அறையும் திறந்தபடி காத்திருந்தது. யாருமில்லாத சூழ்நிலை மெல்ல உள்ளே நுழைய ஆரம்பித்தாள். தங்கத் தைப் பார்க்கும் கண்களில்.....!

பூஜை அறையில் படு அமைதி. சுடர் விளக்கு மட்டும் ஜிவுஜிவு என்று எரிந்தபடி ஒளி பாய்ச்சிக் கொண்டிருக் கிறது.

போலி அமலாவிடம் வேகம்.

பீடத்தை விட்டு சுலபமாக விக்ரகத்தை நகர்த்த முடிந்தது. கிருஷ்ணர் நின்ற இடத்துக்குக் கீழே ஒரு சாவித் துவாரம் அதைத் திறக்கவும் ஒரு பெட்டியின் பாட்லாக் மூடி தெரிந்தது. பாட்லாக்கை விலக்கி பெட்டி யின் மூடியைக் திறந்தாள்...

தங்கப்பாளமா அது? செவ்வக செவ்வகமாய் வெளிச்சப் பட்டையாய் ஜொலிக்கிறதே...! அமலா வியர்த்து விறுவிறுத்து கண்களை இமைக்க மறந்த அந்த நொடி களில் பூஜை அறைக்கதவு தட்டப்படும் சப்தம்.

அமலா வினாடியில் சகலத்தையும் இழுத்து மூட ஆரம்பித்தாள். கிருஷ்ண விக்ரகத்தைத் தூக்கி நிறுத்தி அதன் காதுக்குள் சாவியைப் போட்டு மூடி விட்டு ஒன்றும் தெரியாதவள் போல் அறைக்கதவைப் போய் திறந்தாள்.

அறையின் மறுபக்கத்தின் கல்யாண்!

''நீங்களா...?'' அமலாவிடம் சிலாகிப்பு

''வேற யார்னு நினைச்சீங்க?''

''இல்ல யாராவது வேலைக்காரங்களான்னு பார்த்தேன்.''

''ஆமா பூட்டிக்கிட்டு உள்ள என்ன பண்றீங்க?''

''தியானம்!''

''ரொம்ப சந்தோஷம்... இந்த பூஜை அறையைத் திறந்தே பல வருஷம் ஆச்சாம். இப்ப இதுல தியானம் அது இதுன்னு நடக்கறத நினைச்சா சந்தோஷமா இருக்கு. கீப் இட் அப்.''

பாராட்டி விட்டு அப்பால் நகர்ந்தான் கல்யாண். நேரே தன் அறைக்குள் போய் விழுந்தான். அங்கே காத்திருந்தாள் மீனா - கூடவே நிஜ அமலா.

நிஜ அமலா முகத்தில் வண்டி வண்டியாய் பீதி. ஆஸ்ரமத்துக்கு அப்பால் இத்தனை பெரிய வீடு வசதி என்று எதையும் கனவில் கூட கண்டிராத பீதி அது.

''ஏன் கல்யாண்... என்ன பண்றா அந்தப் போலி?''

''தியானம் பூஜைன்னு காதுக்குப் பூ சுத்தறா... பூஜை அறையில் அவளுக்குத் தேவையான ஏதோ ஒண்ணு இருக்கணும்.''

''எதுவா இருக்கும்? அப்பாகிட்ட பேசினா ஏதாவது ஐடியா கிடைக்கலாம். அக்கா... நீதான் அமலான்னு காட்டிக் காதே! அப்பாவைப் பாத்துக்க வந்த நர்ஸ்னு சொல்லிட றேன். அப்பாவுக்கு நல்ல துணையாக இருந்து அவரை ஜாக்கிரதையா பார்த்துக்கோ - நாங்க அந்தப் போலிக்கு ஒரு வழி பண்றோம்!''

அமலா முகத்தில் அதைக் கேட்டு ஒரு பக்கம் சந்தோஷம். மறுபக்கம் மிரட்சி.

குப்தா தூக்க மாத்திரை உதவியோடு தூங்கிக்

கொண்டிருந்தார். மூச்சுக் காற்றில் குப்பென்ற மருந்தின் நெடி. அவரது அறைக்குள் மூவரும் நுழைந்தனர்.

மீனா அவரை எழுப்ப முயன்று தோற்றுப் போனாள்.

அமலாவின் பார்வையோ அவர்மேலேயே இருந்தது.

தன்னை இந்த உலகுக்கு இழுத்து வந்த காரண கர்த்தா! ஒரு குப்பைத் தொட்டியில் விட்டெறியும் அள வுக்கு கொடூரமனம் கொண்டவரா இவர்? அமலா இமை கள் படபடக்கப் பார்த்தாள். மீனா அவள் அருகில் சென்று வாஞ்சையாக கையைப் பற்றி குப்தாவின் படுக்கையில் ஒரு ஓரமாக அமரவைத்து அப்பாவைக் காட்டினாள்.

காட்டும்போது கண்களில் ஈரப்பசை.

''அப்பா இப்ப ரொம்ப நல்லவர்...'' என்றாள் மெலி தான குரலில். கல்யாண் அந்தக் காட்சியைப் பார்த்து நெகிழ்ந்து போனான்.

''ப்ளீஸ்... இனிமே அப்பாவுக்குத் துணையாக இரு. இது இனிமே உன் வீடு. இங்க இருக்கிறது எல்லாம் உன் சொத்து!''

கல்யாண் நெகிழ நெகிழப் பேசுவதை கண்கள் பனிக்க அங்கீகரிக்கிறாள் அமலா.

''நான் ரொம்ப கொடுத்து வச்சவ...!'' அவளிடமிருந்து பதில் கருத்து. ஆமோதித்தது காலிங் பெல்.

''யாருன்னு பார் மீனா...'' கல்யாணின் கட்டளையை தொடர்ந்து எட்டிப்பார்த்தாள். ஒரு முப்பது வயது குறுந் தாடி இளைஞன் கைவசம் சூட்கேஸ் ஹோல்டால் பேக் சகிதம்.

''யார் நீங்க?''

''ஐ ஆம் விஸ்வம். அமலாவோட ஃபிரண்ட்''

அவன் சொல்லும்போதே போலி அமலாவும் பூஜை அறையை விட்டு வந்துவிட்டாள்.

''ஹாய் விஸ்வம்...'' என்று அவனை பெரிதாக வரவேற்றாள்.

''இவரை உனக்கு தெரியுமாக்கா...?''

''நல்லா தெரியும் ஆஸ்ரம பழக்கம். வா, விஸ்வம் நாம மாடிக்குப் போவோம்.''

போலி விஸ்வம் என்னும் அந்த குறுந்தாடியை உரசியபடி மாடிப்படி ஏறுவதில் மீனாவுக்குள் திராவகம் கரைந்தது.

படி ஏறும் அவள் கிசுகிசுப்பாக அவன் காதோரம் கேட்டான்.

''தங்கம் பத்ரமா இருக்குதானே?''

''இருக்கு விஸ்வம். செங்கல் செங்கல்லா எத்தனை கட்டிங்க அடேங்கப்பா...''

''வாயைப் பிளக்காதே! இன்னிக்கு ராத்திரியே அதை இங்க இருந்து கிளப்பியாகணும். சோமன் நம்பியார் கட்டளை இது.''

''நோ பிராப்ளம் விஸ்வம். குப்தாவுக்கு வழக்கத்துக்கும் மாறா நிறைய ஸ்லீப்பிங் டேப்லட்ஸ் தந்து தூங்கப் பண்ணியிருக்கேன். நாளைக்குக் காலை அந்த ஆள் கண் விழிச்சா அதிகம்.''

''சோமன் நம்பியாரோட பிளான்ல முதல் குறி தங்கம். அடுத்த குறி கோடி கோடியான கறுப்புப்பணம். அதையும் எடுத்துக்கொண்டு போயிடணும். முடியும்தானே...?''

''நிச்சயம்?'' போலி அமலாவின் உத்தரவாதத்தைத் தொடர்ந்து விஸ்வம் எனும் அந்தக் குறுந்தாடி அறையின் மெத்தென்ற படுக்கையில் விழுந்தான்.

''நான் நல்லபடி வந்து லாக் ஆகிட்டதை சோமனுக்கு சொல்லணுமே...'' என்றான்.

''சொல்லிட்டா போச்சு...'' போலி தொலைபேசியை நெருங்கி திருகத் தொடங்கினாள். விஸ்வம் ரீசிவரை வாங்கிக் கொண்டான். நடுவில் கல்யாண் காது கொடுத்துக் கொண்டிருப்பது தெரியாமல்.

* * *

# 11

**சாம்சனின் டைரியிலிருந்து.....**

*''எனது ஆயுள் தண்டனைக் காலம் விரைவில் முடிந்து விடும். நான் வெளியே வந்ததும் என் முதல் வேலை குப்தாவை ஒழிப்பதுதான். அதற்குமுன் குப்தாவின் கண் எதிரிலே நான் ஒரு கொடுமையான செயலைச் செய்தாக வேண்டும். எப்படி என் மகளை என் மாப்பிள்ளையிடம் இருந்து பிரித்து அவள் இன்று பிரிந்து வாழக் காரணமாக இருந்தானோ அதே போல் அவன் மகள் விஷயத்திலும் நான் கொடுமை செய்வேன். செய்தால்தான் என் ஆத்திரம் அடங்கும்.''*

''ஹலோ பாஸ் நான் விஸ்வம் பேசறேன்!''

''என்ன விஸ்வம் நல்லபடியா போய் செட்டில் ஆயிட்டியா?''

''ஆன மாதிரிதான் பாஸ். நம்ப மார்க்ரெட் அதான் அமலா... தங்கத்தை ட்ரேஸ் பண்ணி வெச்சிருக்கா... நைட்டே தாளிச்சிடலாம்னு இருக்கேன்!''

''பார்த்து பண்ணு. குப்தா ஒண்ணும் ஈனா வானா கிடையாது. கல்யாண்ணு அங்க ஒரு 007ஐ எஸ்கார்டா வெச்சிருக்கான். ஜாக்கிரதையா சாதிக்கணும்.''

''நிச்சயமா!'' போனை முடக்கினான். நிறைய வியர்த்திருந்தான். ''மார்க்ரெட் நான் உடனே குளிக்கணும்'' என்றான்.

''இங்கே நான் அமலா. மார்க்ரெட்லாம் வேண்டாம்'' அவள் எச்சரித்தாள்.

''ஓகேம்மா... பாத்ரூம் எங்கே...'' கை காட்டினாள்.

டவலுடன் உள் நுழைந்தான். அதே சமயம் கல்யாண் அவனது இருப்பிடத்தில்...

''மீனா... உங்கப்பா நிறைய தங்கம் வெச்சிருக்கார் போல இருக்கே.''

''மே பீ இருக்கலாம். அப்பா ஒரு தங்க பைத்தியம்...''

''அதுக்கு இல்ல ஆபத்து வந்திருக்கு!''

''என்ன கல்யாண் சொல்றீங்க... விவரமா சொல்லுங்க...''

போனில் கேட்டதை விவரமாக சொன்னான். மீனா அதைக்கேட்டு விழிகளை அகட்டித் திறந்தாள்.

''கல்யாண் ஹவ் வி வில் கோ டூ ஸ்டாப் திஸ் கிரேட் ராபரி?''

''யோசிப்போம்'' என்றான் கல்யாண்.

இரவு நேரம்!

டென்மார்க் ரேடியம் கடிகாரத்தின் சங்கீத சப்தம் மணிபதினொன்றை உணர்த்தியது.

அந்த பங்களாவே உறைந்து போன அமைதியில் இருந்தது. தன் அறையில் இருந்து போலியும் விஸ்வமும் மெல்ல எட்டிப் பார்க்கிறார்கள். மாடிப்படிகள் இருவரின் வருகைக்காக காத்திருக்க, அதில் இருவரின் பிரவேசம் விஸ்வத்தின் கைகளில் சூட்கேஸ்!

பூஜை அறைக்கதவு கூட எண்ணெய் போட்டது போல் சப்தமின்றி திறந்து கொள்கிறது. உள்ளே நுழைந்து கதவைசாத்திக் கொண்டு பெருமூச்சு விடுகின்றனர் இருவரும்.

போலி அமலா கிருஷ்ண விக்கிரகத்தின் காதில் இருந்து சாவியை எடுத்து பீடத்தின் பூட்டை விலக்கி பாட்

லாக்கை நீக்கி பீடப் பள்ளத்தில் ஜொலிக்கும் தங்கத்தை தூக்க மாட்டாமல் தூக்கி வெளியே எடுத்தாள்.

''வாவ்... குப்தா தான் எவ்வளவு சாமாத்தியசாலி. தங்கத்தை எப்படியெல்லாம் பதுக்கி வெச்சிருக்கான் பார்த்தியா மார்க்ரெட்''

மொத்த தங்கமும் வெளிய வந்து சூட்கேஸ் நிரம்பிய போது ஒரு விதமான சிரிப்பு விஸ்வத்திடம்.

''க்விக் மார்க்ரெட்! எல்லாத்தையும் பழையபடி அந்தந்த இடத்துல வை! நாள் கிளம்பறேன்! உன் நடிப்பு தொடரட்டும்!'' பேசியபடி சூட்கேஸ் தூக்க மாட்டாமல் தூக்கியபடி நிமிர்ந்தான் விஸ்வம். நிமிர்ந்த வேகத்தில் அவ்வளவு தங்கமும் தரையில் சிதற பெட்டியைப் போட்டு விட்டு வெல வெலக்க ஆரம்பித்தான் - எதிரில் துப்பாக்கியும் கையுமாய் கல்யாண்!

* * *

## 12

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''என் பழிவாங்கும் பட்டியலில் குப்தாவிற்குக் கூட இரண்டாவது இடம்தான். சோமன் நம்பிக்குத்தான் முதலிடம். அவன் மட்டும் இந்தத் தேசத்துக்கு அதிபதியாக இருந்தால் இந்நேரம் இந்த நாட்டைப் பார்ட் பார்ட்டாய் பிரித்து நல்ல விலைக்கு விற்றிருப்பான். அத்தனைக் கொடூரன்!''*

துப்பாக்கியும் கையுமாய் எதிரே தெரியும் கல்யாணை சற்றும் எதிர்பார்த்திராத அதிர்ச்சியில் விஸ்வமும் போலி அமலாவும் திணறத் தொடங்க - நொடிகளை வீணாக்காமல் ஓடிச் சென்று தங்கத்தை எடுத்து பெட்டியில் வைத்து அடுக்கத்தொடங்கினாள் மீனா.

''மிஸ்டர் விஸ்வம் எதையாவது பண்ணி பரலோகத்துக்குப் போயிடாதிங்க. ஒழுங்கா ஒத்துழைச்சா உயிருக்கு உத்தரவாதம் தருவேன். இல்லேன்னா உங்களைப் போட்டு தள்ளிட்டு நீங்க இரண்டு பேரும் தங்கத்தோடக் கம்பி நீட்டிட்டதா சோமனுக்கு மெஸேஜ் பாஸ் பண்ணிடுவேன். எது உங்களுக்கு வசதி?'' கல்யாணின் நறுக்குத் தெரிந்த கேள்விமுன் அநியாய திணறல் விஸ்வத்திடம்.

''அம்மா தாயே மார்க்ரெட்... கொஞ்சம் அண்ணன் கூடச் சேர்ந்து நில்லு பார்ப்போம்...''

''போலி அமலா விஸ்வத்தை நெருங்கி நின்றாள் கல்யாண், மீனா வசம் துப்பாக்கியைத் தந்தான். பின் ஒரு கயிற்றை எடுத்து இருவரையும் கட்டத் தொடங்கினான்.

அப்படியே மாடியில் உள்ள தனியறைக்கு இருவரையும் ஓட்டிச் சென்றான்.

மாடியின் ரகசிய அறை நாற்காலியில் ஒரு பணயக் கைதி போல் கட்டப்பட்டார்கள். கல்யாண் தொலைபேசியைச் சுழற்றுகிறான். விஸ்வம் எதிரிலேயே அவனைப் போலப் பேச ஆரம்பிக்கிறான்.

''பாஸ் தங்கத்தைத் திட்டமிட்டபடி வெளியே எடுத்தாச்சு. அடுத்து என்ன பண்ண?''

''சபாஷ்... அவ்வளவையும் ராயபுரம் பங்களாவுல பதுக்கிட்டு என்னை ஹாஸ்பிடலுக்கு வந்து பார்! ஆமாம். எவ்வளவு பார் இருந்துச்சு?''

சோமன் இப்படி ஒரு கேள்வி கேட்பான் என்று எதிர்பார்க்கவில்லை. ''பாஸ் பார்த்துட்டுச் சொல்றேன் பாஸ்...'' சமாளிக்க ஆரம்பித்தான் கல்யாண்.

''முட்டாள் மொத்தம் முப்பத்து மூணு பார் இருக்கும். வெயிட் போட்டா நூற்றி நாற்பது கிலோ இருக்கணும். ஒரு மில்லி கிராம் குறைஞ்சாலும் நீதான் பதில் சொல்லணும்.''

''பாஸ் என் நேர்மைமேல் உங்களுக்குச் சந்தேகமா?'' மிடறு விழுங்கினான்.

''நான் என் நிழலைக்கூட நம்ப மாட்டேன். ஞாபகம் வெச்சுக்கோ! நாளைக்கு நான் குப்தா கூடப் பேசப் போறேன். அவன் தலைல இந்தத் தங்கத் திருட்டைத்தான் முதல் இடியா இறக்கப் போறேன்.

மார்க்ரெட் மட்டும் மாட்டிக்காம இருக்கணும். மாட்டிக்கிட்டா... அடுத்த நொடியே எமனோட விருந்து அவ. ஜாக்கிரதையா இருக்கச் சொல்...''

சோமனிடம் இருந்து ஏகப்பட்ட எச்சரிக்கையுடன் தொலைபேசி முடங்கிக் கொண்டது.

நிமிர மாட்டாமல் நிமிர்ந்தான் கல்யாண். முறைக்கும் விழிகளுடன் விஸ்வம் தன்னைப் பார்வையால் சுட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

சுதாரித்துக் கொண்டே சிரித்தான்.

''எதுக்குச் சிரிக்கறே?''

''மொத்தத்துல தங்கத்தை வெளிய எடுத்தாச்சு... அதை ராயபுரம் பங்களாவுல பதுக்கச் சொல்லி சோமன் நம்பி சொல்லிட்டான். நான் அப்படிச் செய்யப் போறதில்லை. உன்னையும் வெளியே விடப் போறதில்லை. ஆகக்கூடி நீ தங்கத்தோட கம்பி நீட்டிட்டதா சோமன் நினைக்கும்படி பண்ணிடுவேன்.

மார்க்ரெட் அம்மாகண்ணும் அதை அப்படியே சோமனுக்குச் சொல்லிடுவா... சோமன் சொல்றதையும் எங்கிட்ட சொல்லிடுவாளாம்... இல்லாட்டி போனா சோமன் நம்பி கூட துப்பாக்கி குண்டாலதான் பரலோகம் அனுப்புவான். நான் இந்த விஷயத்துல ரொம்ப மோசம். என்னோட ஆயுதம் எலக்ட்ரிக் அயர்ன் பாக்ஸ்!''

கல்யாண் அப்படிச் சொல்லும்போதே அதில் கொடூரம் கொப்பளித்தது.

இருவரையும் அறையில் போட்டுப் பூட்டிவிட்டு மீனாவும் கல்யாணும் வெளியே வந்தனர்.

''வா... அந்தத் தங்கத்தை அது இருந்த இடத்திலேயே வைப்போம். காத்தால அப்பா எழுந்த உடனே எல்லாத்தையும் சொல்வோம்'' கல்யாண் பேசினான். ஆனால் மீனா பேசவில்லை. கல்யாணின் சாதுர்யமான செயலில் அதிகம் கரைந்தவள் போல் தெரிந்தாள்.

''கல்யாண்... ''மீனாவின் குரலில் காதல் கசிந்தது. கல்யாணுக்கும் அது புரிந்தது.

''மீனா... இது காதல் வசப்படற வேளையில்லை. இரண்டு எதிரிகளை வீட்டுக்குள்ளேயும். சில எதிரிகளை வெளியேவும் வெச்சு சமாளிக்கிற பெரிய பொறுப்புல இருக்கோம். இதுக்கு நடுவுல உன் அப்பா அடுத்து ஏதாவது ஒரு பரிகாரச் செயலை செய்யச் சொல்லலாம். ''கல்யாண் பேசுவது எதுவும் மீனாவின் காதில் விழவில்லை.

மனதுக்குள் கவிதை படிக்கத் தொடங்கினாள். புதிதாய் ஒரு புயல் புறப்படப் போவதை உணராமல்!

ஏறத்தாழ பத்து வருடம்...!

துல்லியமாகச் சொல்வதானால் பத்து வருடம் அறுபத் தேழு நாள் ஐந்தரை மணி நேரம்!

சிறைவாசம் முடிந்து தலையைக் கோதிக்கொண்டு வெளியே வரத் தயாராய் இருக்கிறான் சாம்ஸன்!

வார்டனின் எதிரில் நின்று கொண்டிருக்கிறான்.

''சாம்ஸன் நீ திரும்பி உள்ளே வரக்கூடாது. ஆனா உனக்குள்ள இன்னும் பழி உணர்வு குறையலை. ம்... தலை எழுத்தை யார் மாற்ற முடியும்?''சலித்துக் கொண்டார் வார் டன் வீரசுப்ரமணியன்.

சாம்ஸனிடம் எந்தப் பதிலுமில்லை. தனக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்தான்.

வாசலில் துரைராஜ் காத்திருந்தான்!

கோட்டும் சூட்டுமாய் குப்தாவின் நிறுவனத்தில் அக்கௌண்டென்டாய் உத்தியோகம் பார்த்தவன். இப் பொழுது தாடியும் மீசையுமாய் தேவதாசுக்குத் தம்பி போலத் தெரிகிறான். சாம்ஸனுக்கு துரைராஜனைப் பார்க்கவும் துளி சந்தோஷம்.

''வா சாம்ஸன் வெல்கம்!''

''தேங்க் யூ துரைராஜ்... நீ இன்னுமா என்னை மறக்கலை...''

''மறக்க முடியலை நமக்கு நேரிட்ட துரோகம் என்ன மறக்கக் கூடியதா?''

''நான் வெளியே வரப்போறது உனக்கு எப்படித் தெரியும்?''

''வக்கீல் சொன்னார். சரி வா வீட்டுக்குப் போவோம்.''

''உன் வீட்டுக்கா?''

''ஆமா... இப்போதைக்கு என் வீட்டுக்குத்தான் நீ வந்தாகணும். ஏன்னா உன் மகள் இப்போ இந்த ஊர்ல இல்லை'' துரைராஜின் பதிலால் உதைப்பட்ட மாதிரி ஒரு வலி சாம்ஸனிடம்.

''லீனா இப்ப எங்கே?''

''நேபாளத்துக்கு எதுக்கோ ட்ரெயினிங் போயிருக்கிறதா சர்ச்சுல பாதர் சொன்னார்'' அதைக் கேட்ட சாம்ஸன் காற்று போன பலூனைப் போல் ஆனான்.

''கவலைப்படாதே சாம்ஸன்! லீனா நாலு நாள்ல வந்துருவா. உம்... சொல்ல மறந்தேனே. குப்தா இப்ப எப்படி இருக்கான் தெரியுமா?'' துரைராஜ் கேட்ட கேள்வியில் சாம்ஸன் ஊன்றினான்.

''எப்படி இருக்கான்? எப்படி இருக்கான்?'' ஆவேசமாய் சாம்ஸன் கேட்டதில் துரைராஜுக்கே விதிர்ப்பு.

* * *

## 13

சாம்சனின் டைரியிலிருந்து.....

*''சோமன் மகாபாரதத்து ஜராசந்தன் மாதிரி. அவனை அழித்தது போலவே இவனை அழிப்பது மிகமிகக் கஷ்டம். மிக சாமர்த்தியமாகச் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள்.*

''இப்ப குப்தாவோட நிலை ரொம்ப மோசம்! சாகக் கிடக்கறான்! உயிரும் போவேனாங்குது... ஆனா இந்த நிலையிலும் அவன் ஏதோ பண்ணிகிட்டிருக்கிறான்...'' துரைராஜன் விளக்கம் கேட்டு சாம்ஸன் முகம் சுருங்கியது.

''ஏதோ பண்ணிகிட்டிருக்கான்னா...?''

''தன் தப்புக்கெல்லாம் பரிகாரம் செய்துவிட்டு வரான் சாம்ஸன்.''

''என்ன துரைராஜ்! புலி புல் தின்னுதுன்னு சொன்னா நான் நம்பிடுவேனா?''

''பார்த்துட்டு நம்பேன்...''

''அவனை நான் பார்க்கும்போது அவன் உயிரோட இருக்கக்கூடாது! அதுதான் எனக்கு வேணும்!''

''நாம யாரும் கொல்லாமலே அவன் செத்துடுவான் சாம்ஸன்! உடம்புல ஒவ்வொரு அங்குலத்துக்கும் ஒரு வியாதி! மருந்து மாத்திரையினால உயிரை இழுத்துப் பிடிச்சு வெச்சுருக்காங்க!'' துரைராஜின் விளக்கம் சாம்ஸனைச் சிந்திக்க செய்தாலும் சிரிக்கவும் வைக்கிறது.

''எதுக்குச் சிரிக்கறே சாம்ஸ்ன்...?''

''அந்த குப்தா மேல நீ படற பரிதாபத்தை நினைச்சு. ஆனா நான் விடமாட்டேன்! நான் பரிதாபப்பட மாட்டேன்!

தன் பணத்தால என் மகளை வாழாவெட்டி ஆக்கினவனை விடவே மாட்டேன்! இதே மாதிரி அந்தக் குப்தா விஷயத் துலையும் செய்வேன்!''

''அது எப்படி முடியும்?'' அவன் மகளுக்குத்தான் இன்னும் கல்யாணமே ஆகலையே...!''

''கூடிய சீக்கிரம் ஆகும். அப்ப தெரியும் - நான் யாருங்கறது?''

''இப்பத்தான் ஜெயில்ல இருந்து வந்துருக்கே... முதல்ல கொஞ்சம் அமைதியாக சுதந்திரத்தை ருசி... அப்புறம் பழி வாங்கல். லொட்டு லொசுக்கை வெச்சுக் கலாம்...''

துரைராஜை அதற்கு மேல் சோதனைக்குள்ளாக்க சாம்ஸன் விரும்பவில்லை...

குப்தா எழுந்து நடக்க முயற்சி செய்து கொண் டிருந்தார்.

''வேண்டாம் சார்... டோண்ட் பி எ ரிஸ்க்...'' கல்யாண் தடுத்ததையும் மீறி படுக்கையை விட்டு எழுந்து நின்றார். உடம்புக்குள் எல்லாம் நடுங்கியது.

சட்டென்று அருகில் உள்ள படுக்கையில் அமர்ந்த படி விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தார். சேர்ந்து கொண் டாள் மீனா.

''இப்ப என்ன ஆயிடுச்சுன்னு அழறீங்க...?''

''என்னால நிக்கக்கூட முடியலை கல்யாண். எத்தனை பேரை விழ வெச்சுருப்பேன் - அதான் இப்ப...''

''சார் பளீஸ்! தப்பு செய்யறதை விட பெரிய விஷயம். அதைத் திருத்திக்க நினைக்கிறதுதான். அதுல உங்களை அடிச்சுக்க யாரும் கிடையாது சார்...''

''தேங்க்யூ... தேங்க்யூ... ஆமா எங்கே அந்தப் பிளாக்ஷீப்...?'' குப்தாவின் கேள்வியைத் தொடர்ந்து இறுகக் கட்டப்பட்ட நிலையில் விஸ்வமும் அமலாவும் அவர் எதிரே இழுத்து வரப்பட்டனர்.

குப்தா அவர்களை முறைத்த முறைப்பில் அனல் பறந்தது. உடம்பில் பிரஷர் ஏற ஆரம்பித்தது. மீனா புரிந்து கொண்டு குப்தாவை வருடிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

''டாட்... இவங்களை வெச்சு அந்த சோமன் நம்பியாரை என்ன பாடு படுத்தப் போறோம்னு பாருங்க...''

''அவரைப் படுத்தறது அப்புறம்... முதல்ல அடுத்த காரியத்தைப் பாரும்மா...''

''தெரியும்பா... அந்த சங்கர சுப்பிரமண்யன் விஷயம் தானே...?''

''எந்த சங்கர சுப்பிரமணியன்...?'' என்றான் கல்யாண்.

''சொல்றேன்! முதல்ல சோமனுக்கு ஒரு போன் போடுவோம்!''

மீனா டயலைத் திருகினாள். மறுமுனையில் சோமன் வசமாய் அகப்பட்டான்.

''பாஸ் நான் விஸ்வம் பேசறேன்!'' கைகள் கட்டப் பட்ட விஸ்வமே கல்யாண் சொன்னபடி பேச ஆரம்பித் தான். கல்யாண் விரல் நுனியில் மிரட்டலாய் பிஸ்டல்!

''சீக்கிரமா என்னை வந்துபார்க்காம இடையிலே என்னடா போன்?''

''இல்ல இவ்வளவு பெரிய காரியம் பண்ணியிருக்கேன். எனக்கு எவ்வளவு கமிஷன் தருவீங்கன்னு தெரிஞ்சுக்கத் தான்...''

''கமிஷனா?''

''மிஸ்டர் சோமன் நம்பி! என்ன கத்தறே! நாங்க உயிரைப் பயணம் வெச்சு தங்கம், வைரம்னு எடுத்துக்கிட்டு வந்து தருவோம் - எங்களுக்கு எதுவும் கிடையாதா? கத்துனா பயந்துடுவேனா...?''

''டேய்... நான் யார்னு தெரிஞ்சுமா இந்தப் பேச்சு பேசறே...?''

''உன்னை விட நான்தான் இப்ப பெரிய பணக்காரன்! உலக பணக்காரர்கள் லிஸ்ட்ல சீக்கிரமா போய் நானும் சேர்ந்துடுவேன். ஓ. கே. பை...''

''டேய்... தங்கத்தை என்ன பண்ணப் போறே? கமிஷன் கேட்டியே எவ்வளவுன்னாலும் தரேன். தங்கத்தோட என்னை வந்து பார்...''

''சாரி சோமன்... உன்னை நான் பார்த்தா என்னை உயிரோட விட மாட்டே நீ! நான் தங்கத்தோட கம்பி நீட்றதா முடிவு பண்ணிட்டேன். என் கூட அமலா குட்டியும் வர்றா. நாங்க இந்தியாவுக்கே டாட்டா காட்டப் போறோம்! பை...'' விஸ்வம் போனை முடக்கிவிட்டு வெளிறிப் போன முகத்தோடு கல்யாணைப் பார்த்தான். கல்யாண் முகத்தில் புன்னகை.

''தேங்க் யூ விஸ்வம்! வார்த்தை மாறாம பேசிட்டே. கொஞ்ச நாள் எங்க கஸ்டடில மசால் தோசையும் பூரி குருமாவுமா சாப்பிட்டுகிட்டு சீட்டு விளையாடிகிட்டு இரு. எங்களோட ஒர்க்கெல்லாம் முடியட்டும். பிறகு உன்னை மன்னிக்கிறதைப் பத்தி யோசிக்கிறோம்...''

கல்யாண் பேசி முடிக்கவும் இரண்டு வாட்டசாட்டமானவர்கள் வந்து அவர்கள் இருவரையும் பிடித்து இழுத்துச் செல்லவும் சரியாக இருந்தது.

இதற்குள் நிஜமான அமலா அழைத்து வரப்பட்டாள். குப்தா அவளை வாஞ்சையாக அணைத்துக் கொண்டார். அமலாவிடம் கூட சிலிர்ப்பு...

''அம்மாடி உலகத்துல இப்படி ஒரு மோசமான அப்பாவை யாரும் பார்த்திருக்க முடியாது! என்னை மன்னிச்சுடும்மா...''

அமலா அவர் கைகளைப் பற்றினாள். அற்புதமான பாசச் சூழ்நிலை. மீனாவும் கல்யாணும் மெல்ல நழுவுகின்றனர். கல்யாண் ஞாபகமாக கேட்கிறான். ''யார் அந்த சங்கர சுப்பிரமணியன்?''

''அப்பாகிட்ட ஒர்க் பண்ணின ஒரு பிராமின் பாய். அப்பாவோட கடத்தல் சரக்கு ஒரு தடவை போலீஸ்ல மாட்டிக்கிச்சு. அதுல இருந்து தப்பிச்சு அப்பா கொடுத்த பலி அந்த சங்கரசுப்பிரமணியன்.

அவன்தான் தனக்குத் தெரியாம கடத்தல்ல ஈடுபட்டான்னு அப்பா பிளேட்டைத் திருப்பிப் போட அந்த பிராமின்பாய் வசமா மாட்டிக்கிட்டான்.

அவமானம் தாங்காம அவனோட அப்பா அம்மா இரண்டு பேரும் செத்துட்டாங்க. அதைக் கேள்விப்பட்ட அந்த இளைஞனும் ஜெயில் மதில் சுவர்ல இருந்து குதிச்சு தற்கொலை செய்துகிட்டான். இப்ப அனாதையா அவனோட சகோதரிகள்...''

''புரிஞ்சு போச்சு மீனா... அவங்களுக்கு உதவி செய்யணும்...''

''உதவின்னா காசு பணம் தர்றது மட்டுமில்ல கல்யாண். அவங்களுக்கு சரியான மாப்பிள்ளைகளைப் பார்த்து கல்யாணம் செய்து வைக்கணும். சங்கர சுப்பிர மணியன் உயிரோட இருந்தா காலம் பூரா என்னவெல்லாம்

செய்வானோ அதை எல்லாம் அவன் இடத்துல இருநது செய்யணும்.''

''நிச்சயமா...'' கல்யாண் ஆமோதித்தபோது தொலை பேசியின் அழைப்பு.

''யெஸ்... மீனா ஹியர்...''

''யாரு... படுபாவி குப்தாவோட பொண்ணா?'' மறுமுனை கேள்வி மீனாவை ஒரு புரட்டு புரட்ட -

''ஏய் யார் மேன் நீ? உனக்கு என்ன வேணும்?'' பதட்டத்துடன் கேட்டாள்.

''எனக்கா... எனக்கு என் மகளைப் போல உன்னை வாழாவெட்டியாகப் பார்க்கணும். பார்ப்பேன்...'' போன் முடங்கியது. பேசியது சாம்ஸன்.

* * *

## 14

சாம்சனின் டைரியிலிருந்து...

*"பதுங்கிப் பாயும் புலியும் சோமன் நம்பியும் ஒன்று. சோமனை அடக்க என் ஒருவனால்தான் முடியும். அந்த ஆயுதம் என்னிடம் மட்டுமே உண்டு. அதைக் கொண்டு சோமனை அடக்குவேன். அதற்கு முன் குப்தாவை ஒரு கை பார்த்தாக வேண்டும்.*

மீனா வியர்த்திருந்தாள்.

"போன்ல யாரு?" என்றான் கல்யாண்.

"சாம்சன்."

"உன் கிட்ட என்ன சொன்னான்."

"என்னை வாழாவெட்டியாக்குவாராம்! அப்பா சாம்ஸனோட மாப்பிள்ளையை அவர் மகள் கிட்ட இருந்து பிரிச்சுட்டார். அதான் எனக்கும் அந்த கதி ஏற்படணும்னு ஆசைப் படறார்."

"உங்கப்பா ஏன் அப்படி செய்யணும்?"

"சாம்ஸன் பொண்ணு லீனா. ஞானசேகர்ங்கற இந்துவை காதலிச்சா - திருட்டுத்தனமா கல்யாணம் பண்ணிக்கிட்டா. இந்த ஞானசேகர் யாரோ இல்ல. என் அத்தை மகன். இவனுக்குத்தான் என்னைக் கொடுக்கறதா அப்பா நினைச்சுக்கிட்டிருந்தார். அவன் அப்படி செய்யவும், அப்பா களத்துல இறங்கினார். எப்படியோ ஞானசேகர் லீனாவை வெறுக்கும்படி பண்ணிட்டார். இதனால் ரொம்ப கொதிச்சுப் போயிட்டார் சாம்ஸன்."

"சரி, இப்ப அந்தப் பொண்ணு நிலை என்ன?"

''நௌ ஷீ ஈஸ் மேட். அது மட்டுமல்ல ஞானசேகர் கூட இப்ப இங்க இல்ல... அப்பாவோட ஏலகிரி மலை எஸ்டேட்டைப் பார்த்துக்கிட்டு ஏலகிரியில இருக்கான் - என்னைக் கல்யாணம் செய்துக்கத் தயாரா! நான்தான் மாட்டேன்னு சொல்லிக்கிட்டிருக்கேன்!''

''அப்படின்னா சங்கரசுப்ரமண்யன் கேஸுக்கு அடுத்து சாம்ஸன் பொண்ணு கேஸா?''

''ஆமா. அவளை க்யூராக்கணும். திரும்ப ஞானசேக ரோட சேர்த்து வைக்கணும். இதமட்டும் அப்பாவுக்கு தெரியாம பண்ணணும்.''

''ஏன்?''

''அப்பா இந்த விஷயத்துல தான் தப்பு செய்ததா நினைக்கலை. ஞானசேகர் தப்பு செய்ததாத்தான் நினைக் கிறார். அவருக்கு என் வாழ்க்கையும் பெரிசில்லியா? ஆகையால் சொந்தம் விட்டுடாம நான் கல்யாணம் செய்து கிட்டு சந்தோஷமா இருக்கணும்னு விரும்பறார். அதோட அப்பா காதலுக்கு முதல் விரோதி. யார் காதலிச்சாலும் அப்பாவுக்குப் பிடிக்காது. காதலும் காய்ச்சலும் ஒண்ணுங்கற கொள்கை உடையவர்'' மீனாவின் விளக்கத்தில் கல்யாண் ஸ்தம்பித்தான்.

''என்ன கல்யாண் எதுவுமே பேசாம...''

''என்ன பேச மீனா... குப்தா சாரை நினைச்சா எனக்கு ஒரு பக்கம் ரொம்ப வியப்பா இருக்கு. இன்னொரு பக்கம் கோவமாகவும் வருது.''

''ஏன் கோவம் வரணும்?''

''காதலுக்கு எதிரிகள் எனக்கும் எதிரிகள் மீனா...''

''அப்படின்னா உங்களுக்குக் காதல் பிடிக்குமா?''

''காதல் பிடிக்காத மனுஷர்கள் கூட உலகத்துல உண்டா என்ன?''

''அப்ப நீங்க யாரைக் காதலிக்கறீங்க? தெரிஞ்சுக் கலாமா?'' மீனா கல்யாணை நேரிடையாகவே வளைத்தாள்.

''தெரிஞ்சு என்ன பண்ணப் போறே?''

''இப்ப சொல்லப் போறீங்களா இல்லியா?''

''அப்படின்னா நீ சொல்லு முதல்ல...''

''இல்ல நீங்க சொல்லுங்க முதல்ல...''

''நீ சொல்லு''

''அப்படியா?''

''ஆமா அப்படித்தான்.''

''சரி சொல்றேன் நேராகவே சொல்றேன். பளிச்சுன்னு சொல்லிடறேன். என் காதலர் பேரு... க...ல்.... யா...ண்...''

நிறுத்தி நிறுத்தி வார்த்தைக்கு வார்த்தை இடைவெளி விட்டு தயக்கமாய் ஒரு குயிலின் கூவலைப் போல மீனா கூறி முடிக்கவும் கல்யாண் அவளை இழுத்து அணைக் கவும் சரியாக இருந்தது.

அந்த அணைப்பு அப்படியே தொடர்ந்தால் தேவலை போல் தோன்றியது.

ஆனால் எங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை என்பதுபோல் வாசலில் ஒரு ஜீப்பின் வருகை. உள்ளிருந்து வெளியே தலை காட்டுபவன் லாரன்ஸ். இவன் எதற்கு இங்கு வருகிறான்? சோமன் நம்பியின் தூதுவன் - அவனது வலதுகரம்.

லாரன்ஸின் புழுதி பறக்கும் நடையில் ஒரு ஆவேசம் தெரிந்தது. சமீப காலமாக குப்தா பாசிடிவாக மாற

ஆரம்பித்ததில் இருந்துதான் லாரன்ஸும். சோமன் நம்பியும் வந்து போவது குறைந்து போனது.

ஆனால் இப்பொழுது திரும்பவும்...!

லாரன்ஸ் நேராக குப்தாவின் படுக்கை அறை நோக்கி நடந்தான். அங்கே குப்தா தினசரி படித்த நிலையில்.

''குட்மார்னிங் குப்தாஜீ...'' குரல் கேட்டு நிமிர்ந்த குப்தா உடனேயே பதறவும் செய்தார்.

''நீயா... - உன்னை இங்க வரக்கூடாதுன்னு சொல்லி யிருக்கேன்ல... உனக்கு என்ன வேணும். எதுக்கு வந்தே இங்க?''

''கேட்டா கொடுத்துட்ற மாதிரி கேக்கறியே. ஆமா எங்க உன்னோட ஆபத்பாந்தவன்?''

''யாரைச் சொல்றே நீ?''

''உம்... சோமனை ஆஸ்பத்திரியில படுக்க வெச்சானே அந்தக் கில்லாடியச் சொல்றேன்!''

அவன் உள்ளே நுழைவதை - குப்தாவின் அறைக்குள் நுழைந்து பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தபடியே இருக்கும் கல்யாணுக்கு அவன் பார்வையின் தேடலுக்கு அர்த்தம் புரிந்தது. அதைப் புரிந்து கொண்டு மீனாவின் காதைக் கடித்தான்.

''மீனா... இவன் அந்த போலி அமலாவையும். விஸ்வத்தையும் தேடி வந்துருக்கான். இரண்டு பேரும் தங்கத்தோட ஓடிட்டத்தை கன்பார்ம் பண்ண வந்துருக்கான். நாமளும் தங்கத்தை இழந்துட்ட வேதனையோட இருக்கோமா இல்லையாங்கறதை செக் பண்ண வந்துருக்கான். இது அந்த சோமனோட ஏற்பாடு.''

பேச்சோடு பேச்சாக ஒரு உதைபந்தின் வேகத்

தோடு லாரன்ஸ் எதிரில் போய் நிற்கும் கல்யாண் முகத்தில் ஆவேசம்..

''ஹலோ... வாய்யா ஹீரோ...'' லாரன்ஸிடம் எகத்தாளம்.

''எதுக்கு வந்துருக்கே லாரன்ஸ்... மொத்த தங்கத்தையும் சாமர்த்தியமா ஆட்களை அனுப்பி எடுத்துக்கிட்டு போனது பத்தாதா... இப்ப வேற எதை எடுத்துக்கிட்டு போகலாம்னு வந்துருக்கே...'' கல்யாணிடம் அவனை நம்ப வைக்கும் நடிப்பின் ஆரம்பம். அதைக் கெடுப்பது போல் வந்து கொண்டிருந்தாள் நிஜ அமலா.

''அப்பா... யார் இவரு?'' என்கிற கேள்வியோடு.

* * *

# 15

சாம்சனின் டைரியிலிருந்து....

*"பழி வாங்குவதில் நான் பாம்பை விடக் கொடுமை யானவன். குப்தா, சோமன் இருவரையும் பழி வாங்காமல் நான் சாகாமாட்டேன். என் வியூகம் மிகக் கொடுமை யானது. அதிலிருந்து தப்பிக்க யாராலும் முடியாது."*

"அப்பா!" என்கிற அழைப்போடு கையில் மருந்து பாட்டிலோடு வரும் அமலாவைப் பார்க்கும் லாரன்ஸின் விழிகளில் பூச்சி பறக்க ஆரம்பித்தது. அமலாவை வெறித் தான்.

"யார் குப்தா இந்தக் குட்டி... அப்பாங்கறா பாசமா?" கேள்வியோடு அவளை அளந்தான். கல்யாணுக்கு காலில் தேள் கொட்டினமாதிரி ஒரு வேதனை.

"சொந்தப் பொண்ணுதான் அப்பான்னு கூப்பிடணுமா - ஏன் வேலைக்காரங்க அப்படிக் கூப்பிடக் கூடாதா?" கல்யாண் சமாளிக்கப் பார்த்தான்.

"என்னது நான் வேலைக்காரியா... மிஸ்டர் கல்யாண்! என்ன பேச்சு இது? அப்ப குப்பைத் தொட்டில குழந் தையா நான் கிடந்தது. உங்களோட பரிகாரம்கறது எல்லாம் பொய்யா?"

அமலாவின் உணர்ச்சி வயப்பட்ட நிலையும் கேள்வி யும் கல்யாணை முகத்தில் அறைந்தது.

லாரன்ஸ் தீப்பிடித்த மாதிரி ஆனான்.

"ஏய் என்ன நடக்குது இங்க... யார் இந்தப் பொண்ணு உண்மையைச் சொல்...?" கத்தினான்.

''நான் சொல்றேன்...'' மீனா முன் வந்தாள். கல்யாணிடம் பதட்டம்.

''இவதான் என் உண்மையான அக்கா!''

''உண்மையான அக்காவா... அவ செத்துட்டதால்ல சொன்னான் – அந்த பாதர் வின்செண்ட் மாணிக்கம்.''

''அது உனக்காக சொன்ன பொய். அக்கா சாகலை. எங்க நல்ல எண்ணத்துக்கு ஏற்ப எங்களுக்குத் திரும்ப கிடைச்சிட்டா.''

''அப்படின்னா நான் அனுப்பிச்சு வெச்ச போலி அமலா எங்க...?''

''அவ எப்ப வெளியே வரணுமோ அப்ப வருவா! அவளும் விஸ்வமும் தங்கத்தை திருடப் பார்த்து எங்ககிட்ட மாட்டிகிட்டாங்க. அது மட்டுமல்ல. உங்க சோமனையும் நல்லாவே குழப்பிட்டாங்க.''

மீனாவின் உணர்ச்சி வயப்பட்ட பேச்சும் அதில் பரவிய உண்மையையும் பார்த்து கல்யாண் மொத்தமாக உடைந்து போனான்.

கல்யாணின் கலக்கத்தை லாரன்ஸ் மிகவும் ரசித்தான்.

''சபாஷ்!... எங்க சந்தேகம் வீண்போகலை நான் இங்க வந்தது. இதையெல்லாம் தெரிஞ்சுக்கத்தான். மீனா... நீ என்னமோ பெரிய ஆர்மியே உன்கிட்ட இருக்கற மாதிரி நினைச்சு எல்லாத்தையும் உளறிட்டே! நீங்களும் சரி. நாங்களும் சரி. சட்ட ரீதியாகவோ போலீஸ் உதவியோடவோ மோதிக்க முடியாது. இரண்டு திருடர்களுக்கு நடுவுல வர்ற மோதல்ல பலசாலி மட்டும்தான் ஜெயிப்பான். அது யாருங்கறது இனி போகப் போகத் தெரியும்...'' கொக்கரித்தான் லாரன்ஸ்...

தன் சார்மர்த்தியங்கள் எல்லாம் வினாடியில் தவிடு பொடியாகி விட்டதே... அது அமலாவாலும் மீனாவாலும் இப்படியா கெட வேண்டும். கல்யாண் தலையில் கை வைத்துக் கொள்ளும்போது மீனா முகத்தில் மட்டும் விஷமப் புன்னகை.

லாரன்ஸ் ஆவேசகமாக நழுவத் தொடங்கும்போது அந்தப் புன்னகைக்கு பொருள் தெரிந்தது.

''டோன்ட் மூவ் லாரன்ஸ்...'' என்றபடியே பிஸ்டலுடன் கைகளை நிமிர்த்தினாள்.

லாரன்ஸ் விழிகளில் படபடப்பு.

''கொஞ்சம் முந்திதான் சொன்னே நம்ம போராட்டத்துல பலசாலி மட்டும்தான் ஜெயிக்க முடியும்னு... இப்போதைக்கு பலசாலி இங்க நாங்கதான்.''

மீனாவின் விளக்கம் கல்யாணை நிமிர்த்தியது. வினாடிகள் வீணாக்காமல் அவனை மீனாவின் துப்பாக்கி முனையில் போட்டு கட்டினான்.

''கூடிய சீக்கிரம் அந்த சோமன்நம்பியாரை அனாதையாக்கி எங்களைத் தேடி வந்து கால்ல விழவைப்போம்! அந்த விஷயத்துல இப்ப ஒரு காய்க்கு மூணுகாயை அடிச்சாச்சு!''

மீனாவின் பேச்சு கல்யாணுக்கு மட்டுமல்ல குப்தாவுக்கும் சிலிர்ப்பைத் தந்தது!

பச்சசக்... இன்பமான முத்தத்தின் சப்தம் சற்று பலமாகவே கேட்டது.

''மீனா உன் டைமிங்கும் சென்சும் ரியலி ஒண்டர். உள்ள வந்த அவனை வெளியே விட்டுடாம கட்டிப் போட்ட விதம் ரியலி சூப்பர்!'' சொல்லிவிட்டு அதற்கு பரிசு தருகிற மாதிரி கன்னத்தைத் தேடினான்.

''காமத்துப்பால் அப்புறம். இப்ப அறத்துப்பால்...'' என்று அவனை விஷயத்துக்கு இழுத்தாள் மீனா.

''தெரியும் சங்கரசுப்ரமண்யன் விஷயம்தானே!''

''ஆமா. அவனோட சகோதரிகளைப் பார்த்து...''

''பார்த்தாச்சே!''

''எப்போ?''

இன்னுமா நான் அதுக்கு ஸ்டெப் எடுக்காம இருப்பேன். அவங்களைப் பார்த்தேன். பாவம் அவங்க நிலை அப்பளம் சுட்டு வித்து பிழைப்பு நடத்திகிட்டு இருக்காங்க.''

''அவங்கள எப்படி கண்டுபிடிச்சீங்க... என்னன்னு சொல்லி அறிமுகப்படுத்திகிட்டீங்க...?''

''எப்படியோ கண்டுபிடிச்சேன்! அதுவா விஷயம்! அவங்க மனசுல நான் இடம் பிடிச்சதுதான் விஷயம்!''

''அதுதான் எப்படி?''

''சங்கரசுப்புவோட உயிர் நண்பன் நான். அவனால தான் நான் உயர்ந்த நிலையில இருக்கேன். உங்களை எல்லாம் கரை சேர்க்க வேண்டியது என்னோட பொறுப்புன் னேன். பதிலுக்கு அவங்க அழுத அழுகை இருக்கே...''

கல்யாணின் விளக்கத்தில் மீனா இறுகிப் போனாள். அடர்ந்த மௌனம் வந்து அப்பிக் கொள்கிறது அங்கே.

''அவங்க கைல, ஒரு ஐம்பதாயிரம் தந்தேன். வாங்கவே மாட்டேன்னாங்க. அது சங்கரன் எனக்கு கடனா கொடுத்த பணம்னு சொல்லி திருப்பித் தந்தேன். மாப்பிள்ளை பார்க்கப்போறேன். கல்யாணச் செலவும் என்னதுன்னு சொல்லிட்டு வந்திருக்கேன்.''

''வெரிகுட் அப்படின்னா இப்ப நம்மளோட அடுத்த இலக்கு சாம்ஸனோட பொண்ணு லீனா...''

''அந்த மனநோயாளிப் பொண்ணை குணப்படுத் தறதா.''

''அது மட்டுமில்லை. என் அத்தை மகன் ஞானசேக ரோட சேர்த்து வைக்கறதும்கூட''

''ஞானசேகர் உனக்காகக் காத்திருக்கிறதா சொன் னியே...''

''ஆமா... எனக்காக அவன் காத்திருக்கிறதுல பிரயோஜனம் இல்லைன்னு ஞானசேகர் நினைக்கணும்னா நாம இப்ப உடனே கல்யாணம் பண்ணிக்கிட்டாகணும் கல்யாண்...''

''அப்பதான் ஞானசேகர் லீனாகிட்ட திரும்பிப் போவானா...? அவனுக்கு அவள் பேர்ல பற்றுதலே கிடை யாதா?''

''இருந்தது... அப்பாவால அது அடிச்சு. நொறுக் கப்பட்டுடுச்சு. லீனா ஒரு நடத்தை கெட்டவங்கற மாதிரி பேசி அப்பா ஞானசேகரை மாத்திட்டார். அந்த அதிர்ச்சி யில தான் அவளும் மனநோயாளியாயிட்டா... மன நோயா ளின்னா எப்பவும் மனநோயாளி கிடையாது. சில சமயங் கள்ளதான்...''

''அவளுக்கு அப்படி ஆனதனாலதான் சாம்ஸனும் ரொம்பப் பாதிக்கப்பட்டாரு. சாம்ஸன் ரொம்ப விஸ்வாச மான நபர். அப்பாகிட்ட வேலை பார்த்தவங்கள்ள ரொம்ப நாணயமான நபரும் கூட. சாம்ஸனுக்கு சாப்பாடு எடுத்து வருவா லீனா... அப்பதான் அவ இங்க ஆபீஸ்ல ஞான சேகரைப் பார்த்தா. அந்தப் பழக்கத்துலதான் காதல் உண்டாச்சு. கல்யாணம் வரை போயிடுச்சு. அப்பாவால தாங்க முடியலை. பணக்காரர் ஆச்சே. ரொம்ப சுலபமா சதி செய்து பிரிச்சுட்டாரு. ஆனா சாம்ஸனை மட்டும் அப்பா வால சுலபமா சமாளிக்க முடியலை. அவர் அப்பாவை நேராவே எதிர்த்தாரு.

அப்பா பார்த்தாரு. கல்யாணின்னு ஒரு பெண்ணை இந்த சந்தர்ப்பத்துல அப்பா கொல்லும்படியாச்சு...''

''எதனால?''

''எல்லாம் ஒரே காரணம்தான்... செக்ஸ்! அவளை ஆசை தீர அனுபவிச்சார். அவ கர்ப்பமானா கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா...

பார்த்தாரு. கல்யாணியை பாத் டப்புல தண்ணியில அமுக்கி கொன்னுட்டு சாமர்த்தியமா பழியை சாம்ஸன் மேல போட்டுட்டாரு. சாம்ஸன் உள்ள போனார். கொலை வெறியோட இப்ப வெளியேயும் வந்திருக்கார்.''

''அதான் போன்ல அப்படிப் பேசினாரா?''

''ஆமாம் அவர் வெறியோட வேகம் எனக்குத் தெரியும். அதைச் சமாளிக்கணும்னா நாம கல்யாணம் பண்ணிக்கிட்டதான் முடியும்.''

''எப்படி?''

''நீங்க என்னை அப்பாவை நல்லா புரிஞ்சவர். சாம்ஸன் ஆசைப்படி என்னை விலக்கி வெச்சு அவன் பொண்ணு போல என்னை தவிக்க விடமாட்டீங்க. அவர் சபதத்துல தோப்பார். பழி உணர்ச்சி அடங்கும். அதே சமயம் அவர் மகளையும் வாழ வைச்சுடுவோம். எல்லாம் சுபமா முடிஞ்சுடும்.''

பொங்கி வழியும் நம்பிக்கையோடு மீனா பேசுவதைக் கேட்டு கல்யாணுக்கு சிலிர்க்கிறது. கூடவே

குற்ற உணர்வு ஒன்றும் தலை எடுக்கிறது.

எதனால்?

* * *

## 16

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''ஒருவன் செய்கின்ற தவறுக்கு ஸாரி என்கிற வார்த்தை மட்டும் பரிகாரமாகாது. இந்த வார்த்தையையே அகராதியை விட்டுத் தூக்க வேண்டும். தவறுக்கு தண்டனைதான் சரியான பரிகாரம். தண்டிப்பதை விட மன்னிப்பது பெரிய தண்டனை என்பதெல்லாம் பாசாங்குப் பழமொழிகள் என் வரையில் கத்திக்கு கத்தி கண்ணுக்கு கண்.''*

வக்கீல் வந்து கொண்டிருந்தார். ''வாங்க பாண்டு ரங்கன் சார்...'' வாய் நிறைய வரவேற்றார் குப்தா.

''என்ன மிஸ்டர் குப்தா. எதுக்கு திடீர்னு வரச் சொன்னீங்க?''

மருந்து நெடி கமழும் கட்டிலின் அருகில் வக்கீல் அமர குப்தாவிடம் செருமல்.

''வியாதிகளோட போராடிக்கிட்டிருக்கிற இந்த நிலையிலும் நான் ஓரளவு இப்ப சந்தோஷமா இருக்கேன் பாண்டு ரங்கன்.''

''பார்த்தாலே தெரியுதே.''

''கூடவே சில காரியங்கள் பண்ணணும். அதுக்கு உங்க உதவியும் வேணும். என் உயிர் என்னை விட்டு எப்ப வேணாலும் பிரியலாம்ங்கற நிலை நான் இருக்கேன்.''

''ஆகையால...?''

''என் சொத்துக்களை தர்மஸ்தாபனத்துக்கும் அறக் கட்டளைக்கும் எழுதிடலாம்னு இருக்கேன். கறுப்புப் பணத் தையும், தங்கத்தையும் அரசாங்கத்துக்கிட்ட ஒப்படைச்

சுடவும் ஆசைப்படறேன்... ப்ளீஸ் அதுக்கான உயிலை அரேஞ்ச் பண்ணுங்க...''

''உங்க பொண்ணுக்கு எதுவும் செய்யலியா?''

''இந்த பாவப் பணம் எதுவும் அவளுக்கு வேண்டாம் பாண்டுரங்கன். என் அக்கா மகன் ஞானசேகர் அவளைப் பார்த்துப்பான். அவன் உழைச்சு அவளைக் காப்பாற்றுவான்.''

வக்கீல் ஆச்சரியமான ஆச்சரியத்துடன் எழுந்து கொண்டார். அவர் அந்தப் பக்கம் நகரவும் இந்தப் பக்கமாய் ஜோசியர் வந்தார்.

''வாங்க ஜோசியரே நாள் பார்த்துட்டீங்களா?''

''பார்த்துட்டேன் குப்தா சார். வர்ற இருபத்தியோராம் தேதி. நாள் நல்லா இருக்கு.''

''ஓ... அவ்வளவு நாள் நான் காத்திருக்கணுமா?''

''என்ன இடையில இருபது நாள்தானே இருக்கு. கோடீஸ்வரர் வீட்டுக் கல்யாணம் தடபுடலான ஏற்பாடு களுக்கு இந்த இருபதுநாளே போதாதே...''

''தடபுடலான ஏற்பாடு எதுக்கு ஜோசியரே...? இது கோவில்ல நடக்கப் போற கல்யாணம். கால்காசு செலவில் லாம நடக்கப் போற கல்யாணம்.''

''நிஜமாவா சொல்றீங்க?''

''அட ஆமாய்யா. இருபதாம் தேதி வரைதான் நான் கோடீஸ்வரன். இருபத்தியோராம் தேதி நான் செத்தா அடக்கம் பண்ணக்கூட பணத்தைத் துண்டு விரிச்சு தான் வசூல் பண்ணனும். எல்லாத்தையும் தர்மஸ்தாபனத் துக்கு கொடுக்க ஏற்பாடு செய்துட்டேன்.''

''நீங்க அவசரப்படறதா நினைக்கிறேன்.''

''நான் அவசரப்பட்ட நாளெல்லாம் போயிடுச்சு ஜோசியரே. இப்பத்தான் நான் தெளிவா இருக்கத் தொடங்கியிருக்கேன். எதையாவது சொல்லி அதைக் கெடுத்திடாதீங்க.''

ஜோசியர் மறு பேச்சு பேசாமல் கை கூப்பியவாறு கிளம்ப ஆயத்தமானார்.

குப்தா ''முருகா'' என்றபடி கண்மூடத் தொடங்கினார்.

சற்றுத் தள்ளி மறைவாக நின்று கொண்டிருந்தது ஒரு உருவம். அவர் கண்மூடத் தொடங்கியதும் மறைவை விட்டு அவர் அருகில் வந்து அவரையே முறைத்துப் பார்த்தது.

யதார்த்தமாய் கண்விழிக்கும் குப்தா அந்த உருவைப் பார்த்து ''வாம்மா'' என்றார். அது மீனா.

''நீங்க வக்கீலோடையும் ஜோசியரோடையும் பேசினதைக் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்.''

''அதுக்கென்ன மீனா இப்போ...?''

''என் கல்யாணத்துக்கு இப்ப என்னப்பா அவசரம்?''

''என் உடல் நிலை தெரிஞ்சுமா இப்படி ஒரு கேள்வி கேக்கறே நீ?''

''உங்களுக்கு ஒண்ணும் ஆயிடாது. நீங்க நல்லா இருப்பீங்க.''

''உன் ஆசை அது... ஆனா. உண்மை எனக்குத்தான் தெரியும். அதோட பெண்களை ஒரு வயசுக்கு மேல் ஒரு நாள்கூட விட்டு வைக்கக்கூடாது. காலாகாலத்துல அவங்களுக்கு செய்ய வேண்டியதைச் செய்துடணும்.''

''அப்படின்னா இந்தக் கல்யாணத்தை என் விருப்பப்படி செய்து கொடுங்கப்பா.''

"உன் விருப்பப்படின்னா?"

"எனக்கு ஞானசேகரை கல்யாணம் பண்ணிக்கறதுல துளிகூட இஷ்டமில்லப்பா..."

"சரி... அப்ப யாரைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறே...?"

மீனா தயங்கித் தயங்கி நிற்கிறாள்.

"உம் சொல்லு..."

"கல்யாணை..." தயங்கித் தயங்கி சொல்லிவிட்டாள்.

"கல்யாணை கல்யாணம் பண்ணிக்கிட்டு உன்னால சந்தோசமா குடும்பம் நடத்த முடியாது மீனா!"

"எதை வெச்சுப்பா அப்படிச் சொல்றீங்க?"

"நான் உன் அப்பா. எமகாதகனா ஒரு காலத்துல இருந்தவன். அந்த அனுபவங்களை வெச்சு சொல்றேன்!"

"தப்புப்பா... கல்யாண் விஷயத்துல உங்க எண்ணம் அவ்வளவும் தப்பு. அவர் ஒரு ஜெண்டில்மேன்."

"ஞானசேகர் ஜெண்டில்மேன் இல்லியா?"

"ஒரு பெண்ணை தவிக்கவிட்டு பைத்தியமாக்கினவர் எப்படிப்பா ஜெண்டில்மேன் ஆக முடியும்?"

"அதுக்கு சரியான காரணம் இருக்கு மீனா..."

"என்ன காரணம்? - பொல்லாத காரணம்?"

"என்னோட பணம்தான். வேற என்ன?"

"நீங்க சொல்றது புரியலை."

"இந்தக் கடிதத்தைப் படி புரியும்."

குப்தா ஒரு கடிதத்தை எடுத்து அவள் எதிரே நீட்டினார். மீனாவும் அதைப் படிக்கத் தொடங்கினாள்.

அன்புக் கணவருக்கு...

ஆசை மனைவியின் அன்புக் கடிதம். உங்கள் எஸ்டேட் பணிகள் எப்பது உள்ளது? திரு. குப்தாவின் மகளை திருமணம் செய்து கொள்ளும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். திருமணம் முடிந்து கோடீஸ்வரராக நீங்கள் ஆன மறுநாளே நான் சொன்னபடி நீங்கள் அந்த மீனா சனியனை ஒழித்து தலை முழுகி விட்டு என்னிடம் வந்து விட வேண்டும்.

உங்களை நான் மணந்து கொண்டதே இந்தப் பணத்துக்காகத்தான். வாழ்வில் கோடீஸ்வரனாக ஒருவருக்கு இதைவிட நல்ல வாய்ப்பு வாய்க்காது.

குப்தாவின் திருட்டுப் பணத்தில் எவ்வளவு நம் பக்கம் வருமோ வரட்டும்.

ஒருக்கால் உங்களால் முடியாது போனாலும் அந்த மீனாவை என் அப்பா சாம்ஸன் அனுப்பிய கல்யாண் என்பவர் திருமணம் செய்துகொண்டு சொத்துடன் எங்கள் பக்கம் வந்து சேருவார்.

எனக்கும் சரி... அப்பாவுக்கும் சரி... அந்த மீனாவை தவிக்கவிட்டுப் பார்க்க வேண்டும். அது ஒன்றுதான் குறி.

இதற்கு மாறுபட்டு எது நடந்தாலும் அது உங்களுக்கு எதிராகத்தான் முடியும். அது எப்படி என்று கூற மாட்டேன். புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளுங்கள்.

இப்படிக்கு உங்கள் அன்பு மனைவி லீனா.

கடிதத்தைப் படித்த மீனாவுக்கு காலடி நிலமே நழுவியது.

* * *

## 17

### சாம்சனின் டைரியிலிருந்து...

*நான் ஒருமுறை செய்த தவறை மறுமுறை செய்வதில்லை. ஒருமுறை இழந்ததை மறுமுறையும் இழப்பதில்லை. ஒரு முறை நான் தவறு செய்யும்போது எதிரி புத்திசாலி. இரண்டாம் முறையும் அதே தவறு நடந்தால் எதிரி புத்திசாலியில்லை. நான்தான் முட்டாள். நான் முட்டாளா? புத்திசாலியா? - குப்தா, சோமன் நம்பியாரைப் பொறுத்தவரை நான் முட்டாள்தான்.*

மீனாவுக்குள் கண்ணைக் கரித்தபடி இருள் வந்து சூழ்ந்தது. சுதாரிக்கக்கூட அவகாசமில்லாதபடி கீழே விழுந்தாள். படுக்கையில் இருந்தபடியே பதறுகிறார் குப்தா.

''அம்மாடி அம்மாடி என்னாச்சு எனக்குத் தெரியும் இப்பயெல்லாம் நடக்கும்னு... இந்த லெட்டரை நான் காட்டியிருக்கக்கூடாது... காட்டியிருக்கவே கூடாது.''

படுக்கை நிலையில் பதறுகிறார் குப்தா.

நெஞ்சில் வலிச் சிலிர்ப்பு. சாப்பிட்ட மாத்திரை மருந்துகளின் வீரியத்தை மீறி ரத்தம் உடம்பில் பேயாட்டம் ஆடியது. பேசக்கூட முடியாமல் போனது. கை கால்களை வெட்டி இழுத்துக்கொண்டு துடிக்கத் தொடங்கியவருக்கு நல்லவேளையாக ஓடிவந்து கைகொடுத்தாள் அமலா.

''அப்பா என்னாச்சு...! மீனா வேற மயங்கிக் கிடக்கிறாளே...?'' பேச்சோடு பேச்சாக முதலில் அந்த கிழட்டு மனிதரிடம்தான் ஓடினாள்.

ஆஸ்ரமத்து வாழ்வில் எவ்வளவோ அனுபவங்கள். அதில் ஒன்றுதான் முதலுதவி. அது இப்பொழுது

அவளுக்குக் கை கொடுத்தது. அருகில் கிடந்த மாத்திரைக் குப்பியில் ஒரு மாத்திரையைத் துழாவி எடுத்து குப்தா வாயில் வைத்துத் திணித்து தண்ணீரை ஊற்றிவிட்டு மீதித் தண்ணீரை மீனா முகத்தில் தெளிக்க, மீனாவிடம் மயக்கம் மெல்ல விலக ஆரம்பித்தது.

சுதாரித்து எழுந்தவள் எதிரே பதட்டமாய் அமலா.

''மீனா அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் மாத்திரை கொடுத்துட்டேன். நம்ப குடும்ப டாக்டரை கூப்பிடணும் அவர் நம்பர்...''

அமலாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மீனா அப்படியே வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தாள். தொலைபேசியை நோக்கிப் பாய்ந்தாள். மறுமுனையில் டாக்டரைப் பிடித்தாள்.

அவர் வரும் முன் மயங்கிக் கிடக்கும் குப்தாவை நெருங்கி அவரை அள்ளி மடியில் போட்டுக்கொண்டாள்.

இவ்வளவு களேபரங்களுக்கும் காரணமான அந்தக் கடிதம் கீழே ஒரு ஓரமாகக் கிடந்தது.

இப்போது அது அமலா கையில்.

அமலா அதைப் படித்துவிட்டு எதுவும் புரியாமல் சற்றே குழம்பி நிற்க, மீனாவின் பிடியில் குப்தா முனங்கிடத் தொடங்கினார்.

''அப்பா... அப்பா...'' விசும்பி அழுதாள் மீனா.

''மீனா என்ன நடந்துச்சு? அப்பாவுக்கும் உனக்கும் என்ன வந்துச்சு? ஏன் ரெண்டு பேரும் இப்படி புதிர் மாதிரி நடந்துக்கிறீங்க? இந்தக் கடிதம் வேற என்னைக் குழப்புது...'' இடையிடும் அமலாவைப் பார்த்து அந்தக் கடிதத்தைப் பிடிங்கினாள்.

''அக்கா இதுதான் எல்லாத்துக்கும் காரணம்! கல்யாண் எங்க எதிரியோட கையாளாம்!''

''யார் அந்த சாம்ஸன்கறவன்தான் அப்பாவுக்கு எதிரியா?''

''ஆமாம்! உன்னால இதை நம்ப முடியுதா?''

''எதை?''

''கல்யாண் இப்படித் துரோகியா இருப்பாரா?''

''என்னால நம்ப முடியலை. அந்தத் தம்பி முகத்தைப் பார்த்தாலே ஒருவகை சாந்தமும் அடக்கமும் தெரியுதே! அது கையாள்னா என்னால நம்ப முடியலை!''

''ஆனா அப்பா நம்பியிருக்காரு - அப்பா அவ்வளவு சுலபமா எதையும் நம்பறவர் கிடையாது. அவரே நம்பினதால தான் எனக்கும் என் அத்தை மகன் ஞானசேகருக்கும் கல்யாணம் பண்ணி வைக்க நாள் வேற குறிச்சிருக்காரு.''

''இந்த லெட்டர் அப்பாவுக்கு எப்படிக் கிடைச்சுச்சு?''

அந்தக் கேள்விக்கு விடை கிடைக்காமல் குழம்பும் போது வாசல் பக்கம் போர்டிகோவில் கார் வந்து தேங்கியது.

இறங்கி வந்தார் டாக்டர்.

முதலில் ஊசி. பிறகுதான் பேச்சு என்பது போல் ஊசியைச் செருகினார். பிறகு 'பிரெஷர் செக்' செய்து கை கால்களை நீட்டி நேராகப் படுக்க வைத்து மார்புச் சட்டைப் பகுதியைத் திறந்து அதில் ஏ.சி.யின் குளுமை வேகமாகப் பரவ வழி செய்தார்.

''மீனா.. ஜாக்கிரதையா பார்த்துக்கோ... ஒரு மணிக்கு ஒரு மாத்திரை கொடு. ஏதாவதுன்னா எனக்கு போன் பண்ணு. ஒண்ணு மட்டும் சொல்றேன். அடுத்த அட்டாக் வந்தா அந்த ஆண்டவன் வந்தாலும் உன் அப்பாவைக்

காப்பாத்த முடியாது. ஞாபகத்துல வச்சுக்கோ. என் சாமர்த்தியம் அவ்வளவையும் காட்டி உன் அப்பா உயிரைக் கட்டி வச்சிருக்கேன். அதிர்ச்சிகரமா ஏதாவது செய்து அவரை பரலோகம் அனுப்பிடாதே! வரட்டுமா?'' டாக்டர் நகர்ந்து கொண்டார்.

அமலாவும் மீனாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும்போது யாரோ வரும் அரவம். திரும்பிப் பார்த்த போது கல்யாண் வந்து கொண்டிருந்தான். நடையில் பதட்டம் தெரிந்தது.

''என்ன மீனா டாக்டர் வந்துட்டுப் போறாரு! அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு?''

மீனா அவன் பதட்டத்தை நின்று நிதானமாய் ஏறிட்டாள்.

''நான் கேட்கிறேன். நீ என்னை நிதானமா பார்த்தா என்ன அர்த்தம்?''

''அதை நான் உங்க யூகத்துக்காக விட்டுடறேன்.'' என்றபடி உடனடியாக அங்கிருந்து நகர்ந்தாள் மீனா.

அமலா மட்டும் அங்கேயே நிற்கவும், கல்யாண் பார்வை அவள் மேல் சென்றது.

''என்ன நடந்துச்சு - நீயாவது சொல் அமலா!''

அமலா ஹார்ட் அட்டாக் வந்தது வரை மட்டும் கூறினாள். கடிதம் பற்றி எதுவும் கூறவில்லை.

''ஆமா ஏன் மீனா ஒரு மாதிரி பேசறா?''

''அதை அவதான் சொல்லணும்'' அமலாவும் விட்டால் போதும் என்று ஒதுங்க.

குழப்பம் கலையாமல் மீனாவின் அறையை நோக்கி நடந்தான் கல்யாண்.

மீனா படுக்கையில் குப்புறப் படுத்தபடி அழுது கொண்டிருந்தாள்.

'மீனா ஏன் அழறே?'' நெருங்கிச் சென்றவன் கரிசனமாக விசாரித்தான்.

''முதல்ல வெளியே போங்க!''

''ஏன்?''

''போகப் போறீங்களா இல்லையா?''

''இப்ப மட்டுமா இல்லை எப்பவுமேவா?''

''அது உங்க இஷ்டம்!''

''உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி நீயும் குழம்பி என்னையும் குழப்பறே?''

''நான் குழம்பலை. உங்களையும் குழப்பலை... நீங்க யாருங்கறத தெரிஞ்சுக்கிட்டேன். விஷயம் இவ்வளவு தான் கிளம்பறீங்களா?''

''நான் கல்யாண் - இதுக்குமேல என் வரைல தெரிஞ்சுக்க என்ன இருக்கு?''

''என்ன இருக்கா!'' மீனா அவன் எதிரே அந்தக் கடிதத்தை நீட்டினாள். வாங்கிப் படித்தவனுக்கு முதலில் சற்று கலக்கமாக இருந்தது. பிறகு சிரிப்புதான் வந்தது.

அவனைப் பார்த்தால் அகப்பட்டுக் கொண்டு திணறுகின்றவன் மாதிரியே தெரியவில்லை. மீனாவுக்கே இது ஆச்சரியமாக இருந்தது.

''இதுக்கு என்ன சொல்றீங்க?''

''இது பொய்! இந்த சாம்ஸனை எனக்குத் தெரியவே தெரியாதுங்கறேன் நான்!''

''அப்ப இந்த லெட்டர் பொய்யா?''

''எதுமேல வேணாலும் சத்யம் பண்ணி சொல்றேன் இது பொய்!''

''அப்பா நம்பிட்டாரே...?''

''அது அவர் கண்முழிச்சாத் தெரியும்!''

மீனா உடனடியாக போய் குப்தா அருகே அமர்ந்து கொண்டாள். அவளின் எதிர்பார்ப்பு கல்யாணுக்குச் சிரிப்பைத் தந்தது.

அந்தக் கடிதம் பொய் என்று நிரூபிப்பதை விட முக்கிய விஷயம் அதை எழுதியது யார் என்பதுதான்.

''யாராக இருக்கும்?'' - கல்யாண் யோசிக்க ஆரம்பித்தான்.

''இந்நேரம் அந்தக் கடிதம் குப்தா உயிரை வாங்கியிருக்கும். அந்த கல்யாண் பய காதலுக்கு வேட்டு வெச்சிருக்கும்...'' துரைராஜிடம் சொல்லிக் கொண்டிருந்தான். சாம்ஸன்.

''ஒரு கடிதத்தை நீ இவ்வளவு தூரம் நம்பறது ஆச்சரியமா இருக்கு. இந்த மாதிரி எத்தனை விஷயங்களை பார்த்துருப்பான் அந்தக் குப்தா...''

''அந்தக் குப்தாவுக்கும் இந்தக் குப்தாவுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு துரைராஜ். அந்தக் குப்தா நெஞ்சழுத்தம் மிகுந்தவன். இவன் அப்படியில்லை. உடைஞ்சு போய் ஒட்ட வைக்கப்பட்டிருப்பவன். குப்தா டாக்டரைச் சந்தித்தேன். அவனால சின்ன அதிர்ச்சியைக் கூட தாங்கிக்க முடியாதுன்னு தெரிஞ்சுக்கிட்டேன். அதனால தான் இந்த அம்பை எறிஞ்சேன்!''

''உன் கணிப்புப்படி குப்தா செத்துட்டான்னே வெச்சுப் போம்... உன் திட்டம் எப்படி நிறைவேறும்? குப்தா

சாகறதால உன் மகளுக்கு எப்படி வாழ்க்கை கிடைக்கும்? அந்த மீனா எப்படி வாழாவெட்டி ஆவா?''

''பொறுத்திருந்து பார் துரைராஜ்...'' இருவரும் பேசிக் கொள்ளும் சமயம் காலிங்பெல் குறுக்கிட்டது.

கதவைத் திறந்தபோது சாம்ஸனுக்கே தூக்கி வாரிப் போட்டது. கையிலும் காலிலும் கட்டுடன் வாசலில் சோமன் நம்பியார்!

* * *

# 18

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''எதிரி மிக வலுவானவனாக இருக்கும் பட்சத்தில் அவனை வீழ்த்த அவனது எதிரி ஒருவனுடன்... அவன் நமக்கும் எதிரியாக இருந்தாலும் பரவாயில்லை கூட்டு வைத்துக் கொள்வது என்பது ராஜ தந்திரங்களில் ஒரு வகை. இந்த தந்திரங்களைப் பற்றித் தெரியாதவர்கள் எந்த நிலையிலும் சின்ன விஷயத்தைக்கூட வெல்ல முடியாது.''*

**சோ**மன் நம்பியாரை முற்றிலும் எதிர்பார்த்திராத நிலையில் துரைராஜிடமும் சாம்ஸனிடமும் பதட்டம் பரவியது.

''நில்லு...'' சாம்ஸனிடம் தீர்க்கமான அலறல்.

''கத்தாதே! நீ என் எதிரின்னு தெரிஞ்சும் இந்த சோமன் வீடு தேடி வந்திருக்கான்னா அதுக்குக் காரணம் இல்லாமலா இருக்கும்?''

''அது எனக்கே நல்லாத் தெரியும்... குப்தாவை உன்னால ஒண்ணும் பண்ண முடியலை. என் கூட கூட்டு சேர்ந்தாலாவது ஏதாவது செய்யலாம்னு பார்க்கறே!''

''சபாஷ் சாம்ஸன்! நீ பயங்கர ஐக்யூ உள்ளவன். நீ நினைச்சது க்ரெக்ட். நான் அதுக்குத்தான் வந்துருக்கேன்... வா இரண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து குப்தாவை இரண்டுல ஒண்ணு பார்ப்போம்!''

''அந்த குப்தா மட்டுமே என் குறி கிடையாது. நீயும் தான்... சொல்லப் போனா குப்தா கூட இப்ப திருந்திட்டான்... ஆனா நீ இன்னும் இந்தச் சமுதாயத்தைச் சுரண்டற ஒரு அயோக்யனாவே இருக்கே!''

''நடக்க முடியாம நடந்து வந்துருக்கேன் - நீ பாட்டுக்கு தத்துவம் பேசி உன் தலைல மண்ணை அள்ளி போட்டுக்காதே... எதிரிக்கு எதிரி நண்பன்னு அடிக்கடி சொல்வியே சாம்ஸன்... அதை நினைச்சுப் பாரு...''

''நீ என் எதிரி மட்டுமல்ல - எல்லோருக்குமே எதிரி! உன்கூட கூட்டு சேர்ந்து குப்தாவைப் பழி வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லே. குப்தா இந்நேரம் பரலோகம் போயிருப்பான்...''

''குப்தாவாவது பரலோகம் போறதாவது... டாக்டரோட துணையோட அவன் ஜே ஜேன்னு இருந்துகிட்டிருக்கான். சந்தேகமா இருந்தா போன் பண்ணி கேட்டுப் பாரு...''

மறுவினாடி சாம்ஸன் போனைச் சுழற்றினான். குப்தா ஆரோக்கியமாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு போனை முடக்கவும் செய்தான்.

''இப்ப என்ன சொல்றே? கமான் சாம்ஸன்... நாம இரண்டு பேருமே ஜெயிக்கணும்... வா என் கூட கூட்டுச் சேர். நான் சொல்றதைக் கேள்! காலம் முழுவதும் நல்லா இருக்கலாம்... நீ ஜெயில்ல பட்ட கஷ்டத்துக்கு அத்தனைக் கத்தனை சுகம் காணலாம்!'' சோமனின் ஆசையூட்டும் பேச்சில் மெல்ல கரைந்தது சாம்ஸனின் மனது.

அது சினேகமாக சோமனை அவன் பார்ப்பதில் நிரூபணமானது.

''சபாஷ் சாம்ஸன் சபாஷ்...! குப்தாவைப் பொட்டலம் கட்டிட்டுத்தான் இனி நாம அடங்கணும்... இதுக்கெல்லாம் தடையா இருக்கிற அந்தக் கல்யாணுக்கு நாம முதல் குறி வைக்கணும்... வெச்சுடுவோமா...?''

அசைந்து ஆமோதித்தது சாம்ஸனின் சிரம்!

கண் விழிக்கும் குப்தா கலங்கியபடி வெறிக்கும் மீனாவைப் பார்த்து மெல்ல நிமிர்ந்தார்.

''அப்பா! இப்ப எப்படி இருக்குப்பா உடம்பு?'' கேவியபடி கேட்டாள் மீனா.

''நீ எப்படி இருக்கே? கடிதம் தந்த அதிர்ச்சிய தாங்கிட்டியா?''

''அப்பா ஒரு சந்தேகம்...'' மீனாவின் கேள்வி முன் நிமிர்ந்து அமர்ந்தார் குப்தா.

''நான் சொல்றேன்... அந்தக் கடிதத்தை யார் கொடுத் தாங்க - அது உண்மைன்னு எதை வெச்சு நம்புனீங்கன்னு தானே கேக்கறே''...

''ஆமாப்பா...''

''அது பொய்ம்மா - எனக்கும் தெரியும்...''

''தெரிஞ்சும் எதுக்குப்பா எனக்கும் ஞானசேகருக்கும் கல்யாணத்துக்கு நாள் குறிச்சீங்க!''

''தெரிஞ்சோ தெரியாமலோ அவன் காதலோட விளையாடி சாம்ஸன் மகளுக்கு நான் துரோகம் பண் ணிட்டேன்... சாம்ஸனுக்கும் அவன் மகளுக்கும் நியாயம் செய்யுணும்கறதுதான் கல்யாணுக்கும் உனக்கும் நான் வைக்க இருந்த அடுத்தவேலை... ஆனா அதுக்குள்ள இப்படி ஒரு கடிதம் வந்தது. இது சாம்ஸன் வேலையாத் தான் இருக்கணும்... இப்படி ஒரு ஏற்பாட்ட செய்தா அந்த சாம்ஸன் கொதிச்சுப்போய் நேர்ல வருவான். அப்ப அவன் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்டு அவன் மகளோட ஞானசேகரை சேர்த்து வெச்சிடலாம்னு பிளான் பண்ணித் தான் இப்படி ஒரு திட்டம் போட்டேன். ஆனா நீயோ என்ன எதுன்னுகூட கேக்காம அதிர்ந்து போய் மயங்கி விழுந்துட்டே. உனக்கு ஒண்ணுன்னா தாங்கிக்கற சக்தி

ஏனோ என்கிட்ட துளி கூட இல்ல. அதாம்மா என் உயிரும் இந்த உடம்ப விட்டுட்டு ஓடப் பார்த்துச்சு.'' ''ஆனா முடியாத போயிடுச்சு'' மீனா குப்தாவின் பேச்சைக் கேட்டு அவரை நெருங்கி ஆனந்தக் கண்ணீருடன் அவர் தோளைக் கட்டிக் கொண்டாள்.

அந்த வேளை பார்த்து வக்கீல் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

''அம்மாடி! என் பாவப் பணத்துல ஒரு சல்லிக் காசைக் கூட நான் உனக்கு எழுதி வைக்கல்ல. கல்யாண் உழைச்சு உனக்கு சோறு போடணும். அதுதான் என் ஆசை'' வக்கீலைப் பார்த்தபடி அவர் பேசியதைக் கேட்டு நெஞ்சம் பனிக்கட்டியான மாதிரி சிலிர்த்துப் போனாள் மீனா.

அருகிலேயே மறைவாக நின்று கொண்டிருந்த கல்யாண் கூட அதைக் கேட்டு நெகிழ்ந்துதான் போனான்.

ஆனால் தனக்கு வர இருக்கிற ஆபத்து பற்றித் தெரியாமல்!

அடியாட்கள் வசம் போட்டோவைக் காட்டிக் கொண் டிருந்தான் சோமன் நம்பியார். அருகிலேயே சாம்ஸன்.

''இவன் செத்துடக் கூடாது. அதே சமயம் எழுந்து நடமாடும்படியாகவும் இருக்கக்கூடாது. எனக்கு ஏற்பட்ட அதேநிலை இவனுக்கும் ஏற்படணும். நானாவது மன உறுதி யுடன் எழுந்து நின்னுட்டேன். இவன் நிக்கவே கூடாது. ஒரு கால் ஒரு கை...'' சோமன் சொல்லும்போதே சாம்ஸ னுக்குள் அது என்னவோ செய்தது.

லீனா இருந்த இடத்தில் மனது மீனாவை வைத்துப் பார்த்தது. கணத்தில் சோமன் நம்பியாரைப் போலவே குரூரமாக மாறிவிட்டது.

அடியாட்கள் போட்டோவை வாங்கிக் கொண்டார் கள். வேகமாகக் கிளம்பினார்கள். சாம்ஸன் தானும் சேர்ந்து கொண்டான்! அவர்கள் அத்தனை பேரையும் சுமந்தபடி ஒரு ஜீப் சோமனின் பங்களாவை விட்டுப் பறந்தது.

எஸ்டேட்டிலிருந்து வந்திருந்த ஞானசேகரிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தான் கல்யாண். அருகி லேயே நின்றபடி மீனாவும் நடந்ததை எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஞானசேகர் தலை தாழ்ந்திருந்தது. லீனா காதல் விஷயத்தில், குப்தாவின் பகடைக்காயாய் மாறி அவளை விட்டுப் பிரிந்த துக்கத்தில், நெஞ்சில் கோலி அடைத்துக் கொண்ட மாதிரி ஒரு பிரமை வேறு. குப்தாவை அவன் பார்த்தபோது அவர் தன் பங்குக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு லீனாவுடன் ஒன்றுபட்டு வாழ வாழ்த்தும் சொன்ன போது அவன் முகத்தில் விதம் விதமான உணர்வுக்கலவை.

இருவர் பெயரிலும் சொத்துக்கள் சிலவற்றைப் பிரித்து எழுதி உயிலை அவன் எதிரில் நீட்டி ஞானசேகரைச் சிலிர்க்க வைத்துவிட்டார் குப்தா. ''மாமா எனக்கு இந்தச் சொத்து இருக்கட்டும். மீனாவுக்கு ஒண்ணுமில்லையா?'' உதடு துடிக்க அவன் கேட்ட கேள்விக்கு அவர் ''என் ஆசிகள்தான் சொத்து அவளுக்கு'' என்று கைகளைக் காட்டி அசைத்தபோது ஞானசேகர் சிலிர்ப்பின் உச்சத்துக்கே போய் விட்டான்.

''எனக்கும் இந்தச் சொத்துங்க வேண்டாம் மாமா. உங்க ஆசி போதும்'' என்று சொல்லிப் பார்த்தான். ஆனா குப்தா மறுத்து விட்டார்.

தான் தனக்குத் தெரிந்த விஷயத்தில் நியாயப் பங்கீடு செய்திருப்பதாகச் சொல்லி அவனை ஏற்கும்படி செய்து விட்டார்.

நேபாளத்துக்கு டிரெய்னிங் போயிருப்பதைக் கண்டு பிடித்து அவளுக்கு சகலத்தையும் விளக்கி, பேக்ஸ் கொடுத்திருப்பதாக கல்யாண் கூறி அனைவரையும் அந்த வினாடி அசத்தி விட்டான்.

குப்தாவுக்கு அவனைப் பார்க்கப் பார்க்க பெருமை பிடிபடவில்லை.

துக்கமோ இன்பமோ அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடாதே. குப்தாவினுள் திரும்பவும் ரத்தப் பாய்ச்சல்!

''ஐய்யோ...'' பதறிப் போனாள் மீனா.

''ஆண்டவா கைவிட்டு விடாதே...'' மீனா கண்ணீர் மல்க கை கூப்பிய வேளை. தொலைபேசியை எடுத்து எண்களைச் சுழற்றி டாக்டருக்கு அழைப்புப் போடப் பார்த்தான் கல்யாண்.

சண்டித்தனம் செய்து அவனுக்கு எரிச்சலை மூட்டியது அந்தத் தொலைபேசி. ''ச்சை...'' என சலிப்புடன் அங்கிருந்து டாக்டரை அழைத்து வர ஓடினான். போர்ட்டிக்கோ மாருதி போர் வீரனாக ஓட ஆரம்பித்தது.

மாருதி அந்தப் பக்கம் நகர்ந்திருக்கும். அதே வேலையில் இந்தப் பக்கமாய் அடியாட்களுடன் ஜீப் போர்டிகோவினுள் நுழைந்தது. உள்ளே அனற்பழமாய் சிவந்த விழிகளுடன் சாம்ஸன்.

அடியாட்கள் இறங்கி கல்யாணைத் தேடி உள்ளே ஓடினார்கள்.

* * *

## 19

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''குப்தாவின் கொள்ளைப் பொருட்களில் கோயில் விக்கிரகமும் ஒன்று! விலை மதிப்பே இல்லாத அது இன்றும் குப்தாவிடம் தான் இருக்கிறது என்கிறார்கள். அந்த சிலை மட்டும் இன்று ஒருவனிடம் இருந்துவிட்டால் அவனே குபேரன். ஆம் இன்று அதற்கு அப்படி ஒரு விலை! யாரிடம் உள்ளது. அது? சோமனிடமா? குப்தாவிடமா?''*

திபுதிபுவென்று திரண்டு வந்து நிற்கும் அடியாள் கூட்டத்தைப் பார்த்து மிரண்டு போனாள் மீனா.

''யாரைத் தேடறீங்க... என்ன வேணும்?'' மீனா துணிச்சலை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

''எங்கடி உன் ஹீரோ?'' மீனாவுக்குப் புரிந்துவிட்டது.

மீனா அமைதியாய் இருந்தாள்.

''கேக்குறோம்ல...'' ஒரு மொட்டைத் தலையன் தெனாவட்டாகக் கேட்டான். அவன்தான் தலைவனோ?

மீனாவுக்குள் சட்டென்று ஒரு நிமிர்வு.

''தெரியும் மொட்டை... நீ இப்படிக் கேப்பேன்னு'' என்றாள்.

''ஏய். என்ன வாய்க் கொழுப்பா?''

''எப்படி வேணா வெச்சுக்கோ... வீட்டைச் சுத்தி போலீஸ் இருக்கறதால ரொம்ப புத்திசாலித்தனம்னு கூட சொல்லலாம்.''

அவன் அதிர்ந்தான்.

''வீட்டைச் சுத்தி போலீஸா? யார் காதுல பூ சுத்தறே?'' அவன் பதட்டம் கேள்வியில் பற்றி எரிந்தது.

''சோமன் இப்படியெல்லாம் திட்டம் போடுவான்னு கூடவா எங்களுக்குத் தெரியாது. அதான் ஒரு வாரமாவே முன்னேற்பாட்டோட இருக்கோம்...''

மீனா பேசும்போதே இரண்டு பேர் உள் அறைகளைத் துழாவித் திரும்ப ஒருவன் வாசற்புறம் எட்டிப் பார்த்தான். பார்வையில் போலீஸ் பயம்.

மொட்டைத் தலையன் மீனாவை வெறித்தான்.

மீனாவிடம் படு செயற்கையான ஒரு அலட்சியச் சிரிப்பு. அடி வயிற்றில் பயப்பாம்பு நெளிந்தாலும் முகத்தில் அது தெரியாதபடி பார்த்துக் கொண்டாள்.

குப்தாவோ முனங்க ஆரம்பித்தார். நெஞ்சுவலியின் வெளிப்பாடு! முகமெங்கும் வியர்வை.

மீனா அவரின் துடிப்பைப் பார்த்து மனம் உருகவும் செய்தாள். மொட்டைத் தலையன் அதையும் கவனித்தான்.

அப்போது வாசல்புறம் காரின் வேகத்தேக்கம்.

பாய்ச்சலாக வெளிப்பட்டான் கல்யாண். உடன் டாக்டர்!''

''வாங்க டாக்டர்! என்ன அதிசயமாக உங்க அசிஸ்டெண்டையும் கூட்டிக்கிட்டு!'' முந்திக் கொண்டு வர வேற்று கல்யாணை அசிஸ்டெண்டாக்கினாள்.

டாக்டரிடம் சின்னக் குழப்பம். கல்யாணிடமும் கூட நூல் போன்று மெலிந்த அதிர்ச்சி.

ஆனால் சட்டென்று புரிந்து போனது.

கல்யாண் உடனேயே எதிர்பார்ப்புக்கு இசைந்து கொடுத்தான்.

"மேடம் பேச்சு பிறகு - சாருக்கு என்ன?"

பேச்சோடு நெருங்கி குப்தாவைத் தொட்டு நாடி பிடித்துப் பார்த்து நடிக்கவும் செய்தான்.

டாக்டரும் சுதாரித்துக் கொண்டார்.

ஓடிப்போய் குப்தாவைக் காப்பாற்ற ஆரம்பித்தார்.

மொட்டை வில்லன் கூட்டம் இப்போது சற்று சுருதி குறைந்த நிலையில் அங்கு நடப்பதைப் பார்த்துப் பம்மியது.

"மேல கையை வெச்சாலோ... இல்லை ரௌடித் தனம் செய்தாலோ... உயிரோட ஒரு பய வெளிய போக முடியாது!"

அந்தக் குழப்ப நொடிகளில் துப்பாக்கியை தேடிப் பிடித்திருந்தாள் மீனா.

பொம்மைத் துப்பாக்கி என் நினைத்து விடுவார்களோ என்று கருதி ஒரு குண்டை மொட்டையனின் முழங் காலுக்குக் கீழே அனுப்பியும் வைத்தாள்.

கூட்டமே கதி கலங்கிப்போனது.

மொட்டையன் தரையில் விழுந்து கதற ஆரம்பித் தான்.

ரௌடிக் கூட்டம் நிலைகுலைந்து போயிருந்தது. மொட்டையன் காலில் இருந்து கொட்டிய ரத்தம் தரை மீது சிவப்புப் பாம்பாய் வளைந்து கொண்டிருந்தது.

கூட்டத்தில் ஒருவன் அப்படியே பின்பக்கமாக நடந்து ஓடலாமா என்று பார்த்தான்.

மீனா பிஸ்டலை அவனை நோக்கி நிமிர்த்தினாள்.

"ஓடாதடா கண்ணா... துளி கூட தயங்காம மூட்டைப்

பேத்துடுவேன்'' என்று சொன்ன மாதிரியே ட்ரிக்கரை அழுத்திப் பெயர்க்கவும் செய்தாள்.

குறி தவறாத குண்டுகள் இரண்டு பேரை சாய்த்து விட்டன. நிலைகுலையாமல் நின்று பெண் புலியாய் காட்சி தருபவளைப் பார்த்து ரௌடிக் கூட்டம் கதி கலங்கிப் போனது.

''வேண்டாம்... வேண்டாம்... எங்களை விட்ரு! நாங்க போயிடறோம்! உன் வழிக்கே வரமாட்டோம்! வரமாட் டோம்னா வரமாட்டோம்...'' மொட்டையனிடம் கதறல்.

மீனாவோ துப்பாக்கியை இறக்காமல் பின்னோக்கி நடந்தாள். அருகில் இருந்த மேஜை டிராயரில் கைவிட வும் கட்டாய் வந்து அவள் கையில் அடங்கியது பத்தாயிர ரூபாய் கட்டு ஒன்று.

அதை எடுத்து மொட்டையனை நோக்கி வீசியவள், ''இதை எடுத்துக்கிட்டு டாக்டர்கிட்ட போய் காலை சரி செய்துக்கோ! மேலும் தேவைன்னா போன் பண்ணு! நான் சோமன் நம்பியாரை விட நல்ல முதலாளி. பிரியப் பட்டா நான் சொல்றபடி கேளுங்க! இல்லேன்னா வழிக்கே வராம ஓடிடணும்!'' மொட்டையன் மீனாவை அதிசயமாய் பார்த்தான். ''இப்படிக்கூட ஒரு பெண்ணா?'' என்று.

அவர்கள் போனதும். குப்தாவுக்கு சிகிச்சையளித்த டாக்டரும் கிளம்பினார். கல்யாணும் மீனாவும் தனியே ஒதுங்கினர்.

''கல்யாண் அப்பா செய்ய வேண்டிய முக்கியமான விஷயமே இனிமேதான் இருக்கு.''

''என்ன மீனா புதிர் போடறே? குப்தா சாரோட பாவப் பரிகாரம் இன்னுமா தீரலை?''

''ஆமாம் சந்திரகிரீஸ்வரர் கோயிலைத் தெரியுமா உங்களுக்கு?''

''உம்... தெரியும் தெரியும் - அந்தக் கோவில் விக்கிரகம் கூட திருட்டுப் போச்சே!''

''அதைத் திருடியதே சோமன்நம்பியும் அப்பாவும் தான்!'' அவள் பதிலால் ஸ்தம்பித்துப் போனான் கல்யாண்.

* * *

## 20

**சாம்சனின் டைரியிலிருந்து ....**

*''ஒரு மனிதன் விட்டுக் கொடுக்க வேண்டிய நேரத்தில் விட்டுக் கொடுத்து எப்படிப் போக வேண்டுமோ அப்படிப் போய் விட வேண்டும். என்றைக்கும் வீம்பு நல்ல பலன் தந்தது இல்லை. என் ஜெயில் அனுபவத்தில் எனக்குள் எவ்வளவோ மாற்றங்கள். இதில் ராஜதந்திரம் பற்றியும் கூட நான் சிந்தித்ததால் இப்பொழுது நல்லவன் போல் மாறப் போகிறேன் - பாவம் குப்தா...''*

தமிழ்நாடே குலுங்கிய களவு, அது! மிகச் சாமர்த்தியமான கொள்ளை அது. இன்று வரை ஒரு சின்னதுப்பு கூட கிடையாது. அப்படிப்பட்ட கொள்ளையில் ஈடுபட்டவர்களில் ஒருவரா குப்தா?

''இப்ப அந்த சந்திரகிரீஸ்வரர் சிலை எங்கே?''

''சத்தியமா எனக்குத் தெரியாது. அப்பாவே நேத்து தான் என்கிட்ட சொன்னார். அந்தச் சிலையை நீங்க திரும்ப கோவில்ல சேர்க்கணும் யாருக்கும் தெரியாம...''

''திருடின சிலையை உங்கப்பா நாடு கடத்தலையா?''

''இல்லை அதை திருடின அன்னிக்குத்தான் அப்பாவுக்கு முதன் முறையா நெஞ்சுவலி வந்தது. ஒரு கைகூட செயலிழக்கிற நிலை அப்பாவுக்கு புரிஞ்சு போச்சு. அந்த வினாடியே அவருக்குள்ள நல்லவிதமான மனமாற்றம்னும் சொல்லலாம்.''

''அப்பல்லாம் உனக்கு அப்பா எப்படிப்பட்டவர்னு தெரியாதா?''

''தெரியாது. நான் யு.எஸ்.ல. படிச்சுக்கிட்டிருந்தேன்.

எவ்வளவு பணம் கேட்டாலும் அனுப்பி வைப்பார். இவ்வளவு மோசம்னு தெரியாது.''

''மோசம்னு தெரிஞ்சப்ப என்ன செஞ்சே?''

''தற்கொலை முயற்சியில் இறங்கினேன்!''

''நிஜமாவா?''

''ஆமா... மூட்டைப்பூச்சி மருந்தை விழுங்கிட்டேன்.''

மீனா சொன்னதில் நடு நெற்றியில் கல்லடி பட்ட மாதிரி ஒரு கலக்கம் கல்யாணிடம்.

''அப்புறம் எப்படி தப்பிச்சே மீனா?''

''அது ஒரிஜினல் மருந்து இல்லை. கலப்பட மருந்து. அப்பாவும் பணத்தை தண்ணியா இறைச்சு என்னைக் காப்பாத்தினார்.''

''ஐ. சி.. அப்புறம்?''

''நான் பிழைச்ச மறுநிமிஷம் அடுத்து நான் தற்கொலை செய்துக்கக் கூடாதுன்னா நான் சொல்றபடி கேக்கணும்னேன்!

அப்பா சரின்னார். செஞ்ச தப்புக்கு பரிகாரம் செய்யுங்கன்னேன். என்ன வேணா செய்யறேன்னார். என் மேல் உள்ள பாசம் உடம்புல உள்ள வியாதியால வந்த ஞானம் எல்லாம் முதல் தடவையா ஒரு அநியாய பணக்காரனை நியாயவானா ஆக்கிடிச்சு!''

மீனாவின் பேச்சில் கல்யாண் நெகிழ்ந்து போய் இருந்தான். அவள் கையை வாஞ்சையாகப் பற்றினான்.

''ரியலி. நீ ஒரு கிரேட் கேர்ள்'' என்றான்.

''நான் ஒரு திருடன் மகள்...'' என்றாள் அவள்.

''அது மட்டுமா? திருடியும் கூட. என் இதயத் திருடி!''

- அவனது காதல் பேச்சு அவளுக்கு ஆறுதலாக இருந்தது. இருந்தும் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவன் துடைத்து விட்டான். காலமெல்லாம் இனி நான்தான் உனக்கு என்று சொல்வதுபோல் இருந்தது அவன் செயல்.

அப்போது போன் கூப்பிட்டது. கல்யாண் ரீசிவரை எடுத்து ''ஹலோ'' என்றான்.

''ஹலோ மிஸ்டர் கல்யாண்! நான் ஞானசேகர்!''

''சொல்லுங்க சேகர்!''

''லீனா நோபாளத்துல இருந்து டெல்லி வந்து டெல்லியில் இருந்து மதுரையும் வந்திட்டா... தகவல் வந்திருக்கு. நான் போய் ரிசீவ் பண்ணலாம்னு இருக்கேன்.''

''ஆல் தி பெஸ்ட். பாவம் அவங்க. அவங்களை ரொம்ப நோகடிச்சுட்டீங்க இனிமேலாவது பார்த்து பக்குவமா... ''

''நோ பிராப்ளம் கல்யாண். இனி கவனமா இருப்பேன்.''

''ஒன் மினிட் மீனா பேசணுமாம்.''

ரிசீவர் மீனா கைக்கு மாறியது.

''ஏய் ஞானா. என்ன பொண்டாட்டிய பார்க்கப் போறியா?''

''ஆமா.''

''ஜமாய். இனி ஒருநாள் ஒரு பொழுதுகூட நீங்க பிரியக்கூடாது.''

''நிச்சயமா.''

''ஞானா! நீ எஸ்டேட்டுக்கு போயிடு. அது இனிமே உன் ராஜ்ஜியம்.''

''தேங்க்யூ மீனா டயம் ஆச்சு. ட்ரெய்ன் ஸ்டேஷனை ரீச் பண்ணியிருக்கும்.''

கேரேஜை விட்டு இறங்கினாள் லீனா!

''ஹலோ...'' குரலோடும் ஒரு பூங்கொத்தோடும் ஞானசேகர்.

அவளுக்கு சிலிர்ப்பாக இருக்கிறது. அதே சமயம் தயக்கமாக...

அவள் புருவ வளைவில் கேள்வியின் பிரசன்னம். ஞானசேகர் புரிந்து கொண்டான்.

''லீனா... பாஸ்ட் இஸ் பாஸ்ட். பின்னால திரும்பிப் பார்க்காதே. இனி நமக்கு அற்புதமான எதிர்காலம். என் தவறை நான் உணர்ந்துட்டேன். நீயும் எல்லாத்தையும் மறந்து...''

''ஞானசேகர் பேசும்போதே அவன் தோள் மேல் ஒரு கரம் விழுந்தது. திரும்பியபோது 'பளார்' என்று ஒரு அறை அதிர்ந்து போனான் ஞானசேகர்.

அறைந்து விட்டு முறைத்துக் கொண்டிருந்தான் சாம்ஸன். அவள் கண்களில் ரத்தச் சிவப்பு.

அப்பாவைப் பார்த்த லீனா அதிர்ந்துப் போனாள்.

''அப்பா நீங்க எப்ப வெளியே வந்தீங்க'' என்றபடி அவனை நெருங்கினாள்.

''அது இருக்கட்டும். இவன் கூப்பிட்டான்னு நேபாளத்துல இருந்து டிரெய்னிங்கை விட்டு பாதியில வந்துட்டியே உனக்கு சூடு சொரணையே இல்லையா?'' கத்தினான் சாம்ஸன்.

''மாமா நான் இப்ப பழைய ஞானசேகர் இல்லை. மாறிட்டேன்'' சுதாரிக்கப் பார்த்தான் ஞானசேகர்.

''டேய் நீங்க மாற மாட்டீங்கடா... மாற மாட்டீங்க உலகமே எதிர்த்தாலும் நீங்க திருந்த மாட்டீங்க. உங்களுக்கு

ஏமாத்தறதே தொழில். ஆனா இப்படியே வண்டி ஓடிடாது. இந்த சாம்ஸன் இருக்கிறவரை ஓடவே ஓடாது.''

ஞானசேகருக்கு புரிந்தது.

தன் தவறுக்கு மன்னிப்பு என்கிற ஒரு வார்த்தையில் மன்னிப்பு கிடைத்து விடாதுதான்.

சாம்ஸன் லீனாவை அழைத்துக் கொண்டு நடந்தான்.

அவள் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அவனை பின் தொடர்ந்தாள்.

சோகமாய் ஞானசேகர்.

அப்பொழுது ஞானசேகர் தோளில் ஒரு கை விழுந்தது. திரும்பிப் பார்த்தால் கல்யாண்!

''டோன்ட் ஒர்ரி. போகப் போக சரியாயிடும். லீனா உங்க மனைவி. போங்க... உங்க உரிமையை விட்டுத் தராதீங்க. உங்க மாமனார் கால்ல விழறதுல ஒண்ணும் தப்பு இல்லை.''

போதாதா இந்த தூண்டுதல். ஓடினான் ஞானசேகர். ஸ்டேஷன் என்றும் பாராமல் சாம்ஸன் காலில் விழுந்தான். லீனாவுக்கு என்னவோ போல் ஆகி விட்டது.

''அப்பா.... போதும்ப்பா.'' என்றாள் உடைந்த உள்ளத்தோடு.

புயல் போல் வந்து தேங்கிய காரில் இருந்து இறங்குபவன் சோமன்நம்பி. இறங்கிய இடம் துரைராஜின் வீடு.

வீட்டு முன் அவரைப் பந்தலுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான் சாம்ஸன்...சோமனைப் பார்த்து சற்று விதிர்த்து உள்ளே அழைத்தான்.

''என்ன சாம்ஸன், மாப்பிள்ளை வந்துட்டாப்ல இருக்கு?''

''அதைத் தவிர வேற பேச்சு பேசு சோமா!''

''எதிரியோட சமரசமா?''

''எதிரியோடல்ல... என் மாப்பிள்ளையோட...''

''உன் மாப்பிள்ளை. பலே! குப்தா துரோகத்தை அவ்வளவு சீக்கிரமாகவே மறுந்துட்டே!''

''அப்படின்னு யார் சொன்னது?''

''சொல்லணுமா? பார்த்தாலே தெரியுதே! குப்தா உன்னை ஜெயிலுக்கு அனுப்பினதுக்கும் ஏதாவது பிச்சைக் காசு தந்திருப்பானே!''

''சோமா வாயை மூடு! அந்த பிச்சைக்காசுக்கு மயங்க நான் ஒண்ணும் கேடு கெட்டவன் இல்ல. குப்தாவை கதற விடப் போறேனா இல்லையான்னு பார்!''

''முட்டாள். அவனை வியாதிங்க கதற விட்டுகிட்டு தானே இருக்கு. அவன் கதறலா முக்கியம்?''

''பின்ன?''

''அவன் தங்கம்... அவன் கறுப்புப் பணம் அப்புறமா அந்த சந்திரகிரீஸ்வரர்!''

''வாவ்!'' - வாய் பிளந்தான் சாம்ஸன்.

* * *

## 21

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறுமாமே? சோமா.... நீ இன்று என் பிடியில் உன்னை நான் என்ன பாடுபடுத்து கிறேன் பார். குப்தாவின் கொள்ளைப் பணத்தை அனுபவிக் கும் அருகதை உனக்கும் இல்லை. எனக்கும் இல்லை.*

''காணாம போன சந்திரகிரீஸ்வரர் சிலை இப்ப குப்தாகிட்டதான் இருக்கா?''

''ஆமாம்... அதுமட்டும் கைக்கு வந்துட்டா போதும் நாமதான் குபேரனோட நேர்வாரிசு.''

''இந்த வீடு உனக்கு வசதியா இருக்கா?''

''ஏதோ பரவாயில்லை!''

''அந்த கல்யாண எம்காதகனா இருக்கான்.''

''அப்ப நாம எமனுக்கு எமன் ஆகணும்''

''அதான் எப்படி? சொல்லு உனக்கும் பங்கு தரேன்!''

''சபாஷ் நீ எனக்கு பங்கு தர்றியா?''

''வேண்டாம். நீ கொடுக்கறதாவே இருக்கட்டும். அந்த தங்கம், அவன் கறுப்பு பணம், அந்த சந்திரகிரீஸ்வரர் சிலை இவைகளை அடையணும். வழி தெரியுமா உனக்கு? அசையா சொத்தெல்லாம்தான் கோவில் குளம்னு போயி டிச்சு''.

''வழி தெரியறது அப்புறம் பங்கு எவ்வளவு?''

''உனக்கு முப்பது எனக்கு எழுபது''

''சோமா எழுந்திருக்கிறியா, வெளியே போறியா?''

''சாம்ஸன் என்ன பேசுறே? நான் யாருன்னு தெரிஞ் சுமா இந்த பேச்சு.''

''தெரிஞ்சுதான் பேசறேன். இப்ப நீ நொண்டி. அடியாட்கள்ள இருந்து அவ்வளவு பேரையும் இழந்துட்டு நிக்கற ஒரு சமூக விரோதி!'' சாம்ஸனின் தீர்மானமான பதிலில் சோமன் நம்பிக்கை வியர்த்தது.

''சரி. நம்ப டீல் என்ன அதைச் சொல் முதல்லே.''

''சொல்றேன். நீ எனக்கு சொன்ன அதே பர்சன்டேஜ். ஆனா எழுபது எனக்கு. முப்பது உனக்கு.''

பக்கென்று ஆனது சோமன் நம்பியாருக்கு.

''சாம்ஸா இது அநியாயம்.''

''அந்த வார்த்தையை நீ சொல்லக்கூடாது. இந்த பர்ச்ன்டேஜ்கூட போனா போகட்டும்னுதான். இல்லேன்னா ஹன்ரட் பர்சன்டையும் நானே எடுத்துக்க எனக்குத் தெரியாம இல்லை.''

பகீர் என்றானது சோமனுக்கு. வலது கையான லாரன்ஸையும் இழந்தாயிற்று. எங்கே போனான் என்றே தெரியாது. மார்க்ரெட் விஸ்வம் என்கிற கோஷ்டியும் கூட அவன் அறிந்த அளவில் தங்கத்தோடு ஓடிவிட்டவர்கள்.

''இப்போதைக்கு ஒரே ஹோல்ட் இந்த சாம்ஸன் தான். சரி என்று ஒப்புக்கொண்டு தலையை ஆட்டி வைப்போம். பிறகு பார்த்துக் கொள்வோம்.

'சரி' என்று ஒப்புக்கொண்டான். அப்படியே ஆவலாகக் கேட்டான்.

''ஆமாம் உன் பிளான் என்ன?''

''அதை இப்ப சொல்ல மாட்டேன். என் மாப்பிள்ளை மூலமா நல்ல பிள்ளையா. அந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்ச பிறகு சொல்கிறேன்.''

சோமனுக்கு மற்ற விவரங்கள் சொல்லாமலே புரிந்து விட்டது!

"வா சாம்ஸன்... " வாய் நிறைய வரவேற்றார் குப்தா. சாம்ஸனும் பழைய பகையை மறந்தவன் போல் அவர் அருகில் போய் உட்கார்ந்தான்.

பார்க்க ரம்யமாக இருந்தது. மீனாவின் கண்களில் பனிப்பு.

"அப்பாவை நீங்க மன்னிச்சதுக்கு ரொம்ப நன்றி. உங்களை எப்படி கன்வின்ஸ் பண்றதுன்னு ரொம்ப கவலைப்பட்டுகிட்டிருந்தேன்." அவள் பேச்சைக் கேட்டு சாம்ஸன் சிரித்தான்.

"பழைய பேச்சே இனி வேண்டாம். நடந்தது ஒரு கெட்ட கனவு இனி நடக்கப்போறதைப் பேசுவோம்.

குப்தா சாரைப் பொறுத்தவரை நான் அவரோட அதே பழைய வேலைக்காரன்தான். தவறுகளை திருத்தற வேலைல கல்யாண் எனக்கு பங்கு தரணும்".

கல்யாண் அதைக் கேட்டு சிரித்தான்.

"அப்பாடா இப்பவாவது எனக்கு ஒரு துணை கிடைச்சதே" என்று சந்தோஷித்தாள் மீனா.

"சாம்ஸன் இன்னும் ஒரு முக்கியமான கடமை பாக்கி இருக்கு..." என்றார் குப்தா.

"தெரியும் சார். சந்திரகிரீஸ்வரர் விஷயம்தானே?" கல்யாண் கேட்டான்.

"ஆமாம் கல்யாண்... ரொம்ப ரிஸ்க்கான விஷயம். இந்த சிலைக்கு விலை பலகோடி. கீரிடம் நவரத்தினங்களால ஆனது. நானும் சோமனும் பக்திமான வேஷம் போட்டு கோவில்ல ஒளிஞ்சிருந்து காரியத்தை சாதிச்சோம். சிலை யோட வெளியே வரும்போது தடுக்கப்பார்த்த கோவில் வாட்ச்மேனையும் கத்தியால குத்திக் கொன்னோம். அவன் குடும்பத்துக்கும் ஏதாவது செய்யணும்."

''செய்தாச்சு சார்.'' என்கிற வேகமான பதிலைக் கேட்டு அதிர்ந்து போனார் குப்தா.

''என்னப்பா சொல்றே?''

''ஆமாம்ப்பா. கோவில் வாட்ச்மேன் மனைவியைக் கூப்பிட்டு பத்து லட்ச ரூபா கொடுத்துருக்கோம். அவ கூட ரொம்ப சந்தோஷப்பட்டா''

குப்தா அதைக்கேட்டு குதூகலமானார்.

சாம்ஸன் அந்த சூழலை நறுக்கினான். ''சார் சிலை இப்ப எங்கே? அதைச் சொல்லுங்க.''

''பத்ரமா இருக்கு. இருக்க வேண்டிய இடத்துல பத்ரமா இருக்கு.''

''சொல்லுங்க சார். இன்னிக்கே கோயில்ல கொண்டு வெச்சுட்றோம்.''

குப்தா அதைக் கேட்டு சற்று தயங்கினார்.

''என்னப்பா தயக்கம். இந்த விஷயத்தை முடிச்சாச் சுன்னா உங்க மன பாரம் முழுசும் தீர்ந்தாச்சுப்பா.''

''அப்புறமும் ஒண்ணு இருக்கேம்மா.''

''என்னப்பா! என் கல்யாணமா? அதான் கல்யாண் இருக்காரேப்பா.'' மீனாவின் நம்பிக்கைக்குரிய அந்தப் பேச்சு கல்யாணை என்னவோ செய்தது. ஏனோ முகம் வாடி சற்று கலக்கம் பரவியது.

இவர்கள் இந்த அளவு நம்புகின்றார்களே... தான் இந்த நம்பிக்கைக்கு பாத்திரமானவன்தானோ?

கல்யாண் தயங்கித் தவிக்கும்போது சாம்ஸனிடம் பரபரப்பு.

''சார் அந்த சந்திரகிரீஸ்வரர் சிலை எங்கன்னு சொல்லலியே...''

## 22

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*''சோமனிடம் கூட்டு சேர்ந்திருக்கிறேன். யாருடன் சேரவே கூடாது என்று நீதிசாஸ்திரம் சொல்கிறதோ அத்த கைய ஒருவனிடம் கூட்டுச் சேர்ந்துள்ளேன். அவன் இய லாமை காரணமாக என்னை நாடி வந்திருக்கிறான். அவனும் நல்ல எண்ணத்தால் என்னிடம் கூட்டு அமைக்கவில்லை. எந்த விநாடியும் அவன் எதையும் செய்யலாம். எதற்கும் தயாராக நான் இருக்கிறேன்.*

சாம்ஸனின் இடைவிடாத அக்கறை. கவனம் முழு வதும் சிலை மேலேயே இருப்பதை குப்தாகூட உணர்ந்த மாதிரி தெரியவில்லை. ஆனால் கல்யாண் மனதை அது நெருடியது.

''அந்த சந்திரகிரீஸ்வரர் சிலை இருக்கிற இடத்தை நான் சொல்றதவிட முக்கிய விஷயம் அதை நீங்க எப்படி கோயில்ல போய் வைக்கப் போறீங்கதுதான். அதை முதல்ல சொல்லுங்க.'' குப்தாவின் கேள்வி சற்று வசமானது தான். ஆழ்ந்து யோசிக்கத் தொடங்கினான் சாம்ஸன். கல்யாணிடமும் சிந்தனை.

''சார் ஒரு ஐடியா...'' முந்தியது கல்யாண் மூளை.

''நாம அதை எடுத்துக்கிட்டுப் போய் யாருக்கும் தெரி யாம கோவில்ல வைக்கறதுங்கறது நடைமுறையில் சாத்திய மில்லை. ஏன்னா ஒரு சிலை திருட்டைச் சந்திச்ச கோவில்ல பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருக்கும். ஆகையால் சிலையை ஒரு பொது இடத்துல வெச்சுட்டு கலெக்டருக்கு போன் பண்ணி சொல்லிடுவோம் அவர் கைலசிலை கிடைச் சுட்டா உரிய இடத்துக்குப் போயிடாதா!''

''பலே கல்யாண்! நீ சொல்றதுதான் சரி. நாமளும் மாட்டிக்காம சிலையும் போய்ச் சேர அதுதான் சரியான வழி.''

கல்யாணின் யோசனை சாம்சனை மட்டும் நடு முகத்தில் குத்தியது போல் ஆக்கி விட்டிருந்தது. முறைக்க முடியாமல் முறைத்தான். மீனா மகிழ்ச்சியோடு கல்யாண் தோளைப் பற்றினாள்.

''சாம்ஸன் அங்க்கிள்! நீங்கள் ஒண்ணுமே சொல்லாம இருந்தா எப்படி?'' என்றும் கேட்டாள்.

''நான் சொல்ல என்ன இருக்கு? நல்லது நடந்தா சரி'' சுரத்தில்லாத பதில் சாம்ஸனிடம்.

''சார்! சிலையை எங்க பாதுகாப்பா வெச்சுருக்கீங்க. அதைச் சொல்லுங்க...'' திரும்பவும் சாம்சனிடம் வேதாள முயற்சி.

''என்னோட பழத்தோட்ட பங்களாவுல!'' பொத்தாம் பொதுவாக சொன்னார் குப்தா. பழத்தோட்ட பங்களா என்றால் எந்தப் பழத்தோட்ட பங்களா? கொடைக்கானலில் ஒன்று ஏற்காட்டில் ஒன்று. ஏலகிரியில் ஒன்று இதில் எதில்?'' கேள்வி முடியும் முன் டாக்டரின் குறுக்கீடு.

''என்ன குப்தா? ரெஸ்ட்ல இருக்கச் சொன்னா தீவிர டிஸ்கஷன்ல இருக்கற மாதிரி தெரியுதே?...''

டாக்டர் பேசியபடி தனது சோதனையைத் தொடங்க சாம்ஸனுக்கு டாக்டரை அப்படியே தூக்கிப் போட்டு உதைக்க வேண்டும் போலத் தோன்றியது.

கல்யாண் டாக்டருக்கு இடமளித்து சற்று ஒதுங்கிச் சென்றான். பின் தொடர்ந்தாள் மீனா.

''நில்லுங்க'' அந்த மாளிகையின் நடுப்பகுதியில்

அவள் குரலில் ஒரு அம்பின் வேகம் கல்யாண் நின்று திரும்பிப் பார்த்தான்.

''உங்களிடம் ஒரு விஷயம் கேக்கணும்?''

''கேள் மீனா.''

''கல்யாணம் பற்றிப் பேசினாலே உங்ககிட்ட ஒரு சந்தோஷம் மிஸ் ஆகுதே ஏன்?''

கல்யாணிடம் கெட்டியான மௌனம் வெளிப்பட்டது.

''உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா?'' இப்போதும் மௌனத்தின் தொடர்சசி...

''கேக்கறேன் பதில் சொல்லுங்க...''

''உன்னைப் பிடிக்கலைன்னா எனக்கு உலகமே பிடிக்கலைன்னு அர்த்தம்!'' அவனது சுருக்கமான பதிலில் அவளிடம் திக்கு முக்காடல்.

''அப்புறம் ஏன் கல்யாணப் பேச்செடுத்தாலே அசடு வழியறீங்க?''

பதில் சொல்ல முடியாமல் தவித்தான் கல்யாண். எப்படிச் சொல்வது உண்மையை...?

தூத்தேறி...'' காரி உமிழ்ந்தபடி கழுகு போல பார்த் தான் சோமன். அருகில் அவனை விஞ்சும் கடூரத்தோடு சாம்ஸன்.

''கிழவன் பெரிய கொடாக்கண்டனா இருக்கான்னா அதுக்கு மேல நாம் போய் விடாக்கண்டனா மாறணும். அதை விட்டுட்டு இப்படி வந்து அடுத்து என்ன பண்ற துன்னு தெரியலைன்னு புலம்புனா...?''

''இந்த தடவை அந்த சிலை எந்தப் பழத்தோட்டத்துல எங்க இருக்குதுன்னு தெரிஞ்சுக்காம விடப் போறதில்லை

நான். ஆனா சிலை மட்டும் குறியில்லை நமக்கு. தங்கமும் தான். அது எங்க இருக்குதுன்னு தெரியலையே... அப்புறமா கள்ளப் பணம்...''

''சாம்ஸா... ஒரு அளவு வரை பாரு. முடியலைன்னா அந்தக் கிழவனை இங்கே கொண்டு வந்துடு. அவனை வெச்சுபிளாக் மெயில் பண்ணியாவது அவைகளை நாம அடைஞ்சுடலாம்.''

''முட்டாள்தனமான முடிவு. கிழவன் உயிரை விடுவான். பணத்தையோ தங்கத்தையோ நமக்குத் தர மாட்டான்.''

''அப்ப என்ன வழி நீயே சொல்லு?''

''மீனாவை மடக்கி பிளாக்மெயில் பண்ணினா அவன் கொஞ்சம் இறங்கி வரலாம். பெண் பாசம் ஒண்ணுதான் இப்போதைக்கு கிழவனோட பலவீனம்!''

''சபாஷ்! அப்ப அதைச் செய். அடுத்து இங்க அந்த மீனாவோட வாரே...''

இருவரிடமும் ஒரு புதிய முடிவு!

குப்தா குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தார். அருகில் மீனா சோகப்பதுமை போல் அமர்ந்திருந்தாள்.

''தோ பாரும்மா. கல்யாணுக்கும் உனக்கும் கல்யாணத்தைப் பண்ணி வைக்கறது என்னோட பொறுப்பு அந்தக் கவலையை விடு...''

''அப்படின்னா கல்யாணத்தை கன்பார்ம் பண்ணுங்க. அவர் பிடியே கொடுக்கமாட்டேங்கராரு.''

''வரட்டும். இன்னிக்கே முடிவு செய்றேன்.''

அப்போது கல்யாணும் வந்தான்.

''கல்யாண் எங்கே போய்ட்டு வரே?''

''என் வீட்டுக்குச் சார்!''

''வீட்ல யாரெல்லாம் இருக்காங்க?''

''அம்மா. அப்பாவெல்லாம்.''

''அவங்களை என்னை வந்து பார்க்கச் சொல்.''

''எதுக்கு சார்?''

''உனக்கும் மீனாவுக்கும் நிச்சயம் பண்ண!''

''இப்ப என்ன சார் அதுக்கு அவசரம்? சிலைய முதல்ல ஒப்படைப்போம்!''

''மீனாவும் எனக்கொரு தங்கச்சிலைதானே... அவனையும் உரியவன்கிட்ட ஒப்படைக்க வேண்டாமா?''

''முதல்ல அந்தச் சிலை... பிறகுதான் உங்க தங்கச்சிலை.''

''சரி பேச்சு மாற மாட்டியே!''

''என் உயிர் இருக்கறவரை என் பேச்சு மட்டும் மாறாது சார்!''

''எதுக்குப் பெரிய வார்த்தையெல்லாம்!''

கல்யாணும் குப்தாவும் பரிமாறிக் கொள்ளும் கருத்து உள்ளே நுழையும் சாம்ஸன் காதிலும் விழாமல் இல்லை.

''பெரிய வார்த்தை இல்ல சார். அது ஒரு சத்தியமான வார்த்தை சார். சிலை எந்தப் பழத்தோட்டத்துல இருக்கு. அதைச் சொல்லலையே நீங்க?''

''இப்ப சொல்றேன். அப்ப சாம்ஸன் இருந்தான். அதுதான் சொல்லலை!''

''அவர் இருந்தா நமக்கென்ன?''

"சாம்ஸனின் பார்வை பேச்சு எதுவுமே சரியில்லை. அவன் மனம் திருந்தி இருக்கற நபரா தெரியலை. பழி வாங்குறதுக்காகக் கூட இருக்கானோன்னு எனக்குள்ள ஒரு சந்தேகம்!"

குப்தாவின் பதில் சாம்ஸனை ஒரு கவ்வு கவ்வி அப்படியே திரைச்சீலை ஓரமாக ஒளிய வைத்தது.

"குப்தா நீ பெரிய கில்லாடிடா" என்று புலம்பவும் வைத்தது.

சாம்ஸன் ஒளிந்திருப்பது தெரியாமல் குப்தாவும் அந்த ரகசியத்துக்காக உதடுகளைப் பிரித்தார்.

"ஏற்காட்டுல இருக்கற என்னோட கிளியனூர் பழத் தோட்டத்துல ஒரு பிள்ளையார் கோவில் இருக்கு. அந்தப் பிள்ளையார் சிலைக்குக் கீழே ஒரு பெரிய பெட்டி. அந்தப் பெட்டியிலதான் வெச்சுருக்கேன் சந்திரகிரீஸ்வரர் சிலையை..."

* * *

## 23

**சாம்சனின் டைரியிலிருந்து...**

*"குப்தா... உனக்கு கல்யாண் மாப்பிள்ளையா? அது மட்டும் நடக்காது! உன் மகள் வாழாவெட்டி என்பதை மறந்துவிடாதே! உன் உடல் தேறி இருக்கலாம். காலமெல் லாம் நோயாக அமர்ந்து உன் உயிரை உறிஞ்சப் போகிறாள் உன் மகள்!"*

அந்த ரகசியச்செய்தி சாம்ஸனை திக்கமுக்காட வைத்து விட்டது. ஏற்காடு பழத்தோட்டத்திலா இருக்கிறது அந்தச் சிலை? விட்டேனா பார்!

சாம்ஸன் அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கும் கல்யாண் முகத்தில் ஒரு அர்த்தமுள்ள புன்னகை.

மீனா கூட பார்த்தாள்.

"கல்யாண். அந்த சாம்ஸன் அப்பா சொன்னதைக் கேட்டுட்டான் போல இருக்கு."

"தெரியும்."

"தெரிஞ்சுமா சும்மா நிக்கறீங்க? போங்க அவன் எங்க போறான்னு போய்ப் பாருங்க."

"எங்க போவான்? நேரா ஏற்காடு பழத்தோட்டத் துக்குத்தான் போவான். சார் உங்க திருட்டுச்சிலை இன்னும் பத்து மணி நேரத்துல சேலம் கலெக்டர் வசம் போய்ச் சேர்ந்துடும்... அதுக்கு நான் பொறுப்பு. இப்ப கிளம்பறேன்!"

''போ கல்யாண் போ! சாம்ஸன் ஜெயிச்சுடக் கூடாது!''

''எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணுமே...''

''சொல்லு.''

''சந்திரகீரீஸ்வரர் சிலை பிரச்சனை தீர்ந்ததுன்னு வையுங்க. தங்கம் கறுப்புப் பணத்தை என்ன பண்ணப் போறீங்க?''

''அரசாங்கத்துகிட்ட ஒப்படைச்சுடலாம்னு!''

''எப்போ?''

''நான் இப்பவே ரெடி!''

''அப்ப அதுக்கான ஏற்பாட்டையும் பண்ணிடவா?''

''பண்ணு! ஆனா இன்னிக்கு உன் பேச்சு போக்கு எதுவும் எனக்குப் புரியலை. உன்கிட்ட படபடப்பு இல்லை. எப்படி நடக்குமோங்கற பயம் இல்லை. இப்படித்தான் நடக்குங்கற தீர்மானம் இருக்கு.

''ஆமாம் சார்... இனி எதுவும் தப்பா நடக்க வாய்ப்பே இல்லை. நீங்க தங்கத்தையும் கறுப்புப் பணத்தையும் வெச்சிருக்கிற இடத்தை சொல்றீங்களா?''

''இதே ஊர்லதான் அது இருக்கு. அழகர் கோயில் ரோட்ல உள்ள என்னோட தோப்பு வீட்டுல. பெட்ரூம் தரைல உள்ள கார்பெட்டை தூக்கிட்டுப் பார்த்தா அண்டர் கிரவுண்டுக்குப் போற சதுர வழிக்கதவு தெரியும்.''

''போதும் மற்றதை நான் பாத்துக்கறேன்.''

''கல்யாண் உடனேயே அருகிலுள்ள தொலை பேசியை நெருங்கிக் குரலில் சாம்ஸனாக மாறினான். எண்களில் சோமன் நம்பியைப் பிடித்தான்.

"சோமா... ஒரு குட் நியூஸ். குப்தாவோட தங்கமும் கறுப்புப்பணமும் அழகர் கோயில் ரோட்ல உள்ள அவ னோட தோப்பு வீட்ல இருக்கு."

"வெரிகுட் தோப்பு வீட்ல எங்க?"

"பெட்ரூம் தரைல கார்பெட்டைத் தூக்கிட்டுப் பார்த்தா தெரியும்."

"சபாஷ்! மத்ததை நான் பாத்துக்கறேன். ஆமா அந்த சந்திரகிரீஸ்வரர்?"

"அது ஏற்காடு பழத்தோட்டத்துல இருக்காம். அங்கே போய் அதை எடுக்கறது என் பொறுப்பு!"

"நீ தனியா போகாதே... வந்து நம்ப ஆள் ஒருத்தனை கூட்டிக்கிட்டுப் போ!"

"அதுக்கென்ன வந்துடறேன். தோப்பு வீட்டு விஷ யத்தை மறுந்துடாதே!"

தொலைபேசி முடங்கிது. நிமிர்ந்தவன் எதிரே நிலை கொள்ளாத் தவிப்போடு குப்தாவும் மீனாவும்.

"கல்யாண் என்ன இது? சோமனுக்கு எதுக்கு இந்த விஷயத்தைச் சொன்னே. ஏன் சொன்னே?"

"பயப்படாதீங்க சார்! சோமனும், சாம்ஸனும் உங்களை ஒழிக்கிற விஷயத்துல கூட்டாளிகள். உங்க நல்ல காரியங்கள் நடந்து முடியற அதே சமயத்துல கூட்டாளிகள் மாட்டிக் கறதும் நல்லதுதானே?"

"யார்க்கிட்ட மாட்டிக்கறது?"

"எனது ஆட்கள் கிட்ட"

"உன் ஆட்கள்கிட்ட மாட்டி என்ன பிரயோஜனம்? நீ என்ன கோர்ட்டா இல்ல ஜட்ஜா அவங்களைத் தண் டிக்க." கல்யாண் குப்தா கேள்வி முன் மௌனித்தான்.

மீனாவுக்கு அவன் மௌனம் குத்தியது. குடைந்தது.

''கல்யாண் என்மேல் ஆணை! உங்க புதிர் பேச்சை விட்டு நீங்க பதில் சொல்லப் போறீங்களா இல்லியா?'' கல்யாணிடம் மௌனத்தின் நீட்சி.

''சொல்லுங்க கல்யாண்... சொல்லுங்க''. நெருங்கி வந்து சட்டையைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தாள். பாக்கெட்டில் இருந்து ஒரு மாத்திரை ஸ்ட்ரிப் கீழே விழுந்தது.

''என்ன இது? குனிந்து எடுக்க முனைந்த அந்த சந்தர்ப் பத்தில் அவன் மின்னல் வேகத்தில் கிளம்பி விட்டான்.

''இந்த மாத்திரை எதுக்குன்னுதானே கேக்கறே?'' டாக்டரின் கேள்வி. பெரிதாக தலையை அசைத்தாள் மீனா.

''இது கான்ஸர் பேஷண்ட்டுகளோட யூசுக்காக உள்ள மாத்திரை. ஆமா இந்த மாத்திரை உனக்கு ஏது?'' டாக்டரின் பதிலில் ஸ்தம்பித்தாள் மீனா. உள்ளுக்குள் உறுப்புகள் இடம் மாறுவது போல் பிரமை தட்டிப் போனாள்.

''கல்யாண் உனக்குக் கான்சரா?'' மனதுக்குள் அசுர வடிவம் எடுத்தது கேள்வி.

காலடி நிலம் நழுவியது. கண்ணில் இருள் சேர்ந் தது. மனதில் நினைவுகள் வற்றி வார்த்தையில்லாத ஒரு வெறுமை.

''என்னம்மா ஆச்சு? யாருக்குக் கேன்சர்? கமான் டெல் மீ.''

''கல்யாண்கிட்ட இந்த ஸ்ட்ரிப் இருந்தது டாக்டர்.''

''வாட்! கல்யாண் கிட்டையா?'' டாக்டரிடமும் அதிர்ச்சி. ''ஆமா கல்யாண்கிட்ட இந்த மாத்திரை ஸ்ட்ரிப்

இருந்தா அவனுக்குதான் கேன்சர்னு அர்த்தமா? அவங்க அப்பா. அம்மா. அக்கா வேற யாருக்காவதும் இருக்க லாமே!''

மீனாவுக்கு துளி தெம்பு அகப்பட்ட மாதிரி தெரிந்தது.

''டாக்டர் உங்க வாக்கு பொன்னான வாக்கா இருக்கட்டும்.''

''ஒன் மினிட்! அதை பொன்னான வாக்குன்னு உனக்கு கன்பார்ம் பண்றேன்.''

''டாக்டர் உடனேயே தொலைபேசியைத் தாவிப் பிடித்தார். மறுமுனையில் கான்ஸர் இன்ஸ்டிடியூட் கலச லிங்கம் அகப்பட்டார்.

''ஹலோ கலசலிங்கம்! நான் டாக்டர் வெங்கோப ராவ் பேசறேன்.''

''சொல்லு ராவ்.''

''இந்த மதுரைல கான்சர் பேஷண்ட் இருந்தா நிச்சயம் உனக்குத் தெரிஞ்சுருக்கும்னு நான் நம்பறேன்.''

''யெஸ்.''

''அதுல கல்யாண்ணு யாராவது இருக்காங்களான்னு தெரியணுமே.''

''ஏஜ்?''

''ஜஸ்ட் டிவண்ட்டி சிக்ஸ் - இருபத்தியாறு இருக்கலாம்.''

''ஒரு நிமிஷம் டைம் கொடேன் - கம்ப்யூட்டரைப் பார்த்துட்டுச் சொல்றேன்.'' ஒரு நிமிடம் ஓட ஆரம்பித்தது. வினாடி களில் பின்னோக்கம். மீனா விஷத்தை விழுங்கி

விட்டவளைப் போல் தொண்டையில் நிறுத்தியிருந்தாள். டாக்டர் முகத்திலும் காத்திருப்பின் கசகசப்பு.

கலசலிங்கம் நீண்ட தாமதத்துக்குப் பின் சொன்ன பதிலில் நடு முதுகில் ஊசி ஏறியது.

''வெங்கோபா. அந்தக் கல்யாண் இன்னுமா உயிரோட இருக்கான். இன்னேரம் அவன் செத்த இடத்துல புல் முளைச் சிருக்கணுமேப்பா?''

* * *

## 24

சாம்சனின் டைரியிலிருந்து...

*''பழி உணர்ச்சி ஒரு நெருப்பு. அது எரிப்பவரையும் எரிக்கும். அப்போது தெரியும் உனக்கு அதன் கொடுமை என்பார் பாதர். அது நிஜமாகிவிட்டது. பாவத்தின் சம்பளத்தை கர்த்தர் இப்படித் தந்திருக்க வேண்டாம்.''*

ஏற்காட்டின் வளைவான பாதையில் சாம்ஸனின் டாக்ஸியிடம் கொலை வேகம். இருபது கொண்டை ஊசி வளைவுகளையும் இருபது நிமிடத்தில் கடப்பதென்றால் அது லேசுப்பட்ட விஷயமா என்ன?

அருமையான எஸ்டேட். ஆரஞ்சும், கொய்யாவும் அள்ளிக்கொட்டும் பூமி. ஐநூறு ஏக்கர் மொத்தமாக நட்ட-நடுவில் புங்கை மரம் ஒன்று... அதன் கீழ்தான் இருக்கிறது. அந்த பிள்ளையார் கோவில்.

அதோ... அதோ...

''டாக்சிய நிறுத்து. ஏறங்கி என்கூட வா... '' சாம்ஸன் டிரைவருக்குக் கட்டளையிட்டான்.

கோயிலை நோக்கி ஓடினான். பிள்ளையார் தனியாக அமைதியாக காலையில் யாரோ சூட்டிய செம்பருத்திப் பூ மாலையின் வாட்டத்தோடு அமர்ந்திருந்தார். சாம்ஸன் சந்தோஷத்தோடு பிள்ளையாரைத் தொட்டு நகர்த்த கீழே ஒரு பெரிய குழி.

உள்ளே வைக்கோல் போரில் சுற்றிய நிலையில் ஆயிரம் வருஷத்து சந்திரகிரீஸ்வரர் விக்கிரகம் நல்ல ஆழ்ந்த உறக்கத்தில்...

சந்திரகிரீஸ்வரரைத் தொட்டுத் தூக்கினான். பாரம் அமுக்கியது. ஆனாலும் மகிழ்ச்சியில் ஒன்றும் தெரியவில்லை. சிலையோடு திரும்பியபோதுதான் அனைத்தும் தெரியவந்தது. எதிரில் கையில் ரிவால்வருடன் இன்ஸ்பெக்டர் அவருக்குப் பின்னால் ஒவ்வொரு மரத்தின் பின்னாலும் ஒரு போலீஸ்.

கிட்டத்தட்ட சோமனின் நிலையும் சாம்ஸனை ஒத்திருந்தது. படுக்கையறை கார்ப்பெட்டை தொட்டுத் தூக்கி தங்கத்தையும் பணத்தையும் வெளியே எடுத்துக் கொண்டு வந்தபோது மதுரை சி.பி. சி.ஐ.டி. போலீசாரின் வளைப்பில் திக்கு முக்காடிப் போனான் சோமன் நம்பியார்.

எந்தத் தடயமும் விடாமல் கொலை செய்வதிலிருந்து கொள்ளையடிப்பது வரை கைதேர்ந்தவன் இன்று கையும் களவுமாக.

சோமனுக்கு மூச்சு முட்டியது.

எப்படி இப்படி வசமாக மாட்டிக்கொண்டோம் என்றே புரியவில்லை அவனுக்கு.

"மிஸ்டர் குப்தா உங்களைக் கைது செய்யறோம்..."

வாரண்டுடன் எதிரே வந்து நிற்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து மிரண்டு போனார் குப்தா. திணற ஆரம்பித்தார். இந்த வேளை பார்த்து மகள் மீனா கூட அருகில் இல்லையே...

"இன்ஸ்பெக்டர் என்ன இது திடுதிப்புன்னு..."

"திடுதிப்புன்னு இல்லை மிஸ்டர் குப்தா! ரொம்ப அருமையாக திட்டமிட்டு..."

"திட்டமிட்டா."

"ஆமா... ஸ்டேஷனுக்கு வாங்க விளக்கமாய்ச் சொல்றோம்."

''கல்யாண் வராம இங்க இருந்து வரமாட்டேன்! கல்யாண் எங்க போயிட்டே?'' புலம்ப ஆரம்பிக்கிறார்.

''அவர்தானே அரெஸ்ட் பண்ணவே சொன்னவர்.''

''என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்!''

''மிஸ்டர் கல்யாண் எங்க சி.பி.சி.ஐ.டி. பிரிவோட ஸ்பெஷல் ஆபீசர். திருட்டுப் போன சந்திரகிரீஸ்வரர் சிலையை கண்டுபிடிக்க டி.ஜி.பி.யால ஸ்பெஷலா நியமிக்கப்பட்டவர்.

''கல்யாண் போலீஸா நடிச்சு என்னை ஏமாத்திட்டானா? என்னை ஏமாத்தினதைக்கூட தாங்கிக்குவேன். என் மகளை ஏமாத்திட்டானே... அம்மாடி மீனா! மீனா... எங்கம்மா போயிட்டே நீ?''

அரற்றத் தொடங்கினார் குப்தா... குற்றம் குறைகளை சரி செய்துகொண்ட பின்பும் பாவம் தந்த பரிசாக அதைக் கருதி புலம்பினார்.

''ஐய்யோ இப்பொழுது இந்த உயிர் போகாமல் இருந்து படுத்துகிறதே! இப்படி அவஸ்தைப்படத்தான் முன்பெல்லாம் நான் தப்பித்தேனா? என் திருத்தங்கள் என் மகளுக்கு வாழ்வைத் தராதா மீனா! மீனா...''

கான்ஸர் இன்ஸ்டிடியூட்டின் தீவிர சிகிச்சைப் பிரிவு!

கலசலிங்கம் பிடியில் கல்யாண்.

ஆக்ஸிஜன் காற்று அவன் மூக்கில் நுழைந்து உயிர்க் கூட்டைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

கலசலிங்கத்தின் கைபட்டு கத்தரிகள் எது எதையோ வெட்டி எடுத்துக்கொண்டிருக்கின்றன.

வார்டுக்கு வெளியே குட்டி போட்ட பூனை போல்

மீனாவும் அவளுக்குச் சரியாக எஸ். பி. அருண்குமார். டி.ஜி.பி. ரத்னம் என்று போலீஸ் படை.

கான்ஸர் என்பது உறுதிப்பட்ட மறுவினாடியே ஆறு மாதம் கூட உயிரோடு இருக்க முடியாது என்று தெரிந்த அந்த நொடியே ராஜினாமாக் கடிதத்தைக் கொடுக்க நினைத்த கல்யாண் கொடுக்காமல் விட காரணமே குப்தா தான்.

சந்தேக வட்டத்தில் உள்ள அந்தப் பெரிய மனிதரை அணுகி அனைத்தையும் சாதிக்க மிகப்பெரிய உள்ளமும், நேர்மையும் தேவை என்பது டி.ஜி.பி. ரத்னத்தின் கருத்து.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கல்யாண் முன்வந்தான்.

சாகுமுன் நிறைய நல்ல காரியங்களைச் செய்ய கிடைத்த சந்தர்ப்பம் இது என்று டி.ஜி.பி. ரத்னத்திடம் கூறினான். ரத்னமும் சரி என்று அனுப்பி வைத்தார். அதே போல் கோடி ரூபாயுடன் ஓடச் சந்தர்ப்பம் கிடைத்தும் ஓடாமல் திருப்பதியில் சேர்த்தான். படிப்படியாக நல்லது செய்து குப்தா மதிக்கும் நாணயஸ்தனானான். போட்ட திட்டப்படி எல்லாமே நடந்து முடிந்துவிட்டது. சந்திரகிரீஸ்வரர் சிலை பற்றி குப்தா வாயைத் திறக்கும் வரை எல்லாமே நடந்து முடிந்தது. ஒன்று மட்டும் சிக்கிக் கொண்டது.

அந்தச் சிக்கலுக்கு இனனொரு பெயர்தான் மீனா. மீனாவின் காதல் உணர்ச்சியில் மாட்டியும், மாட்டாமலும் காலம் கடத்துவது கல்யாணுக்கு ஒரு சவாலாகவே ஆகி விட்டது.

ஒரு பக்கம் அவளுக்காக அவள் அன்புக்காகக் ஏங்கி னான். மறுபக்கம் ஐயோ! அந்தப் பெண்ணை நிர்க்கதியாய் விட்டுச் செல்லப் போகிறோமே என்று உருகினான்.

மாத்திரையும் மருந்தும் இதுவரை அவனைக் காப்பாற்றிவிட்டன. இனி...?

நடந்து கொண்டிருக்கும் ஆபரேஷன் அவனை இன்னும் சில வருஷங்கள் வாழ வைக்கலாம். எது எப்படி முடியும் என்று தெரியாது.

அங்கே அப்பா வடிவில் ஒரு உயிர் போக ஆசைப் பட்டது. போகவில்லை. இங்கே போக விரும்பவில்லை ஆனால் போய்விடுமோ?

மீனா பதைத்துப் போனாள்.

டி.ஜி.பி. ரத்னம் ஆறுதல் கூறினார்.

''கவலைப்படாதே! கல்யாண் மனசு கல்யாண மனசு. அவன் உயிர் அவனை விட்டு ஓடிப்போகாது. போகச் சொன்னாலும் போகாது. உன் காதல் சக்தி அவனை வாழ வைக்கும். உனக்காக உன் அப்பா செய்த நல்ல காரியங் கள் நிச்சயமாக வாழ வைக்கும்.''

டி.ஜி.பி. ரத்னத்தின் ஆறுதல் பலிக்குமா?

செய்தியறிந்து குப்தா கண்ணீர் வடித்தார்.

போக வேண்டிய நான் போகவில்லை. போகக் கூடாத கல்யாண் போய்விடத் துடிக்கிறான். விதி ஏன் இப்படி கண்ணாமூச்சி விளையாடுகிறது.

அது எப்பொழுதும் எதிர்மறையாகத்தான் செயல் படுமா? அதுதான் அதன் இயல்பா.

எது நிஜம்?